# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 10
குவிப்பு - 08
பக்கங்கள் - 20

விலை ரூபா 25.00
ஓகஸ்ட் - 2007
(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebastian's St., Mannar, Sri Lanka.
Telephone No : 023-2222377/ 060-2233276, Fax No - 023 - 2222377, E-mail - nesanmn@yahoo.com




# மருதமடு மாதாவே!

## எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!

## மடு ஆவணித் திருவிழா

### போர்க்கால சூழ்நிலையிலும் மடு அன்னையைத் தரிசிக்க ஆயிரக்கணக்கான மக்கள் வருகை!

### உயிலங்குளம் நுழைவாயிலினூடாகவே பயணம்
### மடுவீதி திறக்கப்படாததால் மனம் வெதும்பிய பக்தர்கள்







மடுத்திருப்பதியில் ஆவணித்திருவிழா கடந்த ஓகஸ்ட் மாதம் 15ம் திகதி பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் சிறப்பாக நடந்தேறியது. வடபகுதியில் தோன்றியுள்ள இன்றைய பதட்டமான யுத்த சூழ்நிலையிலும் தென்பகுதி சிங்கள மக்கள் பெருமளவில் வருகை தந்திருந்தனர்.




## ஜிம்பிறவுண் அடிகளார்

## காணாமலாக்கப்பட்டு ஓராண்டு நிறைவு!

முன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாக இரண்டு வருடங்கள் கடமையாற்றி யாழ். அல்லைப்பிட்டி பங்கின் பங்குத்தந்தையாகப் பணிப் பொறுப்பேற்ற சில நாட்களில் (அதாவது ஆவணி மாதம் 20ந் திகதி) அருட்தந்தை அவர்கள் காணாமலாக்கப்பட்டார். ஜிம்பிறவுண் அடிகளார் காணாமல்போன ஓராண்டு நிறைவில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் சிறப்பு வேண்டுதல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## "ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாமையே இன்றைய இன நெருக்கடிக்குக் காரணம்"

– மன்னாரில் அநுராதபுர ஆயர் கருத்து –



# மன்னா

## சொல்லாத சோகங்கள்

### அகதிகள் என்பதன் அர்த்தம் என்ன?

யூலை 28ம் நாள் உலக அகதிகள் தினம். 'அகதி' என்ற வார்த்தைக்கு 'போக்கற்றவர்' 'கதியற்றவர்' என்று அகராதி ஒன்று அர்த்தம் கற்பிக்கின்றது.

அரசியல், சமூக, பொருளாதார செல்வாக்கு மிக்க மாந்தரெல்லாம் அடுத்தவேளை உணவிற்கு பிறரைச் சாரவேண்டிய நிலையைத்தான் அகதி என்கின்றோம்.

1951ஆம் ஆண்டு அகதிகள் நிலை குறித்து ஐக்கிய நாடுகள் சபை, 'அகதிகள்' யார்? என ஒரு வரையறையை வெளியிட்டது. "இனம், மதம், தேசியம் காரணமாக இழைக்கப்படும் சித்திரவதை, அடிமைத்தனம், ஆகியவற்றால் ஏற்படும் பயம் காரணமாக பிறந்த நாட்டின் பாதுகாப்பைப் புறக்கணித்து இடம்பெயர்ந்து வெளியேறியவர்களே அகதிகள்" என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று உலகெங்கும் ஐந்து கோடி மக்கள் புலம்பெயர்ந்து அகதி வாழ்விற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என ஓர் ஆய்வு தெரிவிக்கின்றது. அதில் 80 சதவிகிதம் பெண்கள் என்பது வேதனையிலும் கொடிய வேதனை.

### சொந்த வீடுபோல் வருமா?

ஒருவர் தனது சொந்த வீட்டிலிருந்து வெளியேறும் சூழ்நிலைக்கு உள்ளாக்கப்படுவது எத்துணை வேதனையானது, கொடூரமானது என்பதை அனுபவித்தவர்கள்தான் உணர்வார்கள்.

"கோட்டைகள், கும்மாளங்கள் நடுவே நாம் சுற்றித் திரிந்தாலும் வீடுபோல் ஓரிடம் வருவதில்லை"

"ஒருவன் உலகம் முழுவதும் சுற்றலாம், புதிய நண்பர்களை, புதிய சந்தோசங்களைப் பெறலாம். ஆனால் வீடுபோல் ஓரிடமில்லை" இவையெல்லாம் வீட்டின் அருமையை உணர்ந்து உரைக்கப்பட்ட வார்த்தைகள்.

"வீட்டுச் சண்டைகள் தெருவுக்கு வரவேண்டாம். ஏற்றுக்கொள்கிறோம். - ஆனால் தெருக்களே எங்கள் வீடுகளாகும்போது?" எனக் கேட்கின்றார் கவிஞர் வைரமுத்து. தொண்ணூறுகளில் வடபுலத்திலிருந்து முஸ்லிம் சகோதரர்கள் வெளியேற்றப்பட்ட வேளையில் அகதி முகாமில் இருந்துகொண்டு எஸ். எச். நிகமத் என்ற கவிஞர் பாடும் வரிகள் எம் நெஞ்சை நெருடுகின்றன.

"எங்கள் ஊரில் ... எங்கள் ஊரில் ...
எங்கள் சொந்த ஊரில் ...
நாம் பட்டினியாய்க் கிடந்தாலும்
பரவசமாய்க் கிடப்போம் -
வா ஊருக்குப் போவோம்!"

### சொந்த மண்ணிலேயே அகதிகளா?


சொந்த மண்ணிலேயே அகதிகளாகிய ... இல்லை அகதிகளாக்கப்பட்ட மக்களின் சோகக் கதைகள் தொடர்புசாதனங்களில் நாளாந்தம் வெளிவந்து கொண்டே இருக்கின்றன.

சிறுகச் சிறுகச் சேமித்துக் கட்டிய வீடு வாசல்கள், பொருள் பண்டங்களின் இழப்பு ஒருபுறம்., மழையிலும் குளிரிலும் நுளம்புகள், எறும்புகள், தவளைகள் மத்தியில் நிம்மதியற்ற வாழ்வு மறுபுறம். இன்னும் குழந்தைகளின் கல்வி சீரழிந்த நிலை, ஒழுக்கச் சீர்கேடுகள் மலிந்த சூழ்நிலை, சொந்த வீட்டைவிட்டு வந்த ஏக்கம், அயலவர்கள் அகதி என்று அழைக்கும்போது ஆழ்மனத்தில் ஏற்படும் ஆறாத வேதனை ... என்று அகதிகளின் அவலங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். சொல்லாத சோகங்களாக இம்மக்களின் மௌனக் கதறல்கள் தொடர்கின்றன.

### யுத்தத்தின் சத்தங்கள் ஓய்வதெப்போது?

அலையடிக்கும் அகதிகள் வாழ்வு கரைசேர வேண்டுமானால் இந்தப் பொல்லாத சண்டை இல்லாது ஒழிய வேண்டும். யுத்தத்தின் உடனடி விளைவுகளில் ஒன்று மக்கள் அகதிகளாக்கப்படும் அவலம். எனவே அகதி வாழ்வு அகல வேண்டுமானால் இந்தக் கொடூரமான யுத்தம் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும். நாட்டில் அமைதி நிரந்தரமாக வேண்டும். அது எப்போது நடக்கும்? நடக்கும் என்ற நம்பிக்கைகளுடன்,

*மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,*
*அன்புடன் - அருட்பணியாளர் நேசன்,*
*மன்னா பதிப்பாசிரியர்.*



# வாசகர் எண்ணங்கள்



### உன் சேவை நிலைக்க வேண்டும் ......!

அன்பான மன்னாவே,
திடுக்கிடும் மக்கள் நடுவில் திடீரெனத் தோன்றி
மக்களின் அவல நிலை நீக்கி
எட்டுத் திக்கிலும் மணம் பரப்பி – எம்
இதயங்களைக் கனிய வைக்கின்றாய்!
நல்ல நல்ல தலைப்புக்கேற்ப வார்த்தைகளையும்
உண்மையான செய்திகளையும் வழங்கி
அறிவின் இருப்பிடமாய் விளங்குகின்றாய்.
அன்புள்ளம் கொண்ட மன்னாவே,
உன் சேவை நிலைக்க நான் வாழ்த்துகின்றேன்



*செ. நிலோசியன், சாளம்பன், ஆட்காட்டிவெளி.*

### தினம் எம்மிடம் பறந்து வருகிறாய்

மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு
மாதம் தவறாது எம் வீட்டுக் கதவுகளைத் தட்டும் மன்னாவே
சிறுவர் தொடக்கம் பெரியவர் வரை
ஆழ்ந்து சிந்திக்க வைக்கின்றாய்.
வாழ்க நீ வளமுடன்!
வெளிநாட்டு உள்நாட்டு நபர்களுக்கு
செய்திக் கொத்துக்களை ஏந்திச் செல்கின்றாய்.
உனது சேவை நெடுங்காலம் தொடர
எம் போன்ற வாசகர்களின் வாழ்த்துக்களும்
ஆசிகளும் உரித்தாகுக.



*எஸ். மேகலா, இலுப்பைக்குளம்*

### மன்னாரில் உதித்த மன்னாவே!

மக்களின் இதயத்தை கொள்ளைகொண்ட மன்னாவே,
உன் பாரிய பணி கண்டு மலைக்கின்றோம்.
நல்ல நல்ல செய்திகளைத் தந்து
எம் உறவுப் பாலங்களுக்கு
உறவாக வரும் எம் மன்னாவே,
உன் சேவை இனிமையிலும் இனிமை.
உன் பணி மலரைப்போல விரிய
என் வாழ்த்துக்களையும்
நன்றிகளையும் தெரிவிக்கின்றேன்.



*தே. நிதர்ஷினி, கீரி, மன்னார்.*

### நீ வருவாய் என...

உன் வரவுக்காய் மாதம் தோறும்
காத்திருக்கும் அத்தனை
வாசகர்களின் இதயங்களையும்
ஈர்த்துக்கொள்கிறாய்.
உன்னைப் பார்க்காமல்
நீ வரும் வரை நான் வாடுகின்றேன்.
குறிப்பாக இளைஞர் பொழிவு
இதயத்திற்கு இதமாக உள்ளது.
தொடர்ந்து அத்தனை அம்சங்களும்
நிறைவான செய்திகளாக உள்ளன.
தொடர்ந்து நீ சிறப்புற்று வளர
எமது வாழ்த்துக்களும் ஆசிகளும்.



செ. மேகலா, இலுப்பைக்குளம்.

# கலங்கிய மனங்களில் கசியும் நினைவுகள்

**ஜிம்பிறவுண் அடிகள் காணாமலாக்கப்பட்ட முதலாம் ஆண்டு நினைவுகள்**

## நெஞ்சம் மறப்பதில்லை! அதன் நினைவுகள் இழப்பதில்லை!

ஒரு மென்மையான இதயத்தோடு, கருணை, தியாகம், நம்பிக்கை, நேர்மை போன்ற பண்புகளோடு வாழ்ந்தவர் ஜிம்பிறவுண் அடிகள். இலட்சிய ஈடுபாட்டுடனும் மன்னிக்கும் மனத்தோடும் வாழ்ந்தவர். ஆன்மீகப் புரட்சிக்கான சிந்தனையும், கனிவான பார்வையும் கொண்டவர். இவருடைய பெயர் ஒரு ஆங்கிலேயருடைய பெயராக இருந்தபடியால் இவர் புதிதாக மன்னார் பங்கிற்கு வந்தபொழுது சிலர், "உங்கள் பெயர் வித்தியாசமாக இருக்கிறதே?" எனக் கேட்டனர். அதற்கு அவர் வேடிக்கையாக, "நான் அமெரிக்காவில்தான் பிறந்தேன்" என்று கூறினார். இதை ஒருசிலர் நம்பிவிட்டதும் உண்டு. இப்படியாக மன்னாருக்கு வந்தவுடனேயே நகைச்சுவையாகப் பேசி எல்லோரின் உள்ளத்தையும் கொள்ளைகொண்ட எம் அன்புச் சகோதரனே.... ஜிம்.... நீர் எங்கே மறைக்கப்பட்டிருக்கின்றீர்?

நாட்கள் வாரங்களாகி, மாதங்களாகி, ஒரு வருடமும் ஆகிவிட்டதே! ஏங்கும் எம் நெஞ்சத்திற்கும் துளியாய்ச் சிந்தும் கண்ணீருக்கும் இன்னும் பதில் கிடைக்கவில்லையே!

இறைவன் தனது வலக்கரத்தால் ஊழியத்திற்கு உம்மைத் தெரிந்தெடுத்தாரே, அவரது கைவன்மையே உம்மைக் காக்க வேண்டும் என்று வேண்டினோமே, முடிவு கிடைக்கவில்லையே! எங்கள் இதயமோ வெம்பி வெடிக்கிறது. யார் அறிவார்?

உள்ளார்ந்த அர்ப்பணிப்போடு, இறைவனுக்கு வாக்குறுதி கொடுத்து ஆர்வத்தோடு ஆரம்பித்த உமது குருத்துவப் பயணம் இவ்வளவு விரைவில் முடிந்துவிட்டதே! உமக்குத் தரப்பட்ட பணியை இளமைத் துடிப்போடும், பரபரப்போடும் விரைவாய்ச் செய்து முடித்துவிட்டு போதுமென்றா ஓய்வெடுக்க மறைந்திருக்கின்றீர்?

உம்மை மகன் என்பதா? சகோதரன் என்பதா? நண்பன் என்பதா? தந்தை என்பதா? எல்லா நிலைகளிலும் எல்லோருக்கும் உம்மைப் பகிர்ந்தளித்த உம் பணி வாழ்வை எம் வார்த்தைகளால் வடிக்கவே முடியாது. இரண்டு வருடங்கள் எம்மத்தியில் நீர் ஒரு இறைவாக்கினராகவே செயலாற்றி இருக்கின்றீர்.

அன்று மன்னார் பேராலய மறையாசிரியர்கள் கினிதும என்ற கல்வாரித் தலத்திற்குப் பயணமானபோது காலி மாவட்டத்தில் இரவு தங்குவதற்கு சௌகரியமான இடத்தைத் தயார் செய்து தந்துவிட்டு ஒரு காவலாளியைப்போல் அன்றிரவு முழுவதும் கரடுமுரடான நிலத்தில், பனிப்படலத்திற்குள், வெளி முற்றத்தில் விழித்திருந்து எம்மைக் காவல் காத்தீரே!

ஒவ்வொரு மனிதரையும் அலட்சியம் செய்யாது மதித்து செயற்பட்டீரே! மனத்துயர் உற்றோர், வறுமையுற்றோர், ஆன்மீகத் தாகம் உடையவர்கள் போன்றோரைத் தேடிச் சென்றீரே! நீர் பாதம் பதிக்காத இல்லங்கள் இல்லையே! சுனாமியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நல்ல தந்தையாக இருந்து பராமரித்து ஆதரித்தீரே! உம்மை மறக்கத்தான் முடியுமா? மறைக்கத்தான் முடியுமா? பகலில்கூட நீர் ஓய்ந்திருப்பதில்லையே, இரவென்று ஒன்று இல்லாவிட்டால் அதுவும் உமக்கு பணி நேரமாகவே மாறியிருக்கும்.

எத்தனையோ இடர்கள் மத்தியிலும் பொதுநிலைப் பணியாளர்களைச் சோர்ந்து போகவிடாமல் ஊக்கப்படுத்தி, உமது பணியைச் சாட்சியமாக வாழ்ந்தீர். இறுதியில் "நான் விட்டுச்சென்ற எனது நிழற் படத்தின் நினைவோடு இருங்கள்" என்று மறைந்திருக்கின்றீரோ?

எமது குருக்கள் குழுமமாக ஒன்றுகூடும் வேளைகளில் அந்தக் குழுமத்திற்குள் உம்மைத் தேடுகிறோமே. உமது சக பணியாளராகிய அருட்தந்தை சுரேஸ் அடிகளாரைக் காணும்போது எமது மௌனப் பார்வையால் எம் நெஞ்சத்தை வருடும் உம் நினைவலைகளின் சோகத்தை வெளிக்காட்டுகிறோம். வாய் திறந்து எமது உள்ளத்தில் உள்ளதை வார்த்தையில் கொட்டிவிட்டால் எங்கே சுரேஸ் அடிகளாரும் இடிந்து கலங்கி விடுவாரோ என்ற எண்ணம். ஒரு வருடமாக ஊமைகளாக, நீர் மறைக்கப்பட்ட துயரச் செய்தியை சுமந்து திரிகின்றோம். இறைவா எம் உள்ளங்களுக்கு ஆறுதலின் உண்மைச் செய்தியை விரைவில் தருவீராக! -

*- புவனேஸ், மறைக்கல்வி நிலையம், மன்னார்*



## தொடர்ந்து தேடுகின்றோம் .....!

**திருமதி. த. டக்ஷினி,** கற்கடந்தகுளம், முருங்கன்

அல்லை வாழ் மக்களின்
அல்லல் நீங்க அன்புடன் சென்று
அயராமல் பணி செய்த – எம்
அன்புத் தந்தை ஜிம்பிறவுண் அடிகளாரே!

ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறவில்லை எம் உள்ளத்தின் ரணங்கள்!

இறை பணிக்காய் சென்ற உம்மை
இழந்த செய்தி இடியாக வந்ததுவே!
இதயங்கள் அதிர்ந்தனவே!

இடர்வரும் எனத்தெரிந்தும்
இறை சித்தம் நிறைவேற்றிடச் சென்றீரோ?

பணி செய்து பக்குவமாய் வருவீரென
ஆயர் இல்லம் ஆர்வமுடன் காத்திருக்க
பதற்றமான செய்தியல்லோ
படாரென வந்ததுவே!

எது என்ன ஆனபோதும் - நீர்
செய்துவிட்டுப்போன அன்புப் பணிகள்
எம்மைவிட்டு அகலாது தந்தையே!
எமது உளம் உள்ளவரை மறவோம்.

கண்கள் குளமாக கடவுளை வேண்டி,
கல்லான இதயங்கள் மனம்மாற
கண்ணீர்ப் பூக்களை
இறைபதம் சமர்ப்பிக்கிறோம்.

### சமாதானத்திற்காகச் செபிக்க வருகை தந்திருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில்

# சிறப்பாக நடந்தேறிய மடு ஆவணித் திருவிழா

## தென்பகுதி சிங்கள மக்கள் பெருமளவில் வருகை! முப்பதாயிரத்திற்கும் அதிகமான மக்கள் ஒன்றுகூடினர்!

மடுத்திருப்பதியின் ஆவணித்திருவிழா கடந்த ஓகஸ்ட் 15ம் திகதி பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் சிறப்பாக நடந்தேறியது. வடபகுதியில் தோன்றியுள்ள இன்றைய பதட்டமான யுத்த சூழ்நிலையிலும் தென்பகுதி சிங்கள மக்கள் பெருமளவில் இவ்விழாவிற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். முப்பதாயிரத்திற்கும் அதிகமான மக்கள் மடு அன்னையைத் தரிசித்து ஆசிபெறவும் நாட்டின் சமாதானத்திற்காகச் செபிக்கவும் மடுவில் ஒன்றுகூடியிருந்தனர்.

மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தலைமையில் இடம்பெற்ற இத்திருவிழாவில் அநுராதபுர ஆயர் மேதகு நோபட் அந்றாடி ஆண்டகை, இரத்தினபுரி ஆயர் மேதகு கறல்ட் அன்ரனி ஆண்டகை ஆகியோரும் பெருந்தொகையான குருக்கள் துறவியரும் இறைமக்களும் கலந்துகொண்டனர்.

தமிழிலும் சிங்களத்திலும் நவநாள் மறையுரைகள் இடம்பெற்றன. வழமைபோன்று திருவிழாவிற்கு முதல்நாள் நற்கருணை ஆராதனையும் அடுத்தநாள் திருவிழாத்திருப்பலியும் திருச்சுரூபப் பவனியும் அன்னையின் திருச்சுரூப ஆசீரும் இடம்பெற்றது.

திருவிழாவிற்கு முன்னர் அறிவிக்கப்பட்டபடி மடுவீதியைத் திறக்க இராணுவத்தினர் மறுத்தபடியால் உயிலங்குளப் பாதை வழியாகவே மடுவிற்குச் செல்ல பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதனால் போக்குவரத்தில் சில சிரமங்களை மக்கள் எதிர்கொள்ளவேண்டி இருந்தது. எதிர்பார்த்தபடி இராணுவச் சோதனைச் சாவடிகளிலும் விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடிகளிலும் ஆட்கள், பொதிகள், வாகனங்கள் என்பன சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

## மடு வீதி திறக்கப்படாததால் மனம் வெதும்பிய நிலையில் பக்தர்கள்

மடு அன்னையின் திருவிழாவிற்காக மடு மாதா கோவிலுக்குச் செல்லும் மடு வீதி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்ட இனிப்பான செய்தி கேட்டு மனம் மகிழ்ந்திருந்த வேளையில், மடுவீதி திறக்கப்படமாட்டாது என்ற பின்னைய கசப்பான செய்தி கேட்டு மனம் புழுங்கிப் போனோம் என மடு அன்னையின் திருவிழாவிற்கு தென்பகுதியில் இருந்தும் வடபகுதியில் இருந்தும் வந்த பக்தர்கள் தெரிவித்தனர்.

மடுக்கோவில் வீதி மூடப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகிறது. இந்த நிலையில் இவ்வருட மடுப்பெருவிழாவிற்காக மடு வீதி திறக்கப்பட இருக்கிறது என்ற இனிப்பான செய்தி கேட்டதும் இலங்கையில் உள்ள மடு அன்னையின் பக்தர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாகத் தெரிவித்தனர்.

இதன் காரணமாக தென்பகுதி மற்றும் வடபகுதி மக்கள் குடும்பத்துடன் இவ்வாலயம் வந்து அன்னையைத் தரிசித்து சமாதானத்திற்காகச் செபிக்க எண்ணி இருந்ததாகவும் ஆனால் இறுதி நேரத்தில் பாதை திறக்கப்படமாட்டாது என்ற செய்தி கேட்டு மனம் புழுங்கிப்போனதாகவும் கவலை தெரிவித்தனர்.

தங்கள் பகுதிகளில் இருந்து பல குடும்பங்கள் மடுத்திருப்பதிக்கு வர இருந்தபோதும் இறுதிநேர அச்சம் காரணமாகச் சிலர் தங்கள் பயணத்தை நிறுத்திக்கொண்டனர் எனவும் தெரிவித்தனர்.

மனிதனால் இனிமேல் சமாதானத்தைக் கொண்டுவர முடியாது. மடு அன்னையால்தான் சமாதானத்தைக் கொண்டுவர முடியும் என அம்மக்களில் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

## அநுராதபுர ஆயர், குருக்கள் மன்னாருக்கு நல்லெண்ண விஜயம்



அநுராதபுர மறைமாவட்டத்தில் இருந்து ஆயர் குருக்கள் அடங்கிய ஒரு தூதுக்குழுவினர் அண்மையில் நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு மன்னாருக்கு வருகை தந்திருந்தனர். மன்னாரில் உள்ள இன்றைய சமூக, அரசியல், பொருளாதார, யுத்த நிலைகளை நேரடியாகப் பார்வையிடவும் திருச்சபைத் தலைவர்கள் மற்றும் மக்களின் உணர்வுகளை, சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ளவுமே இந்த விஜயத்தைத் தாம் மேற்கொண்டதாக அநுராதபுர ஆயர் மேதகு நோபேட் அந்றாடி அவர்கள் மன்னாவுக்குத் தெரிவித்தார்.

மன்னார் ஆயர் இல்லத்தில் மன்னார் மறைமாவட்டக் குருக்களைச் சந்தித்து இக்குழுவினர் கலந்துரையாடினர். இக்கலந்துரையாடலின்போது இரண்டு மறைமாவட்டக் குருக்களும் பல்வேறு கருத்துக்களைப் பரிமாறினர். மன்னாரின் இன்றைய நிலவரத்தை கேட்டறிந்த தூதுக்குழுவினர் சமாதானத்தை ஊக்குவிக்க எதிர்காலத்தில் என்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் கருத்துக்களைப் பரிமாறினர். மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் இங்கு கருத்துத் தெரிவிக்கையில், மன்னாரில் இருந்து அநுராதபுரத்திற்கு அனுப்பப்படும் நோயாளிகள் மற்றும் சிறைக்கைதிகளுக்கு அநுராதபுரக் குருக்கள் செய்யும் உதவிகளுக்காக நன்றி தெரிவித்தார்.

## ஏ. பிலிப் அடிகளாரின் 'திருச்செபமாலை' இசை நாடா

திருவுளப் பணியாளர் சபையைச் சேர்ந்த ஏ. பிலிப் அடிகளார் திருச்செபமாலை என்ற இசைநாடாவையும் இறுவெட்டையும் அண்மையில் வெளியிட்டுள்ளார்.

இசையமைப்பாளர் திரு. ஏ. மகேந்திரனின் உதவியுடன் வெளியிடப்பட்டுள்ள இந்த திருச்செபமாலை இசைநாடாவானது குடும்ப செபமாலையைச் செபிக்கும்போது கேட்டுக்கொண்டே பாடிச் செபிக்கச் சிறந்ததாகும். பிலிப் அடிகளாரின் இந்த நல் முயற்சிக்கு மன்னாவின் வாழ்த்துக்கள்!

## ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாமையே இன்றைய இன நெருக்கடிக்குக் காரணம்

### மன்னாரில் அநுராதபுர ஆயர் கருத்து



இன்றைய இனநெருக்கடிக்கு அடிப்படைக் காரணம் ஒருவர் ஒருவரைப் புரிந்துகொள்ளாமையே ஆகும். இந்த நிலைமைக்கு தொடர்புசாதனங்களும் ஒரு காரணமாகும் என அண்மையில் மன்னாருக்கு வருகை தந்த அநுராதபுர ஆயர் மேதகு நோபேட் அந்றாடி ஆண்டகை அவர்கள் தெரிவித்தார்.

இன்று தொடர்புசாதனங்கள் உண்மையை எடுத்துச் சொல்வதில்லை. இதனால் தமிழ் பிரதேசங்களில் என்ன நடக்கிறது என்பதை சிங்கள மக்களும், சிங்கள மக்களின் உணர்வுகள் என்ன என்பதைத் தமிழ் மக்களும் புரிந்துகொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் இனநெருக்கடிக்கான தீர்வு என்பது தூரத்தில் இருக்கிறது என அவர் மேலும் கூறினார்.

## உலகத் திருச்சபையின் சம்மேளனப் பிரதிநிதிகள் மன்னார் வருகை





உரையாடல் அருட்பணி மையத்தின் இயக்குனர் அருட்பணியாளர் பெனோ அலெக்ஸாண்டர் சில்வா அவர்கள் இக்கலந்துரையாடலை ஒழுங்கு செய்திருந்தார்.

உலகத் திருச்சபையின் சம்மேளனப் பிரதிநிதிகள் சிலர் அண்மையில் மன்னாருக்கு விஜயம் செய்தனர். மன்னாரில் உள்ள பல்வேறு தரப்பினரோடு இவர்கள் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். நாட்டின் இன்றைய அமைதியற்ற சூழ்நிலையில் சமாதானத்தை ஏற்படுத்த மதங்கள் எவ்வாறு பங்களிப்பை ஆற்றமுடியும் என்பதைக் குறித்து மக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதே இவர்களுடைய வருகையின் நோக்கமாக இருந்தது.

கடந்த 06.08.2007அன்று மன்னார் புனித செபஸ்தியார் பேராலயக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக்குழுவினருடனான சந்திப்பின்போது குருக்கள், துறவியர், பொதுநிலைப் பணியாளர்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். இதில் பல்சமயப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். மன்னார் உப்புக்குளம் இந்து ஆலயக் குருக்கள் சர்மா அவர்களும் மன்னார் மூர்வீதி, பள்ளிவாசல் மௌலபி காசிம் அவர்களும் இக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இக்கலந்துரையாடலை மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணியாளர் விக்ரர் சோசை அவர்கள் நெறிப்படுத்தினார். மன்னார் மறைமாவட்ட சமயங்களுக்கு இடையிலான

## தமிழ் மாணவன் கடலுக்குப் பலி

கடந்த யூலையில் லண்டன் - வோல்சிங்கம் மரியன்னைத் திருத்தலத்திற்கு யாத்திரை சென்ற தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த இளம் மாணவன் ஒருவன் கடல் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தான்.

வேல்ஸ் பகுதிக்கு அருகில் உள்ள கால்வாய் ஒன்றில் அவனும் அவனுடைய 11 வயது நண்பனும் நீந்தி விளையாடிக்கொண்டிருந்துள்ளனர். திடீரென அலைகளுக்குள் சிக்கிவிட்ட அவர்களைக் கண்ட சிலர் பெரும்பாடுபட்டு சிறிய பையனைக் காப்பாற்றிவிட்டனர். பெரியவனை அலை அடித்துச் சென்றுவிட்டது. அவனைக் காப்பாற்ற காவல் துறையினரும் கரையோரப் படையினரும் பெருமுயற்சி எடுத்தனர். கடைசியில் ஒரு மைல் தூரத்தில் அவனைக் கண்டுபிடித்து மீட்டு மருத்துவ மனையில் சேர்த்தனர். ஆனால் அவனை உயிரோடு காப்பாற்ற அவர்களால் முடியவில்லை.

## வத்திக்கானின் குடித்தொகை என்ன தெரியுமா?

வத்திக்கான் நகரில் 557 மக்கள் வசிக்கிறார்கள். இவர்களின் 246பேர் மட்டும் குடியுரிமை பெற்றவர்கள். மற்றவர்கள் பணிக்காக அங்கு தங்கி இருக்கிறார்கள் என அண்மையில் வெளியிடப்பட்ட குடிக்கணக்குத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வத்திக்கானின் மொத்த குடிமக்களில் 293பேர் பாப்பரசரின் பணித்தளங்களில் பணியாற்றுவோர். கர்தினால்மார் 58 பேர். பாப்பரசரின் விசேட படையான சுவிஸ் காவலர்கள் 101பேர். குருக்கள் 62பேர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வத்திக்கானின் புதிய இணையத் தளம்!

வத்திக்கான் நாடு **w.w.w. vatican stateva** என்ற புதிய இணையத்தளத்தைத் தொடங்கியுள்ளது. யூலை 19 முதல் செயல்படத் தொடங்கியுள்ள இப்புதிய இணையத்தளப் பக்கமானது தெலகாம் என்ற இத்தாலிய தொலைபேசி அமைப்பின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்தாலி, ஆங்கிலம், பிரெஞ்ச், ஸ்பானியம், ஜெர்மனியம் ஆகிய ஐந்து மொழிகளில் திறக்கப்பட்டுள்ள இப்பக்கம், வத்திக்கான் நாடும் அதன் நிர்வாகமும் அதன் பணிகள் அதன் பிற நிறுவனங்கள், பட விளக்கங்களுடன்கூடிய முக்கிய நினைவுச் சின்னங்கள், கடைகள் பற்றிய விவரங்கள், வத்திக்கான் தோட்டத்தைக் கொண்ட புகைப்படம் போன்றவைகளைக் கொண்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இயங்கும் இணையதளப் பக்கம் திருத்தந்தையர்கள், திருப்பீடம் போன்ற செய்திகளைக் கொண்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## வாகன ஓட்டுனர்களுக்கான திருச்சபையின் பத்துக் கட்டளைகள்

1. கொலை செய்யாதீர்கள்.
2. சாலையை மக்களுக்கிடையேயான தொடர்பு சாதனமாக நோக்குங்கள்.
3. மரியாதை, நேர்மை, விவேகம் ஆகியவை எதிர்பாராத நிகழ்வுகளைக் கையாள உங்களுக்கு உதவும்.
4. பிறரன்புடன் நடந்துகொண்டு தேவையில் இருக்கும் அயலாருக்கு, குறிப்பாக விபத்துக்களில் பலியானவர்களுக்கு உதவுங்கள்.
5. வாகனங்கள் உங்களது அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் வெளிப்படுத்துவதற்கும் பாவம் செய்வதற்கான தருணமாகவும் அமையக் கூடாது.
6. வாகனம் ஓட்டுவதற்குத் தகுதியற்ற நிலையிலுள்ள இளையோரை அதை ஓட்ட வேண்டாமென அன்போடு எடுத்துச் சொல்லி அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளச் செய்யுங்கள்.
7. விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு அளியுங்கள்.
8. விபத்து ஏற்படக் காரணமான வாகன ஓட்டிகளும் விபத்தால் பாதிக்கப்பட்டவர்களும் மன்னிப்பு என்ற விடுதலை அளிக்கும் அனுபவத்தைப் பெறுவதற்கு உதவியாக சரியான நேரத்தில் அவர்களை ஒன்று கூட்டுங்கள்.
9. சாலைகளில் நலிந்தவர்களுக்குப் பாதுகாப்பு அளியுங்கள்.
10. மற்றவர்களிடம் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுமென்பதை உணர்ந்து கொள்வீர்களாக.

# மன்னார் மறைமாவட்ட செய்திகள்

## மன்னாரில் மூத்த பிரஜைகளுக்கான ஓய்வு மையம்

### அருட்பணியாளர் ஸ்ரனி அன்ரனியின் முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ளது

*மூத்த பிரஜைகளுக்கான ஓய்வு மையம் ஒன்று மன்னார் ஆஸ்பத்திரி வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தின் திறப்புவிழா கடந்த 26.06.2007 செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. இவ்விழாவிற்கு திரு. லெஸ்லி யேசுராஜன் (IOM, "புலம்பெயர்ந்தோர்க்கான சர்வதேச அமைப்பு" மன்னார் - வவுனியா கிளைகளின் பணிப்பாளர், பிரதம விருந்தினராக வருகை தந்திருந்தார்.*



பிரதம விருந்தினர் அவர்கள் நாடாவை வெட்டி புதிய ஓய்வு மையத்தைத் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து ஒளி ஏற்றப்பட்டு அலுவலகத்தின் முதல் பெயர் பதிவுசெய்யப்பட்டது. இதன் பின்பு இறைவணக்கத்துடன் விழா ஆரம்பமாகியது. சர்வமத வழிபாடும் வாழ்த்தும் இடம்பெற்றது.

இந்த மையத்தின் தலைவரும், இணைப்பாளருமான அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி அவர்கள் வருகை தந்திருந்த எல்லோரையும் வரவேற்று இம்மையம் உருவாக இருந்த சந்தர்ப்பங்களை விளக்கி உரையாற்றினார்.

தொடர்ந்து இவ் ஓய்வு மையத்தின் நோக்கம் பற்றியும், தேவைகள் பற்றியும் திருவாளர் ஜே. பெஞ்சமின் (செயலாளர்) அவர்கள் தெளிவாகவும், விரிவாகவும் எடுத்தியம்பினார்.

பிள்ளைகளாலும் அயலவர்களாலும் கைவிடப்பட்டு மனமுடைந்த நிலையில் வாழுகின்ற முதியவர்கள் இந்த இல்லத்தைப் பாவித்து தங்கள் மன உளைச்சல்களைத் தீர்க்க, மகிழ்ச்சியான வாழ்வை வாழ்வதற்கு உதவுமுகமாக ஏற்படுத்தப்பட்டதுதான் இந்த ஓய்வுமையம் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையத்தைப் பராமரிப்பதற்கும் இந் நிலையத்தில் பணியாற்றுவதற்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கும், தண்ணீர், மின்சாரம் போன்றவற்றின் கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கும் பண உதவி தேவைப் படுகின்றது என்று கூறினார்.

அத்தோடு மனம் உடைந்து வருபவர்களுக்கு மகிழ்ச்சியான வாழ்வு கொடுக்க, அறிவு சார்ந்தவர்களின் ஆலோசனைகளும் தேவை என்று கூறினார்.

தொடர்ந்து இளைப்பாறிய தபாலதிபர் திரு. சிறில் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். பின்னர் பிரதம விருந்தினர் உரையாற்றினார். தொடர்ந்து அருட்பணியாளர் விசேட நன்றி உரை வழங்கினார். IOM நிறுவனம் எமது கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து உபகரணங்களைத் தந்து உதவியதோடு பணிப்பாளர் அவர்கள் எமது அழைப்பை ஏற்று வருகை தந்ததற்காக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார். இறுதியாக நிர்வாக உறுப்பினரான திரு. எட்வேட் அவர்கள் நன்றி உரை வழங்கினார்.

மன்னார் நகரில் முதல் முதலாக IOM நிறுவனத்தின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள *மூத்த (முதியோர்) பிரஜைகளுக்கான பொழுது போக்கு மையம* ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ளது. இனமத வேறுபாடின்றி 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த பிரஜைகள் இதனை இலவசமாக பயன்படுத்தலாம். இம்மையத்தில் பொழுதுபோக்கு சாதனங்களான தொலைக்காட்சி, கரம்போட், தாம் போட், கார்ட்ஸ், பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவை உண்டு.

## பயிற்றுவிப்பாளர்களுக்கு இந்தியாவில் பயிற்சி

கடந்த ஜுன் 25 முதல் ஜுலை 17 வரை தென்னிந்தியாவில் கேரள மாநிலத்தில் திருவனந்தபுரம் என்னுமிடத்தில் உள்ள லக்ஸ்மி பாய் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுக்கான சிறப்புப் பயிற்சி நடைபெற்றது. இதில் மன்னார் மாவட்டத்திலிருந்து 05 பயிற்றுவிப்பாளர்கள் பங்கேற்று நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் மெய்வல்லுநர் பயிற்றுநர்களுக்கு மேலதிக விஷேட பயிற்றுவித்தல் பயிற்சியை வழங்கும் பொருட்டு இலங்கையிலிருந்து 30 சிறந்த பயிற்றுநர்கள் அனுப்பப்பட்டனர். இதில் மன்னாரைச் சேர்ந்த ஐவரும் அடங்குவர். இவர்கள் விபரம் வருமாறு.

1. திரு. ப. ஞானராஜ் - உடற்கல்வி ஆசிரியர், புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்னார். 2. திரு. ரி. ராஜு - உடற்கல்வி ஆசிரியர், மடுவலயம். 3. ஜனாப். எம். ஆர். எம். ஜஸ்மின் - விளையாட்டு அதிகாரி, பிரதேச செயலகம், மன்னார். 4. திரு. எம். கே. எஸ். பி. லெமபேட், விளையாட்டு அதிகாரி, பிரதேச செயலகம், நானாட்டான். 5. திரு. ஜி. செபஸ்ரியாம்பிள்ளை, விளையாட்டு அதிகாரி, கச்சேரி, மன்னார்.

இவர்கள் ஐவரும் மன்னார் மாவட்டத்தில் பல வீரர்களைப் பயிற்றுவித்து தேசிய மட்டம் வரை பல சாதனைகளை நிகழ்த்தி பெருமை சேர்த்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஞானோதயம் ஆன்மீகக் கல்வி மையத்தினால் நடாத்தப்பட்ட இறையியல் கற்கை நெறிச் சான்றிதழ் விழா



அமதிகளின் ஆன்மீகக் கல்வி மையமாகிய ஞானோதயத்தில் அருட்தந்தை ஸ்ரனி அன்ரனி (அமதி) அவர்களின் வழிநடத்தலின்கீழ் கடந்த ஓராண்டு காலமாக இறையியல் கற்கைநெறி நடாத்தப்பட்டது.

அருட்தந்தையர்கள் ஜெயந்தன் பச்சேக் (அமதி), பாக்கிய றஞ்சித், கிறிஸ்துநாயகம் என்பவர்களால் இக்கற்கை நெறிக்கான விரிவுரைகள் நடாத்தப்பட்டன. இக்கற்கை நெறியில் மன்னார் மறைமாவட்டத்திலிருந்து 22 பேர் பல்வேறு பங்குகளில் இருந்தும் முழுமையாகப் பங்குபற்றி பயனடைந்தனர்.

இக்கற்கை நெறியினைப் பூர்த்திசெய்யும் முகமாக சான்றிதழ் வழங்கும் இறுதி நிகழ்வு கடந்த 19.05.2007 அன்று காலை 10.00 மணியளவில் ஞானோதயம் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக மன்னார் பேராலயப் பொதுநிலைப் பணியாளர் திரு. பெஞ்சமின் அவர்கள் கலந்துகொண்டார். இந்நிகழ்வானது திரு. எஸ் ஜெபநேசன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு உரைகளும், சான்றிதழ் வழங்கும் வைபவமும், கலைநிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டு மதிய உணவு விருந்துபசாரத்துடன் இவ்விழா இனிதே நிறைவுற்றது.

# பங்குத்தள சங்கதிகள்

## வங்காலைப் பங்கில் நற்கருணைப் பேரணி

வங்காலைப் பங்கில் கடந்த யூன் 17ந் திகதி அன்று சிறார்களுக்கு முதல் நன்மை அருட்சாதனம் வழங்கப்பட்டது. வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. பெப்பி சோசை அவர்களின் தலைமையில் இந்த முதல்நன்மை விழா நடைபெற்றது. அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு நற்கருணைப் பேரணி இடம்பெற்றது. பங்குத்தந்தை அருட்பணி. ஞானப்பிரகாசத்தின் அனுசரணையுடன் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. டக்ளஸ் லோகு தலைமையில் இந்நிகழ்வு நடந்தது. நான்கு தரிப்பிடங்களில் மறையுரைகள் இடம்பெற்றன. அருட்பணி டானியேல் (அ.ம.தி), அருட்பணி ஆரோக்கியம், அருட்பணி. ஜெயசீலன் (நானாட்டான் பங்குத்தந்தை), மறைக்கல்வி, கல்வி, விவிலிய ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி தமிழ் நேசன் அடிகள் ஆகியோர் தரிப்பிடங்களில் மறையுரை ஆற்றினார்கள்.

## வங்காலை புனித ஆனாள் அன்னையின் திருவிழா

மன்னார்த் திருச்சபையின் மூத்த குமாரத்தி என வருணிக்கப்படும் வங்காலைப் பங்கின் புனித ஆனாள் அன்னையின் திருவிழா ஆடிமாதம் 26ஆம் திகதி சிறப்பாக இடம்பெற்றது. நவநாள் திருப்பலிகள் மறையுரைகளுடன் நடைபெற்றன. அன்புராசா அமதி அடிகள் இன்றைய காலச்சூழ்நிலைக்கேற்ப ஆழமான மறையுரையாற்றினார். கருத்தாழமிக்க பாடல்களைப்பழக்கி பங்கு மக்கள் மனங்களில் இடம்பிடித்தார்.

வேஸ்பர் ஆராதனைகளை விக்ரர் சோசை அடிகளார் நிறைவேற்றி வைத்தார். வேஸ்பர் ஆராதனையின் பின்னர் நற்கருணை நாதரின் ஊர்வலம் பவனியாக எடுத்து வரப்பட்டது.

மறுநாள் திருவிழாத்திருப்பலி காலை 7.00 மணிக்கு முன்னாள் குருமுதல்வர் அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. அடிகளாரையும் அவருடன் இணைந்து பலி நிறைவேற்ற வந்திருந்த முன்னாள் பங்குத்தந்தை விக்ரர் அவிதப்பர், அருட்பணி றெக்ஸ் குலாஸ், மறையுரைஞர் அன்புராசா (அ.ம.தி) ஆகிய அனைவரையும் தமிழ்ப் பண்பாட்டின்படி ஆராத்தி எடுத்து பொட்டிட்டு, மாலையிட்டு வரவேற்றனர். விழாத்திருப்பலி முடிவில் அன்னை ஆனாளுக்கு கவிகளும், ஆர்ப்பரிப்பு மன்றாட்டுக்களும் பாடப்பட்டன. திருப்பலி முடிவில் அன்னை ஆனாளின் திருச்சுரூபம் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டு பங்குத்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளால் அன்னையின் இறுதி ஆசீர் வழங்கப்பட்டது.

*தகவல் :- பெப்பி*

## குழந்தை யேசு ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டு விழா



கடந்த 29.06.2007 அன்று மன்னார், கீரி, தாமோதரம்பிள்ளை வீதியில் குழந்தை இயேசு ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டல் நிகழ்வு நடைபெற்றது. மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் புதிய ஆலயத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். இதில் தாழ்வுபாட்டு பங்குத்தந்தை, அருட்சகோதரி, பங்குமக்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

## நாகரிலுப்பைக்குளம் புனித உத்தரிய மாதா திருவிழா

கடந்த யூலை மாதம் 16ம் திகதி பம்பைமடுப் பங்கில் நாகரிலுப்பைக்குளத்தில் உள்ள புனித உத்தரிய மாதா ஆலயத் திருநாள் இடம்பெற்றது. இதனை பம்பைமடுப் பங்குத்தந்தை அருட்திரு அன்ரன் நெறிப்படுத்தினார். இவ்விழாவில் இந்து சமயச் சகோதரர்கள் சிலரும் பங்குகொண்டனர். 7.30 மணியளவில் பங்கு மக்களின் சிறப்பு செபமாலைத் தியானத்துடன் திருவிழாத் திருப்பலி ஆரம்பமாகியது. திருப்பவனி, திருச்சுரூப ஆசீர்வாதம் என்பன இடம்பெற்றன. திரு. சுவானி மரியாம்பிள்ளை அவர்களின் சிறப்பு திருக்கவி வாழ்த்துப்பாவுடனும் இறை அருளுடனும் இத்திருவிழா இனிதாய் நிறைவடைந்தது.

*வவுனியா செய்தியாளர், அ. பேனாட்*

## வவுனியாவில் அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான பயிற்சி


கடந்த யூலை மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் அன்பிய ஊக்குவிப்பாளருக்கான பயிற்சி வகுப்பு இடம்பெற்றது. மன்னாரிலிருந்து வருகை தந்திருந்த அன்பிய இயக்குனர் அருட்தந்தை யூட் குரூஸ் அடிகளார் இதை நடாத்தினார். பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வு மாலை 6.00 மணிவரை நடைபெற்றது.

நிகழ்வில் அருட்தந்தை இவ்வாண்டு செப ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளமையினால் அன்பியங்களில் செபத்தையும் செபமாலைப் பக்தி முயற்சிகளையும் முன்னெடுக்க அன்பியங்களை ஒன்றிணையுமாறு கோரிக்கை விடுத்தார். இச் செய்தியை முதன்மைப்படுத்தி வலியுறுத்தினார். அத்துடன் வாரத்தில் ஒருமுறை அன்பியங்களை ஒன்றுகூட்டி செபத்தை முனைப்புடன் செயற்படுத்த வேண்டும் எனவும் கூறினார்.

இக்கூட்டத்தை பங்குத்தந்தை அருட்திரு அ. செபமாலை அடிகள் நெறிப்படுத்தினார். இப் பயிற்சி வகுப்புக்கு 30 பேர் வரை ஆண்கள், பெண்கள் அடங்கலாக கலந்துகொண்டனர்.

*வவுனியா செய்தியாளர், அ. பேனாட்*

## 31ம் நாள் நினைவு



மலர்வு 06.05.1932 உதிர்வு 31.07.2007

**வி. ஞானப்பிரகாசம் லேயம்**
**(தலைமன்னார் கிராமம்)**

*"இன்றே நீ என்னுடன் வான் வீட்டில் இருப்பாய்"*

இவரின் பிரிவால் துயருறும்:
*அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், நண்பர்கள்*

# இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

## கிழக்கில் மக்களின் தேவையை நிறைவு செய்வதாயின்
## அரச சார்பற்ற நிறுவனங்கள் சுதந்திரமாக செயற்பட அனுமதியுங்கள்

குடும்பி மலை எனத் தமிழில் அழைக்கப்பட்டு வந்த தொப்பிக்கலவை மீட்டு அங்கு அபிவிருத்தித்திட்டங்களை ஆரம்பிக்கப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் திருமலை மட்டுநகர் ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை கிழக்கில் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்வதாயின் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சுதந்திரமாகச் செயற்பட அனுமதியுங்கள் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து, அவர்களின் கோடிக்கணக்கான சொத்துக்கள் சூறையாடப்பட்டு, உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அவர்களின் பாரம்பரிய இடங்களில் இருந்து அவர்கள் அகற்றப்பட்ட நிலையில் கிழக்கில் எதற்காக அபிவிருத்தித் திட்டங்கள் என்ற கேள்வி எழுகிறது.

2 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வீடுகளை இழந்துள்ளனர். அகதி முகாம் வாழ்க்கை தொடர்கிறது. மீள்குடியேற்றத்தின் பின்னரும் அவர்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படவில்லை. மக்கள் அபிவிருத்திக்கு முன்னதாக இயல்பு வாழ்க்கையையே விரும்புகின்றனர். அபிவிருத்திக்கு நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால் அபிவிருத்திக்கு முன்னதாகச் செய்யவேண்டிய நிறையப் பணிகள் உள்ளன. வீடு, தொழில் எனப் பல விடயங்களை இவ்வாறு வரிசைப்படுத்தலாம்.

கிழக்கில் அபிவிருத்தியை அரசாங்கம் மட்டும் செய்ய முடியாது. அதற்கு 10 வருடங்களுக்கு மேலாகும். மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதாயின் அரசசார்பற்ற நிறுவனங்கள் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும். இதற்கான அனுமதியை வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும் எனத் தெரிவித்தார்.



## யாழ். கென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழா

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழா கடந்த யூலை மாதம் 14ம் திகதி சனிக்கிழமை கல்லூரியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்துகொண்டு திருப்பலி நிறைவேற்றினார்.

சிறப்பு விருந்தினராக யாழ் மறை மாவட்டக் குரு முதல்வரும் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபருமான அருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசமும், விசேட விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் ஆர். குமாரவடிவேல், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர். ப. விக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

திருப்பலியின்பின் பாடசாலை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களின் உரைகளும் கலை நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெற்றன.

## பொன்விழாக் கண்டு மகிழும் கார்மேல் சபை அருட்சகோதரிகள்

### அருட்சகோதரி ஜேம்ஸ்



அருட்சகோதரி ஜேம்ஸ் அவர்கள் யாழ்ப்பாணம் கரம்பனில் திரு. திருமதி மரியாம்பிள்ளையின் சிரேஸ்ட புதல்வியாக 1930ம் ஆண்டு மாசி மாதம் 7ம் திகதி பிறந்தார். இவரைச் செல்லமாக லூர்த்தம்மா என்று அழைப்பார்கள். இவர் தனது கல்வியை கரம்பன் றோ.க.பாடசாலையில் நிறைவுவெய்து, 1949 – 1950 ஆண்டுகளில் ஆசிரிய கலாசாலையில் தனது ஆசிரியப் பணியை முடித்தார். தனது முதல் ஆசிரியப் பணியை மன்னார் நல்லாயன் பாடசாலையிலும், பின்னர் அச்சுவேலி புனித திரேசாள் கல்லூரியிலும் மேற்கொண்டார். இங்கேதான் இறைவனின் அழைத்தலை உணர்ந்துகொண்டார்.

1955ம் ஆண்டு கார்மேல் சபையில் இணைந்துகொண்ட இவர், தனது துறவற நவசந்நியாச பயிற்சியை இந்தியாவிலே நிறைவு செய்து தனது முதல் வாக்குத்தத்தத்தை 1957ம் ஆண்டு மேற்கொண்டார்.

தனது துறவற வாழ்வில் பணி வாழ்வோடு கல்வித்துறைக்கும் பெரும் சேவை - யாற்றியுள்ளார். திருகோணமலை, மட்டக்களப்பு, கொல்பிட்டி, பதுளை, முருங்கன் போன்ற பல இடங்களில் அன்பும், கரிசனையும், கடமையுணர்வும், இறைபக்தியும், ஏழைகள்மேல் மிகுந்த அன்பும் கொண்ட ஒரு சிறந்த ஆசிரியராகக் கடமையாற்றி 1985ம் ஆண்டு ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வுபெற்றார்.

அதன்பின் கரவெட்டி, யாழ்பாணம் போன்ற இடங்களில் ஆன்மீக, சமூக சேவையில் மக்களுக்கு மறையறிவையும், இறை அன்பையும் ஊட்டிவரும் அரும் பணியை இன்று வரை தொடர்ந்து ஆற்றி வருகின்றார். இவர் அருட்சகோதரி அஞ்சலீனா (தி.கு) அவர்களின் சகோதரியாவார்.

### அருட்சகோதரி ஜெரோம்



அருட்சகோதரி மேரி ஜெறோம் அவர்கள் அச்சுவேலியில் யோசேப்பு பொன்னையாவிற்கும் ஞானாமிர்தம் முத்தம்மாவிற்கும் 7வது செல்லப் புதல்வியாக 1936ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ம் நாளில் பிறந்தார்.

தனது துறவற வாழ்வில் ஓர் ஆசிரியராக கல்விச் சமூகத்திற்கு இவர் அரும்பணியாற்றியுள்ளார். திருகோணமலை, கல்முனை, மட்டக்களப்பு, பதுளை, பண்டாரவளை, கரவெட்டி போன்ற இடங்களில் சிறந்த ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றினார்.

1988ம் ஆண்டு முதல் 1996ம் ஆண்டு வரை யாழ். புனித டொண் பொஸ்கோ பாடசாலையில் சிறந்த ஆளுமையும் தலமைத்துவமும் நிறைந்த அதிபராகக் கடமையாற்றி இப்பாடசாலையின் உச்ச வளர்ச்சிக்காக அயராது உழைத்தார்.

இவரின் காலப்பகுதியில் அகில இலங்கையிலேயே முதலாவதாக இப்பாடசாலை விளங்கியது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவருக்கு சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருது வழங்கப்பட்டது.

இவர் இறைவனில் மிகவும் ஆழமான நம்பிக்கையும், இறை உணர்வும், ஏழைகள்மேல் அன்பும் இரக்கமும் கருணையும் நிறைந்தவர். எப்போதும் புன்முறுவல் கொண்ட முகமும் கண்ணியமும் கடமையுணர்வும் நேர்மையும் உள்ளவர். தான் கொண்டுள்ள ஆங்கில அறிவை மற்றவருக்கு வழங்குவதில் அதிகம் இன்பம் காண்பவர்.

இவர் பதுளை, கரவெட்டி, யாழ்ப்பாணம், ஆகிய இடங்களில் இல்லத் தலைவியாகப் பணியாற்றினார். தன்னுடன் வாழும் அருட்சகோதரிகளின் ஆன்ம வளர்ச்சியிலும் நலன்களிலும் கரிசனை கொண்டவர். இவர் செல்வராஜா அடிகளின் அன்புச் சகோதரியாவார்.

### அருட்சகோதரி லூயிஸ்



அருட்சகோதரி மாறி லூயிஸ் பிறந்த இடம் மட்டக்களப்பு ஆகும். அவருடைய பெற்றோர் திரு. திருமதி ஆர். பி. யோண்பிள்ளை ஆவர்.

இவர் குடும்பத்தில் ஐந்து ஆண்களுக்கு ஒரேயொரு செல்ல மகளாய்ப் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர் கல்விவரை மட்டக்களப்பு புனித சிசிலியாக் கல்லூரியில் கற்றார். மிகவும் அன்பானவராகவும், மென்மையான சுபாவம் உடையவராகவும், இறைவனிலே அதிக பக்தி உடையவராகவும் வளர்ந்தார்.

இவர் தமது கல்லூரி வாழ்க்கையிலே இறைவனின் அழைப்பிற்கு செவிமடுத்து இதோ வருகின்றேன் என்று பதில் அளித்து கார்மேல் தோட்டத்திலே ஒரு அழகிய மணம் வீசும் மலராக மலர்ந்து இறைபணிக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

இவர் இந்தியாவில் மங்களூரில் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையில் நவ சந்நியாச பயிற்சியை முடித்தார். இவர் ஆசிரியப் பயிற்சிக்கலாசாலையில் கல்வி கற்றவர். யாழ். புனித டொண் பொஸ்கோ வித்தியாலயம், திருகோணமலை புனித மரியாள் கல்லூரி, கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் மகா வித்தியாலயம், வங்காலை புனித ஆனால் ம.ம.வி., அடம்பன் ம.ம.வி. ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றினார். புனித செபமாலை மாதா தமிழ்ப் பாடசாலையில் உப அதிபராகவும் பணியாற்றினார்.

இவர், கரவெட்டி , தாழையடி, யாழ். றக்கா வீதி கார்மேல் இல்லம் ஆகியவற்றில் குழுத் தலைவியாகப் பணிபுரிந்தார். அருட்சகோதரி 2 வருடங்கள் பெங்களூரிலும் தனது சேவையை ஆற்றினார்.

### அருட்சகோதரி லைசா



அருட்சகோதரி லைசா தனது துறவற பணி வாழ்வில் பொன் விழா காணுகிறார்.

இவர் மலேசியாவில் உள்ள குவாலா லிப்பிஸ் என்ற இடத்தில் பிறந்தார். இவருக்கு 14 வயதானபோது இவரது குடும்பத்தினர் சொந்த ஊரான யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

தனது பாடசாலைப் படிப்பை திருக்குடும்ப கன்னியர் நடத்திய கல்லூரியிலே தொடர்ந்த அருட்சகோதரி படிப்பை நிறைவுசெய்து ஒரு துறவியாக வரத் தீர்மானம் செய்தார்.

1954 ஆம் ஆண்டு அப்போஸ்தலிக்க கார்மேல் சபையில் சேர்ந்த இவர், தனது துறவற பயிற்சியின்பின் முதல் வார்த்தைப்பாட்டை 1957இல் கொடுத்தார்.

இவருடைய சகோதரர்கள் இருவர் இயேசுசபைத் துறவிகளாகவும் இன்னு - மொருவர் அமலமரித்தியாகிகள் சபைக் குருவாகவும் இருப்பது விசேட அம்சமாகும்.

துறவற வாழ்வின் பொன்விழாவைக் கொண்டாடும் அருட்சகோதரி லைசா அவர்களுக்கு பொன்விழா வாழ்த்துக்களை ஆன்ம உடல் நலங்கள் சிறக்க இறையாசீர் நிறைவாகக்கிடைக்க வாழ்த்துகிறோம்.

## கிழக்கில் தேர்தலை நடத்தினால் வன்முறைகள் உருவாகும்
### திருமலை - மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி

கிழக்கில் தற்போது நிலவும் பாதுகாப்பு நிலைமை தேர்தல் நடத்துவதற்கு உகந்ததாக இல்லை. அதனைப் பொருட்படுத்தாது அரசாங்கம் தேர்தல் ஒன்றை இங்கு நடத்துமானால் வன்முறைகள் வெடிக்கும். தற்போதைய சூழ்நிலையில் இங்குள்ள நிலைமைகளால் நியாயமான நீதியான தேர்தல்கள் நடைபெறாது. இவ்வாறு மட்டக்களப்பு, திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை பி.பி.ஸி யின் சிங்கள சேவையான "சந்தேசிய"வுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலே கூறினார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, கிழக்கில் நிலைமை சற்றுப் பரவாயில்லை. ஆனால் பிரச்சினைகள் இன்னமும் உள்ளன. கிழக்கில் பெரும்பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆனால் மட்டக்களப்பின் மேற்குப் பகுதியில் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மோதல் நடைபெற்று வருகின்றது. அரசாங்கம் கிழக்கில் தேர்தலை நடத்தினாலும் வன்முறைகள் நிகழாது எனக் கூறமுடியாது. தேர்தல் நடத்துவது என்பது புத்திபூர்வமானதல்ல. அரசியல்வாதிகள்மீது வடக்கு, கிழக்கு மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். வாக்குறுதிகளையும் ஒப்பந்தங்களையும் தூக்கி எறிகின்றவர்களாக அரசியல்வாதிகள் உள்ளனர்.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் மீதான இனப்பாகுபாடு ஒழிக்கப்பட வேண்டும். மகிந்த அரசாங்கம் அமைத்திருக்கும் அனைத்துக் கட்சிக் குழுவினால்கூட இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களினது அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். அப்படிக் கூறுவதனால் நான் பிரிவினைவாதம் பேசுவதாகக் கருதக்கூடாது. என்றார்.

## வெள்ளி விழாக்காணும் அருட்சகோதரி சுகிர்தா

நல்லாயன் சபையைச் சேர்ந்த - மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்சகோதரி மரிய சுகிர்தா குரூஸ் தனது துறவற அர்ப்பண வாழ்வில் இருபத்தைந்து ஆண்டுகளை யூலை மாதம் 27ஆம் திகதி நிறைவு செய்கிறார்.

இவர் 1982 ஆம் ஆண்டு யூலை மாதம் 27ஆம் திகதி தனது முதல் துறவற அர்ப்பணத்தைச் செய்தார். 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி நித்திய அர்ப்பணத்தைச் செய்தார்.

புகுமுக நிலையை நாயக்கந்தையில் முடித்துக் கொண்ட இவர், யாழ். நாவாந்துறை, மாங்குளம், கூழாவடி, நவாலி, ஆனைக்கோட்டை, கொம்பனித்தெரு, மேட்டுத்தெரு, வவுனியா ஆகிய இடங்களிலும் தற்போது போலவளானையிலும் அன்புப் பணியாற்றி வருகிறார்.

இவரது பணிக் காலங்களில் இவர் நோயாளர் பராமரிப்பு இல்லத்தில் பணியாற்றுவதிலும் மற்றும் துறவற உருவாக்கத்திலும் பெரும்பாலும் ஈடுபட்டு உழைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சமாதானத்தை ஊக்குவிக்க சமயத் தலைவர்கள் ஒன்றுகூடினர்

*சமாதானத்திற்கான சமயத் தலைவர்கள* என்ற மகுடத்தின்கீழ் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த யூன் மாதம் 28ம் திகதி இலங்கையின் சமயத் தலைவர்கள் ஒன்றுகூடி போரின் கொடுமையையும் சமாதானத்தின் தேவையையும் பற்றி ஆராய்ந்தனர்.

சமாதானத்திற்கான தேசிய சமயங்களின் பேரவை, தேசிய சமாதானப் பேரவை மற்றும் நீதி, சமாதானம், ஒப்புரவுக்கான சிறிலங்காவின் சங்கம் ஆகிய அமைப்புக்கள் கூட்டாக இந்த ஒன்றுகூடல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

போரில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் மனித உரிமைகளை மதித்து, பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை எட்ட முயற்சிக்கும்படி இந்த ஒன்றுகூடலில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதற்கு சர்வதேச சமூகமும் ஒத்துழைக்க வேண்டுமென வேண்டுகோள் கோரப்பட்டது.

## யாழ் மரியன்னை பேராலயத்தின் வெள்ளி விழா

யாழ் மரியன்னை பேராலயம் 1982ம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டதன் வெள்ளி விழா ஆண்டு இவ்வாண்டாகும். வெள்ளி விழா நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கையிலுள்ள அனைத்து பேராலயங்களிலும் இதுவே பெரியது என்பது குறிப்பிடத்தக்கது.



# சிறுவர் பொழிவு



## திருந்திய திருடன்

வ.சுஜன்,
மணற்குளம், உயிலங்குளம்

சதானந்தம் ஒரு அரச அதிகாரி. அவர் அரச அதிகாரியாக இருந்தாலும் அரச உடைமைகளையும், சொத்துக்களையும் பயன்படுத்துவதை தவிர்த்தே வந்தார். இவருடைய மனைவியும் இவரைப்போலவே பிறர் பொருளில் ஆசைப்படக்கூடாது என்னும் கொள்கையில் வாழ்ந்து வந்தாள்.

கடந்த வருடம் இடம்பெற்ற பாரிய சுனாமி அழிவுகள் இவர்களைப் பாதிக்கவில்லை. வெளிநாட்டு தனியார் நிறுவனம் ஒன்று புத்தம் புதிய கம்பளிப் போர்வைகளையும் நுளம்பு வலைகளையும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்குமாறு அரச அதிகாரியாக இருந்த சதானந்தத்திடம் கொடுத்திருந்தது. அவை அரச அதிகாரியின் விடுதியில் குவிக்கப்பட்டிருந்தன. இதனை அறிந்த திருடர்கள் சிலர் அரச அதிகாரியின் வீட்டுக்குள் திருடுவதற்காக ஒருநாள் இரவு நுழைந்தனர். அங்கே அரச அதிகாரியும் அவருடைய மனைவியும் வெறுந்தரையில் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தனர்.

இதனைக் கண்ட திருடர்களின் தலைவன் வியப்படைந்தான். பக்கத்தில் புத்தம் புதிய கம்பளிப் போர்வைகள் குவிக்கப்பட்டிருந்தும் அவற்றில் ஒன்றையாவது எடுத்துப் பயன்படுத்தாது இப்படி கஸ்ரப்பட்டு படுத்துறங்குகிறாரே, இதனை எப்படியாவது அவரிடம் கேட்க வேண்டுமென நினைத்தான். திருடுவதை மறந்த திருடன், "இங்கே புத்தம் புதிய கம்பளிப் போர்வைகள் இருக்க நீங்கள் அதனை ஏன் பயன்படுத்தக்கூடாது" என சதானந்தத்தை எழுப்பிக் கேட்டான். அவர் நிதானமாக, "இது கஷ்டப்படும் ஏழை மக்களுக்கு வழங்கப்பட்டது. பலர் உறங்குவதற்கே இடமில்லாமல்



வெட்டவெளியிலேயே காலம் கழிக்கின்றனர். இந்த நிலையில் நான் ஒன்றைத்தான் எடுத்தாலும் பெரிய பாவமல்லவா? எனக் கூறினார். அன்றிலிருந்து ஏழைகளுக்கென வழங்கும் பொருட்களை திருடுவதில்லை என சபதமெடுத்தான் அந்தத் திருடன்.

## சிந்தனைத் துளிகள்

- ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல. விழுந்தபோதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.
- எனக்கென்று உள்ளதை எவரும் தடுக்க முடியாது. எனக்கென்று இல்லாததை எவருக்கும் கொடுக்க முடியாது.
- வெற்றி என்பது பெற்றுக்கொள்வதற்கு, தோல்வி என்பது கற்றுக்கொள்வதற்கு.
- அதிஸ்ரம் உனக்குச் சட்டியைத் தேடித்தரலாம். ஆனால் சட்டியில் உலையைப்போடுவது உன் உழைப்பைப் பொறுத்ததே.
- விழிப்பதற்கே உறக்கம், வெல்வதற்கே தோல்வி, எழுவதற்கே வீழ்ச்சி.

*அ. சிமில்டா (றோகினி)*
*பொன்தீவுகண்டல், அளவக்கை.*

## கல்விச் செல்வத்திற்காய் நீ காத்திரு!



- கல்வி எனும் கடல் நிரம்ப, கண்ணீர் எனும் மழை பெய்து, கடின உழைப்பு எனும் நதியில் ஓடி, புகழ் என்ற பெருமையைப் பெறுவோம்.
- கல்விச் செல்வமதை உதறிவிட்டு, ஏனைய செல்வமதை தேடுபவன், கடைசியிலே கடனாளி ஆகின்றான், கற்றவனோ அறிவாளி ஆகின்றான்.
- மற்றவரின் மதிப்புதனைப் பெற்றிட, மாண்புடனே கல்விதனைக் கற்றிடு. உன் இலட்சியத்தைச் செம்மையாக்க, கல்வியே கடைசியில் கைகொடுக்கும்.
- நற்பண்புடனே நீ ஒழிகிடுவாய், நல்முறையில் கல்விதனைக் கற்றிடுவாய். நாலுபேருடன் நட்புடனே பழகிட, கல்வியே உனக்கு உதவி செய்யும்.
- தோழர்களே! கல்விக்கு நிகர் கல்வியே. அதை நாம் கடினப்பட்டு உள்வாங்கினால் உலகமே நம் கையில் தவழும்.


*எம். தர்மினி*
*ஜே. ஆர். எஸ். வாழ்வியல் பயிற்சி நிலையம்,*
*வவுனியா.*

## நில், கவனி, முன்னேறு

- தூயவரின் இதயங்கள் ஆவியானவரின் ஆலயங்கள்.
- நேர்மையுடன்கூடிய எளிமையே பிறரை மயக்கும் உண்மையான அழகு.
- நேற்று என்பது இனி வருவதில்லை. நாளை என்பது இன்னும் வரவில்லை.
- உழைப்பை நம்பு. ஆனால் கடவுளை மறந்துவிடாதே.
- நல்ல மனச்சாட்சி என்பது ஒரு மென்மையான தலையணையைப் போன்றது.

*சி. கிறிஸ்ரீன் ஜென்சி, வீரபுரம்*
*மணிவாசகர் மகாவித்தியாலையம்,*

## மெல்லச் சிரிங்க... மெல்லச் சிரிங்க..



**ஆசிரியர்:** டேய்! படிக்கிற வயசில அஞ்சு மணிநேரம் தூங்கினாலே போதும்!
**மாணவன்:** "ஐயா வீட்டிலேயா? அல்லது பள்ளிக்கூடத்திலேயா"?

* * * * *

**டாக்டர்1 :** "ஆபரேஷன் தியேட்டரிலிருந்து டாக்டர் ஏன் கோபமாக வர்றாரு?
**ஒருவர்:** "ஆபரேஷன் தியேட்டர்ல எவனோ, உடல் மண்ணுக்கு உயிர் டாக்டருக்குன்னு எழுதி வெச்சுட்டானாம்!"

*பி. சசிகலா, அடம்பன், தாமரைக்குளம்.*

* * * * *

**நீதிபதி :** எதுக்கு ஒரே நாள்ல எட்டு இடத்தில கொள்ளையடிச்ச?..
**குற்றவாளி :** ரெண்டு மாசத்துக்கு என்னை ஓய்வெடுக்கச் சொல்லியிருக்கார் என் குடும்ப டாக்டர்.

*அ. அரோன், சாவற்கட்டு, மன்னார்*

* * * * *

**ஆசிரியர் :** பிள்ளைகளே பாலும் தேனும் ஓடுகின்ற நாடு எப்படி இருக்கும்?
**மாணவர்கள் :** ஒரே ஈயும் எறும்புமாக இருக்கும் ரீச்சர்.

*ஞா. கிறேசியன்,*
*பொன்தீவுகண்டல்,*
*முருங்கன்.*



**மகள் :** அப்பா! நான் ஐம்பது சத நாணயத்தை விழுங்கிவிட்டேன். உடனே என்னை டாக்டரிடம் அழைத்துச் செல்லுங்கள்.
**தந்தை :** முடியாது! டாக்டரிடம் அழைத்துச் சென்றால் அவர் நூறு ரூபாய் விழுங்கிவிடுவார்.

*ஜே. மெற்றில், நொச்சிக்குளம்.*

* * * * *

**கஸ்தூரி :** என் புருசனுக்கு கடவுள் நம்பிக்கையே கிடையாது என்னைத்தான் கடவுளா நினைப்பார்.
**காயத்திரி :** அப்ப உன்னையும் நம்ப மாட்டார்னு சொல்லு.

* * * * *

**கமல் :** மனைவியை அடக்குவது எப்படின்ற புத்தகம் உங்க கடையில் இருக்கா?
**கடைக்காரர் :** நடைமுறைக்கு ஒத்துவராத புத்தகங்கள் எல்லாம் இங்கே கிடையாது சார்.

*சி.றோமி, சாளம்பன்,*
*ஆண்டாங்குளம்.*



# கவிதைப் பூக்கள்

## கல்விச் செல்வம்

அன்று தொட்டு இன்று வரை
அழியாப் புகழ் தரும் அருஞ்செல்வம் கல்வி.
ஆசானாய் ஆன்றோராய் அவனியிலே
ஆரமாய் விளங்க வைப்பதும் கல்வியே.

கல்வியில் மிக்க செல்வமுண்டோ?
கற்றாரை விஞ்சியோர் எவரும் உண்டோ?
கண்ணான கல்வியினை இளமையிலே -- மனதில்
கற்சிலையாய் பதிக்க மறுப்பும் உண்டோ?

எச்சமென ஒருவர் சேர்க்கும் செல்வம்
மிச்சமில்லாத வேறு ஒன்றுமில்லை.
ஏழ்பிறப்பும் எம்மைத் தொடர்ந்து வரும் - புகழ்
ஏற்றமிகு கல்விச் செல்வமன்றோ.

*யே. மேரி நிலோஜினி,*
*பொன்தீவுகண்டல், முருங்கன்*

## அன்னை



அன்னையென்ற அற்புதமே
அகிலம் கண்ட அதிசயமே.
உன்னையெண்ணி வியக்கின்றேன்.
இறைவனை உன்னுருவில் காண்கிறேன்.

புண்ணியமே எனக்கு
உன் புன்னகை கண்டால்.
சொர்க்கம் வேறிடமல்ல
உன்னை அடைந்திட்டால்.
உறவு வேறு எதுவுமில்லை
உன் அருகில் இருந்திட்டால்.

அன்பு மழை பொழியும் தாயே,
பாசமழை உதிரும் தாயே,
உன் அன்பின்றி நான் தவிக்கிறேன்.
என் நிலை உணர்ந்து
உன் கிருபையின் கண்களை
என்மீது காட்டுவாயாக.

*எ. அனிற்றா சர்மிலா, பெரியமுறிப்பு, முருங்கன்.*

## உறவு



உறவுகள் உறைந்துவிட்ட பூமியிலே
ஊமையாய் அலைகிறேன்.
உண்மை உறவின் அர்த்தம் தேடுகின்றேன்.
உலகின் வேடம் புரியவில்லை.
உறவின் ஆழம் தெரியவில்லை – ஓர்
உண்மை மட்டும் புரிகிறது இப்போது.

கண்ணுக்குப் பார்வை நிரந்தரம் இல்லை
மண்ணுக்கு மழை நீரும் நிரந்தரம் இல்லை.
விண்ணுக்கு வீதி நிரந்தரம் இல்லை
மொத்தத்தில் மனிதன் மரமானதால்
மனித உறவும் நிரந்தரம் இல்லை.

விண்ணில் வாழும் தந்தையை
மண்ணில் வாழும் மனிதரில் கண்டால்
இந்த உறவே நிரந்தரம்.

*கி. சுகந்தா, நேரியகுளம், இலுப்பைக்குளம்.*

## அன்னை திரேசா

வேஷம் போடும் உலகத்தில் நேசம் காட்ட வந்தீரோ
தேசம் எங்கும் தொண்டாற்ற தென்றல்போல வந்தீரோ?
பார்க்கச் சகியா தொழுநோயின் தாக்கத்தாலே நொந்தவரை
நீர் தூக்கித்தொட்டு மருந்திட்டு தொண்டு ஆற்ற வந்தீரோ?
அன்னை திரேசா உங்களைப்போல் அன்பு நெஞ்சம் எல்லோரும்
இந்த உலகில் பெற்றிடவே இன்பம் பொங்கும் எந்நாளும்.

*அ. மேரி கொன்சலீனா, மடுக்கோவில், மடு*

# துளிப்பா



### அழகு
நிறையவே நீ கவரப்படலாம்
பூக்கள்கூட உன்னைப்
பார்த்து பொறாமைப்படுவதால்.

### பத்திரிகையாளர்
நீங்களும் போராளிகள்தான்.
பேனைமுனைகள் உங்களுக்கு
ஆயுதமாய் இருக்கும் வரை.

### இதயம்
நாடியை நாளமாய்
நமக்குள் மாற்றிடும்
எரிபொருளில்லா இயந்திரம்.

### சோதனை
தீக்குச்சி ஒருமுறை சிரிப்பதால்
மெழுகுவர்த்தி வாழ்நாள்
முழுவதும் அழுகின்றது.

*தே. ஜெர்மா,*
*மன்/அடம்பன் ம.ம.வி.*

### விதி
பிறக்கும் ஒவ்வொரு
ஜீவன்களின் வாழ்க்கை
பயணத்திற்கு இறைவனால்
வரையப்படும் பாதை.

### சமாதானம்
முண்டியடித்துக்கொண்டு
மூட்டிவிடும் முகமூடிகள்
இருக்கும்வரை
சமாதானம் என்பது சட்டை
மாற்றும் சடங்குதான்.

### பௌர்ணமி
நிலவெனும் தேவதை
முழுமையாக குளிக்க
பூலோகம் கொண்ட
வெள்ளைத் தினம்.

*அ.ஜெசி, வாழ்க்கைப்*
*பெற்றான்கண்டல்,*
*அளவக்கை.*

# உலகத் திருச்சபை செய்திகள்

## அனைவரும் சமாதானமாக வாழ்ந்தால் இவ்வுலகம் சொர்க்கத்தைப் பிரதிபலிக்கும்

### – திருத்தந்தை 16ம் பெனடிக்ற் –



இன்று உலகின் பல பாகங்களிலும் நடக்கும் வன்முறையாலும் யுத்தத்தாலும் துக்கமான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இவை எம்மை மனித சுதந்திரம் என்பது பற்றி மீண்டும் சிந்திக்க அழைக்கிறது.

நாம் உலகமாகிய இந்தத் தோட்டத்தை பயிரிட்டு வளர்க்கவே இறைவனால் அனுப்பப்பட்டுள்ளோம் என இயற்கையின் நியதி எமக்கு நினைவூட்டுகிறது (தொ.நூல் 2: 8-14). மனிதர்கள் இறைவனோடும் அயலவர்களோடும் சமாதானமாக வாழ்ந்தால் இவ்வுலகம் சொர்க்க பூமியைப் பிரதிபலிக்கும். துரதிஸ்டவசமாக இந்த இறைத்திட்டத்தை பாவம் சிதறடித்துள்ளது. இது பிரிவினைகளையும் மரணங்களையுமே மண்ணுக்கு கொண்டுவந்துள்ளது என்றார்.

90 வருடங்களுக்கு முன்னர் 1ம் உலகப்போரின்போது 15ஆம் பெனடிக்ற் பாப்பரசர், *'போரில் ஈடுபட்டிருக்கும் சக்திகளுக்கு ஒரு குறிப்பு'* என்னும் பெயரில் வெளியிட்ட அறிக்கையில் 1ஆம் உலகப்போரை உடன் முடிவுக்கு கொண்டுவாருங்கள் என வேண்டியிருந்தார்.

90வது ஆண்டு நிறைவில் முதலாம் உலகப்போரை நினைவுகூர்ந்து உலகெங்கும் யுத்தத்தை நிறுத்துங்கள் என தற்போதைய திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார். உலகில் யுத்தத்தை நிறுத்தவும் சமாதானத்தைக் கொண்டுவரவும் உழைக்கும் நோக்கிலேயே 15ம் பெனடிக்ற் பாப்பரசரின் பெயரை தற்போதைய திருத்தந்தை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## இலத்தீன் வழிபாட்டுக்கு மீண்டும் அனுமதி

கத்தோலிக்கத் திருச்சபையில் இலத்தீன் மொழியிலான திரிதெந்தின் திருப்பலியை நிகழ்த்துவதற்கு அனுமதி அளித்துள்ள அதேவேளை இது குறித்து யாரும் பயப்படத் தேவையில்லை என்று திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் உலகின் ஏறத்தாழ 110 கோடி கத்தோலிக்கருக்கு கூறியுள்ளார்.

இது திருச்சபையில் பிளவுகளை ஏற்படுத்தும் அல்லது இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்திற்கு முந்தைய காலத்திற்குக் கொண்டு செல்லும் என்று பயப்படுவது தேவையற்றது என்று குறிப்பிட்டுள்ள அவர், முந்தைய தலைமுறைகள் புனிதமானதாகக் கருதியதும் இன்று நமக்கும் புனிதமானதாக இருக்கும் இலத்தீன் மொழியிலான திருப்பலி திடீரென முற்றிலும் விலக்கப்பட்டதாகவோ அல்லது புண்படுத்துகின்றதாகவோ நோக்கப்படக் கூடாது என்றும் கூறியுள்ளார்.

"Summorum Pontificum" என்று தலைப்பிட்டு உலக ஆயர்களுக்கென திருத்தந்தை அண்மையில் வெளியிட்டுள்ள மோத்து புரோப்பிரியோ தாத்தா என்ற நான்கு பக்கங்கள் கொண்ட புதிய அப்போஸ்தலிக்க கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

*திரிதெந்தின் ரீதி* என்ற பொதுவாக அறியப்பட்டுள்ள 1962ஆம் ஆண்டின் இலத்தீன் திருப்பலியை பங்குக் குருக்கள் நிகழ்த்துவதற்கு விசுவாசிகள் கேட்கலாம். மேலும் பழைய இலத்தீன் ரீதிப்படி திருமுழுக்குப் பெறலாம். அல்லது திருமணச் சடங்குகளை நிகழ்த்தலாம்.

பங்குக் குரு இதற்கு இசைவு தெரிவிக்காவிடில் விசுவாசிகள் மறைமாவட்ட ஆயருக்குப் புகார் கொடுக்கலாம், அப்படியும் நிறைவேறவில்லையெனில் வத்திக்கானை அணுகலாம் என்றும் அக்கடிதம் கூறுகிறது.

## 2008இல் திருத்தந்தை மேற்கொள்ளவுள்ள திருப்பயண விபரம் அறிவிப்பு

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் 2008ஆம் ஆண்டில் அமெரிக்கா ஐக்கிய நாடு, அவுஸ்திரேலியா, பிரான்சின் லூர்து அன்னைத் திருத்தலம் போன்ற பகுதிகளுக்குத் திருப்பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

லூர்து நகரில் அன்னைமரி காட்சி கொடுத்ததன் 150ஆம் ஆண்டை முன்னிட்டு வருகிற ஆண்டில் திருத்தந்தை லூர்து நகருக்குத் திருப்பயணம் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அடுத்த ஆண்டில் நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்திற்கு திருத்தந்தை செல்வதற்கான திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஐக்கிய நாட்டு பாஸ்டன் பேராயர் கர்தினால் ஜோன் மாலேயும் திருத்தந்தையை அடுத்த ஆண்டில் பாஸ்டனுக்கு அழைத்திருக்கின்றார். அமெரிக்க ஐக்கிய நாட்டில் சில குருக்களின் பாலியல் துர்ப்பிரயோகத்தால் ஏற்பட்ட அவப்பெயரைச் சரிசெய்ய இந்தப்பயணம் உதவும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### திருத்தந்தை பரிசுகளைப் பகிர்ந்தளித்தார்

திருத்தந்தை, தனது 80ஆவது பிறந்த நாள், பாப்பிறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் 2ஆம் ஆண்டு ஆகிய தினங்களையொட்டித் தனக்குக் கிடைத்த நன்கொடைப் பணத்தை புனித பூமி, ஆபிரிக்கா மற்றும் பிற தேவையில் இருக்கும் பகுதிகளுக்கு அனுப்பவுள்ளார் என்று திருத்தந்தையின் செயலர் பேரருட்திரு ஜார்ஜ் கனேஸ்வெயின் வத்திக்கான் வானொலிக்கு அறிவித்தார்.

திருத்தந்தையின் 80ஆவது பிறந்த நாளான ஏப்ரல் 16ஆம் தேதியன்று அவரோடு மதிய உணவருந்திய கர்தினால்கள் ஒரு இலட்சம் யூரோக்களை அவருக்கு நன்கொடையாகக் கொடுத்தனர்.

கர்தினால்கள் சார்பில் இதனைத் திருத்தந்தையிடம் கொடுத்த கர்தினால் ஆஞ்சலோ சொதானோ முடியுமானால் புனித பூமிக் கிறிஸ்தவர்களின் தேவைகளை மனதில் கொள்ளுமாறு அவரிடம் கேட்டுக்கொண்டார் என்று கூறப்படுகின்றது.

### திருத்தந்தை விரைவில் ஆஸ்திரியாக்குத் திருப்பயணம்

வருகிற செப்ரம்பரில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் ஆஸ்திரிய நாட்டுக்குத் திருப்பயணம் மேற்கொள்வார் என்று திருப்பீடம் அறிவித்தது. இது அவர் மேற்கொள்ளும் 7வது வெளிநாட்டுப் பயணமும் மற்றும் 2007இல் அவர் மேற்கொள்ளும் ஐரோப்பாவுக்கான முதல் திருப்பயணமும் ஆகும்.

ஆஸ்திரியாவின் மரியசெல் மாதா திருத்தலம் கட்டப்பட்டதன் 850ஆம் ஆண்டை முன்னிட்டு செப்டம்பர் 7 முதல் 9 வரை இப்பயணத்தை திருத்தந்தை மேற்கொள்வார்.

ஆஸ்திரிய அரசுத் தலைவர் கடந்த அக்டோபரில் திருத்தந்தையை வத்திக்கானில் சந்தித்தபோது இத்திருத்தலத்திற்குத் திருப்பயணம் மேற்கொள்ளுமாறு திருத்தந்தைக்கு அழைப்பு விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருத்தந்தை தெரிவிற்கு மீண்டும் புதிய நடைமுறை

புதிய திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் கர்தினால்களின் மூன்றில் இருபகுதி வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும் என்ற பழைய விதி முறையை திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் இன்று மீண்டும் கொண்டுவந்துள்ளார்.

புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுப்பதற்கான கர்தினால்களின் வாக்குப்பதிவில் முதல் மூன்று நாட்களுக்கு எவருமே மூன்றில் இரண்டு பகுதி வாக்குகளைப் பெறாத நிலையில் அதன்பின் ஒருநாள் ஆழ்ந்த செபத்திற்குப்பின் ஏழுமுறை, ஏழுமுறை எனச் செப இடைவெளிகளுடன் வாக்குப் பதிவுகள் நடைபெறும். அப்படியும் தேர்ந்தெடுக்கப்படவில்லையெனில் அதன்பின் அதிக வாக்குகளைப் பெற்றவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று மறைந்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் ஏற்படுத்திய திருத்தத்தினை தற்போது திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் இரத்துசெய்துள்ளார். எத்தனை முறை வாக்குப் பதிவுகள் நடைபெற்றாலும் அதிக வாக்குகள் பெற்ற இருவரிடையே மட்டும் எனப்போட்டி தொடர்ந்தாலும் மூன்றில் இரண்டு பகுதி வாக்குகளைப் பெறுபவரே திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் இலத்தீனில் வெளியிட்ட ***மோத்து புரொப்பிரியோ*** என்ற அவரது ஒரு பக்க ஆணைப்பத்திரம் கூறுகிறது.

திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் வாக்குப்பதிவில் நீண்ட கால தாமதத்தைத் தவிர்ப்பதற்காகவே திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் 1996ஆம் ஆண்டு ***யுனிவெர்சி தொமினிச்சி கிரேஜிஸ*** என்ற ஏடு மூலம் சில விதிகளைத் தளர்த்தியிருந்தார்.

எனினும் திருத்தந்தை 16ஆம் பெனடிக்றின் தற்போதைய சட்டத்திருத்தம், திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் அதிகபட்ச கர்தினால்களின் இசைவைப் பெற்றவராக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது என்று திருப்பீடத்தின் அதிகாரப்பூர்வப் பேச்சாளர் அருட்திரு. பேதெரிக்கோ லொம்பார்தி கூறினார்.

## திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் பற்றிய இரகசிய ஆவணங்கள் வெளிவருகிறது

திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் சார்பான எல்லா இரகசிய ஆவணங்களும் வருகிற செப்ரம்பரில் வெளியிடப்படும் என்று திருப்பீடம் அறிவித்துள்ளது.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் ஆணையின்படி, கோடை விடுமுறை முடிந்து வத்திக்கானின் இரகசியச் சுவடிகள் மற்றும் திருப்பீடத்தின் ஆவணங்கள் அலுவலகம் மீண்டும் செயல்படத் தொடங்கும் செப்டம்பர் 18ஆம் திகதியிலிருந்து திருத்தந்தை பதினோராம் பத்திநாதர் தொடர்பாக எல்லா இரகசிய ஆவணங்களும் வரலாற்று ஆய்வாளர்களுக்கு அனுமதிக்கப்படும் என்று திருப்பீடம் அறிவித்தது. 1922, பிப்ரவரி 6ஆம் திகதி முதல் 1939, பிப்ரவரி 10ஆம் திகதி வரையிலான திருத்தந்தை பதினோராம் பத்திநாதர் சார்பான எல்லா இரகசியக் கோப்புகளும் அவ்வலுவலகத்தின் விதி முறைகளின்படி வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கு அனுமதிக்கப்படும்.

ஜெர்மனியின் கடும் தேசியவாதம் மற்றும் இனவெறியைக் கண்டித்து அத்திருத்தந்தை எழுதிய ***குமானி ஜெனெரிஸ் ஊனித்தாத்தஸ்*** என்ற மனித இனத்தின் ஒற்றுமை பற்றிய அவரின் வெளியிடப்படாத சுற்றுமடலும் அந்த ஆவணங்களில் ஒன்றாகும்.

இது வெளியிடப்படுவதற்கு முன்னர் அத்திருத்தந்தை இறந்ததால் அது இதுவரை வெளியிடப்படவே இல்லை.

## மகாத்மா காந்தியின் பிறந்த தினம் உலக அகிம்சா தினமாகப் பிரகடனம்



மகாத்மா காந்தி பிறந்த தினமான ஒக்டோபர் 2அம் திகதியை சர்வதேச அகிம்சா தினமாக ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடுவதற்கு ஐக்கிய நாடுகள் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு உதவியவரும், சுதந்திரத்திற்கும் குடியுரிமைக்கும் போராடுவதற்கு உலகெங்கும் பல்வேறு இயக்கங்களுக்குத் தூண்டுதலாக இருந்தவருமான மகாத்மா காந்தி பிறந்த நாளை உலக அகிம்சா தினமாகக் கொண்டாட வேண்டுமென்று இந்தியாவின் வெளியுறவு விவகார அமைச்சர் ஐ.நா.சபையில் கேட்டுக் கொண்டார்.

இக்கோரிக்கைக்கு 192 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐக்கிய நாடுகள் நிறுவனம் இசைவு தெரிவித்துள்ளது.

## கத்தோலிக்கம் ஏழைகளுக்கு நம்பிக்கை அளிக்கிறது

### பிறேசில் நாட்டு ஆயர் கருத்து

விசுவாசிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதாக உறுதிமொழி கொடுத்து அவர்களை மதம் மாற்றும் சில பிரிவினைவாதக் கிறிஸ்தவ சபைகள் போலன்றி கத்தோலிக்க திருச்சபையானது ஏழைகளுக்கு நம்பிக்கை அளித்து வருகின்றது என்று பிறேசில் நாட்டு ஆயர் ஒருவர் கூறினார்.

பிறேசில் நாட்டு மக்களின் சமயப்பற்று பற்றி ஜெத்தூலியோ வார்காஸ் அமைப்பு நடத்திய கருத்துக் கணிப்பையொட்டி பத்திரிகையாளரிடம் பிரேசில் ஆயர்கள் சார்பில் பேசிய ஆயர் ஜோவாக்கிம் மோல் குய்மாரெஸ், திருச்சபை ஏழைகளுக்குப் பணத்தை அல்ல மாறாக நம்பிக்கையைக் கொடுக்கிறது என்றார்.

பிறேசில் நாட்டு ஏழைகளில் பலர் கத்தோலிக்க திருச்சபையைவிட்டு விலகி புதிய பிரிவினைவாதக் கிறிஸ்தவ சபைகளில் சேர்ந்து வருவது குறித்து கருத்துத் தெரிவித்த ஆயர் குய்மாரெஸ், ஏழைகள் மத்தியில் வளமையின் இறையியல் கருத்துக்கள் பரப்பப்பட்டு வருவதைக் காரணமாகச் சுட்டிக்காட்டினார்.

2000ற்கும் 2003ற்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற மக்கள் தொகை பெருக்கத்தின் விகிதத்திற்கேற்ப கத்தோலிக்கரின் எண்ணிக்கையும் அதிகரித்ததாக காஸ் அமைப்பின் ஆய்வு தெரிவிக்கிறது.


# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### என் தாய்!

அன்று நான் ஜனனத்தில்
பார்த்த முதல் முகம் அவள்.
இன்று தந்தையை இழந்த எனக்கு
இரு கண்களான உயர் தீபம் அவள்!
கண்ணீர் வடிக்கும் என் கண்களுக்கு
ஒத்தணம் கொடுக்கும் கைக்குட்டை.
சோர்ந்து போகும் என் மனதுக்கு
உற்சாகம் அளிக்கும்
ஊன்றுகோல்.
சவால் நிறைந்த வாழ்க்கையில்
அதை எதிர்நோக்கும்
துணிவை ஏற்படுத்தியவள்.
என் ஒவ்வொரு
உயர்ச்சிக்காகவும்
தன்னைத் தியாகம் செய்பவள்.
இன்றுவரை எனக்காகவும்
என் சகோதரர்களுக்காகவும்
தன்னை மெழுகாக
உருக்குபவள்.
தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ
வழிகாட்டிய, ஒளிகாட்டிய ஒளிவிளக்கு!
கல்வி கற்பதற்காய் கல்லூரி வந்தாலும்
பனுவல்களைத் திறக்கையிலே
என் கண்முன் நின்று நம்பிக்கை ஊட்டுபவள்.
அவள்தான் எனக்கு முதன்மையானவள்.
அவளே என் "தாய்".

*இ. குயின்சி, அடம்பொன்தாழ்வு*



### ஆடும்வரை ஆடு!

ஓ......ஓகோ!..... வழி தவறிய ஆடுகளே
பழி சுமக்கத் துணிந்தீர்களே!
விழி இருந்தும் குருடாகி
மொழி இருந்தும் கருத்தழிந்து
வழிதவறிப் போனீர்களே!
மேய்ப்பனுக்கு ஏய்ப்புக்காட்டி
மனிதமேன்மை மறந்தீர்களே!
ஆப்பு இழுத்த குரங்காக
ஆடுமுன்னே காப்பதற்கு வழி உண்டு
கண்டுகொள்ள மாட்டீர்களா?
காணாவிட்டால் பட்டுத் தெளியுங்கள்.
கேட்டு உணருங்கள்!

*செ. ஞானராசா, திருகோணமலை*

### வாழ்க்கை



வேதனையின் விளிம்பு
கண்ணீரின் கரை
சோகத்தின் மையம்
இன்பத்தின் மின்னல்
சாதனையின் ஓரம்
சகிக்கமுடியாத சில பாரம்
எல்லாம் கலந்த கலவை
இதுதான் வாழ்க்கை!

*செ. பஸ்ரியான் சுரேன் (ஹாம்)*
*சாளம்பன், பிள்ளையார்பிட்டி*

தொடர் கட்டுரை – அங்கம் 51

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருட்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -



### வட இலங்கையில் பாடுகளின் காட்சிகள்

### 19. "பாசோ" உடக்கு பாஸ் பாடுகளின் காட்சிகள்

#### அறைந்து இறக்கும் சடங்கும், ஆசந்தியும்

இவ்வாறு நூலின் துணைகொண்டு திருச்சுரூபத்தை அசைப்பதற்கும், இயக்குவதற்கும் மிகவும் நுட்பமான முறையில் அது அமைக்கப்பட்டதே காரணமாகும். கிறிஸ்து சிலுவையில் மரித்தார் என்னும் வாசகமும், காட்சியும் இடம்பெற்றவுடன் கூடியுள்ள மக்கள் அனைவரும் முழந்தாட்பணிந்து வியாகுல பிரசங்கத்திலிருந்து 'சர்வ தயாபர இயேசுவே' என்னும் பாடலை இறை இரக்கமும், பாவங்களுக்கு மன்னிப்பும் வேண்டி உருக்கமாகப் பாடுவர். 'சர்வ தயாபர இயேசுவே' என்னும் பாடல் பாடும் வேளையில் பலரும் கண்ணீர் சிந்தித் தங்கள் பாவங்களுக்காக மன்னிப்பு வேண்டுவர்.

வியாகுல பிரசங்கத்திலிருந்து 9ஆம் பிரசங்கம் பாடப்படும். இது இயேசுவின் திரு உடல் சிலுவையினின்று இறக்கப்பட்டு அவரது திருத்தாயாரின் மடியில் வளர்த்தப்பட்டது பற்றியதாகும். எனினும், இங்கு வியாகுல பிரசங்கப் பாடலுடன் இசைவானதாக திரு உடல் சிலுவையினின்று இறக்கப்படும் சடங்கு இடம்பெறும். இதற்கெனத் தயார்செய்யப்பட்ட பாடையில் திருஉடல் (கல்லறைச் சுரூபம்) வைக்கப்பட்டு மரணச் சடங்குப் பவனி இடம்பெறும். இப்பவனி ஆலயத்தைச் சுற்றி இடம்பெறும் அல்லது கிராமத்தின் முக்கிய பாதைகள் வழியே இடம்பெறும். இப்பவனியில் எல்லா மக்களும் எரியும் மெழுகுவர்த்திகளுடன் இரண்டு நிரைகளில் இயேசுவின் மரணப் பவனியில் பங்குகொள்ளும் மனநிலையுடன் பக்தியாகப் பங்குகொள்வர்.

இப்பவனியின்போது பாவமன்னிப்புப் பாடல்கள், ஒப்பாரி, புலம்பல், காதல் என்னும் துன்பியல்சார் பாடல்கள் பாடப்படும். பாடை ஆலயத்தை அடைந்ததும் எல்லா மக்களும் இயேசுவின் திரு உடலை முத்தி செய்யும் மனநிலையுடன் கல்லறைச் சுரூபத்தை முத்தி செய்து தங்கள் பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டுவர். இச்சடங்கின் நிறைவாகவும், முக்கிய நிகழ்வாகவும் முத்தி செய்தல் இடம்பெறும். இச்சடங்குகளில் பங்குகொள்வது ஒருவரின் ஆன்மீகப் புதுப்பித்தலுக்கு ஏற்றதொரு அக, புறச் சூழலை ஏற்படுத்துகின்றது.

#### மனிதர் நடிக்கும் காட்சிகள்

உடக்கினால் நிகழ்த்தப்படும் பாடுகளின் காட்சியின் தொடர்ச்சியாகவே மனிதர்களினால் நடிக்கப்படுகின்ற பாடுகளின் காட்சிகள் இலங்கையில் தோற்றம் பெற்றன எனக்கொள்ளலாம். உடக்கினால் நிகழ்த்தப்படும் பாடுகளின் காட்சி ஆள் அணி வலுவும், நீண்ட கால ஆயத்தம், பல நாட்கள் ஒத்திகை, பெரும் பணச்செலவு எனப் பன்நிலைத் தேவைப் பூர்த்தியை உள்ளடக்கிய செயற்பாடாகும். 1923ஆம் ஆண்டு பொறலச (Boralessa) என்னுமிடத்தில் சிங்கள மொழியில் மனிதர்களால் நடிக்கப்பெற்ற பாடுகளின் நாடகமே இலங்கை முழுவதும் மனிதர்களால் நடிக்கப்பெற்ற முதல் நாடகமாகும்.

அண்ணளவாக 30 வருடங்களுக்கு பின்பு, அதாவது, 1952ஆம் ஆண்டு மனிதர்களால் நடிக்கப்பெற்ற பாடுகளில் நாடகம் இலங்கையின் வடபகுதியில் ஆற்றுகை செய்யப்பட்டது. யாழ் - புனித பத்திரிசியார் கல்லூரியின் சமகாலத்து அதிபராக இருந்த அருட்திரு. லோங் OMI அவர்களின் ஊக்குவிப்பினால் மாணவர்கள் பாத்திரமேற்று ஆங்கில மொழியில் மேடையேற்றப்பட்டது. இதற்கான நாடகப் பிரதி ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பப்பலோ (Buffalo) என்னும் இடத்திலிருந்து எடுத்துவரப்பட்ட ஆங்கிலப் பிரதி ஆகும்.

இலங்கை மக்கள், குறிப்பாக, வடபகுதிக் கத்தோலிக்க மக்கள் உடக்கினாலான பாடுகளின் காட்சிக்கே நன்கு அறிமுகமாயிருந்தவர்கள். இவ்வாறாக நிகழ்த்தப்பட்ட உடக்குகளினாலான பாடுகளின் காட்சிகள் ஒரு சமயச் சடங்காகக் கருதப்பட்டதோடு, மக்களால் ஏற்கப்பட்டு மக்கள் மத்தியில் அதிக வரவேற்பையும் பெற்றிருந்தது. இதில் பயன்படுத்தப்படும் இயேசுவின் பிரதிபலிப்பான சுரூபங்கள், குறிப்பாகக் கல்லறைச் சுரூபம் காட்சி தவிர்ந்த ஏனைய காலங்களில் மக்களின் வணக்கத்திற்காக ஆலயங்களில் வைக்கப்பட்டிருந்தன. இதனால் உடக்குகளினால் நிகழ்த்தப்பட்ட இவை வெறும் காட்சிகளாக அன்றி, காட்சி சடங்குகளாகவே கொள்ளப்பட்டன. இதனால் மக்கள் இக்காட்சி -களைப் பார்த்தார்கள் எனக் கூறுவதிலும் மேலாக இதில் பக்தி உணர்வுடன் பங்குகொண்டார்கள் என்பதே மிகப் பொருத்தமானது.

(தொடரும்....)

# சிறுகதை

## அநாதை

**நா.சுபாசினி**
**ஆலங்குளம், வட்டக்கண்டல்**



எனது பெயர் சுமன். நான் ஓர் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவன். எனது அம்மா அப்பாவைச் சிறு வயதிலேயே இழந்துவிட்டேன். வேறு உறவு என்று சொல்ல எனது அப்பாவின் சகோதரியும் அவளுடைய மகள் ஒரு கால் ஊனமுற்ற புவனாவும்தான் இருந்தனர்.

அத்தையே கஷ்டப்பட்டு உழைத்து என்னைப் படிப்பித்து வந்தாள். அவளுக்கு என்னை ஓர் நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்ற ஆசை. அதுவும் வீண்போகவில்லை. எனக்கு உயர்தர வகுப்புப் பரீட்சையில் நல்ல பெறுபேறு கிடைத்தது. பல்கலைக்கழக அனுமதியும் கிடைத்தது. படிப்பதற்காக வன்னியில் இருந்து யாழ்பாணப் பல்கலைக்கழகத்திற்கு எனது அத்தை வழியனுப்பி வைத்தாள். எனக்காக அவள் கஷ்ரப்பட்டு உழைத்து படிப்புச் செலவிற்காக மாதம், மாதம் பணமும் அனுப்பி வைப்பாள். கஷ்ரத்தை உணர்ந்த நான் பல்கலைக் - கழகத்திலும் நன்றாகப் படித்து முதல் மாணவனாகவே திகழ்ந்தேன்.

அங்குதான் நல்லதொரு நண்பனின் நட்புக் கிடைத்தது. அவன் பெயர் கஜன். எனது இன்ப துன்பங்கள் அனைத்தினையும் அவனிடமே கூறுவேன். அவனும் அப்படித்தான் என்னிடம் நடந்துகொள்வான். ஆனால் அவன் யாழ்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவன். உயர்ந்த பணக்கார வீட்டுப் பிள்ளை. பணக்காரன் என்ற பெருமைக் குணம் கொஞ்சம்கூட அவனிடம் இல்லை. ஏழைகளின் உள்ளத்தை நேசிக்கும் மனப்பக்குவமே அவனிடம் இருந்தது.

அவன் வீட்டிற்கு அருகிலேதான் எங்கள் கல்லூரியில் கற்கும் மாணவி பானுஜாவின் வீடும் இருக்கிறது. பானுஜா என்னுடன் நன்றாகவே பழகுவாள். எல்லோரிடமும் என்னைப்பற்றிப் பெருமையாகவே பேசுவாள். ஆனால் கஜனுடன் மட்டும் பேசவே மாட்டாள். காலப்போக்கில் எமது நட்பு காதலாக மாறியது. எனது காதல் பற்றி ஒரு நாள் கஜனிடம் சொன்னேன். ஆனால் அவனோ எமது காதலை விரும்பவில்லை. "வேறு யாரையும் காதலித்தால் பரவாயில்லை. போயும் போயும் இந்த பானுஜாவையா காதலிக்கப் போறாய்? இவளை மட்டும் உனது மனதில் இடம்பிடிக்கச் செய்துவிடாதே" என்று கூறிவிட்டு கஜன் அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டான்.

ஒவ்வொரு நாளும் எனது நண்பன் அவளைப் பற்றி தப்பாகவே கூறுவான். ஆனால் நான் அவற்றைப் அப்பொழுது நம்பவில்லை. அவளை நம்பி அவளுடைய போலிக்காதலை உண்மை என நம்பி எனது நண்பனை நம்பாமல் அவனைக் கைவிட்டேன். பின்பு எனது கல்லூரிப் படிப்பும் முடிவடைந்து பிரியாவிடையும் நடைபெற்றது. எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு பானுஜாவை விட்டுப்பிரிய மனமில்லாமல் ஒருவாறு பிரிந்து எனது சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தேன்.

இங்கு வந்து அத்தையின் ஆசைப்படி பெரிய அரச தொழில் ஒன்றும் கிடைத்தது. என்னைப் படிப்பித்து இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்ட அத்தையையும், அவளின் மகள் புவனாவையும் வசதியாக வாழவைத்தேன். ஆனால் நானும் கல்லூரியில் இருந்து வந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. பானுஜா்விடம் இருந்து இது வரைக்கும் இரண்டு கடிதங்கள் மாத்திரமே வந்தது. நானும் நிறையக் கடிதங்கள் போட்டேன். பதில் ஏதும் வரவில்லை. .யார் மூலம் தொடர்புகொண்டு பானுஜாவைக் கேட்பது? அதுதானே அன்று நண்பனையும் நம்பாமல் கைவிட்டுவிட்டேன்.

பின்பு நான் ஒரு முடிவிற்கு வந்தேன். எனது அத்தையிடம் எனது காதலைக் கூறி எப்படியாவது பானுஜாவை சந்தித்து திருமணம் செய்து கொள்வோம் என்று நினைத்தவாறு அத்தையிடம் சென்று நடந்தவற்றைக் கூறினேன்.

"நான் இவ்வளவு நாளும் எத்தனை ஆசைகளை வளர்த்து உன்னை கஷ்டப்பட்டு படிப்பித்து இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டேன். இதுதானா நீ எனக்குச் செய்யும் நன்றிக்கடன். என்ர ஒரு கால் ஊனமுற்ற மகள் புவனாவை யார் திருமணம் செய்வது?" என்று தனது மனதில் உள்ளவற்றையெல்லாம் என்னிடம் கொட்டினாள்.

ஆனால் நானோ எனது காதலை மறக்கவில்லை. "நான் திருமணம் செய்தால் பானுஜாவைத்தான் செய்வேன். உங்கள் சுய நலத்திற்காக என்னை வளர்த்துள்ளீர்கள்" என அவளிடம் மனம் நோகும்படி கதைத்துவிட்டேன். அதை அவளால் தாங்க முடியவில்லை. மறுநாள் வழமைபோல் நான் வேலைக்குச் சென்று வீடு திரும்பும்பொழுது எனது அத்தையினதும், புவனாவினதும் உயிரற்ற உடலைத்தான் கண்டேன்.

வீட்டினுள் அருகில் ஒரு சிறுமடல் இருந்தது. எடுத்துப் பிரித்தேன்.

அன்புடன் சுமனுக்கு! உன் அத்தை எழுதிக் கொள்வது என்னவெனில், "நீ என்னைவிட எனது பேச்சைவிட நீ காதலித்த பெண்ணையே பெரிதாக எண்ணி உன்னை நான் எனது சுயநலத்திற்காக வளர்த்தேன் என்ற வார்த்தையைக் கூறியதை என்னால் தாங்க முடியாமல் போய்விட்டது. எனது ஊனமுற்ற காலையுடைய மகளுக்கு வாழ்வு கொடுக்க யாருமில்லை. இனி எம்மை நீ காப்பாய் என்று எப்படி நம்புவது? எனவேதான் நானும் புவனாவும் தற்கொலை செய்துகொண்டோம். நீ நினைத்தபடி அவளுடன் நன்றாக வாழ்"

*- இது உனது அத்தை*

எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை அந்த வேளையில்தான் பக்கத்து வீட்டு பொன்னம்மாக்கா படலையில் நின்று கூப்பிடும் சத்தம் கேட்டுப் போனேன். அவர் ஒரு கடிதத்தை நீட்டி தபால்காரன் உன்னிடம் கொடுக்கும்படி தந்தார். எனச் சொல்லிக் கடிதத்தைத் தந்து விட்டுச் சென்றார். வெளிநாட்டில் இருந்து வந்த கடிதம்போல் தெரிந்தது. உடனே பிரித்துப் பார்த்தேன்.

சுமனுக்கு,

பானுஜா எழுதிக் கொள்வது என்னவெனில் நீ என்னிடமிருந்து பல நாட்களாக மடலை எதிர்பார்த்துக் காத்திருப்பாய். ஆனால் உனக்கு ஏமாற்றமாகத்தான் இருந்திருக்கும். இருந்தும் எழுதுகிறேன். நான் உன்னைக் கல்லூரியில் காதலித்த ஞாபகத்தை மறந்து விடு. நான் உன்னைப் போலியாகவே காதலித்தேன். உன் நண்பனை உன்னிடமிருந்து பிரிப்பதற்காகவே உன்னை நேசித்தேன். உன் நண்பனை நான் மனசார காதலித்தேன். ஆனால் அவன் என்னை நேசிக்கவில்லை. உனது நட்பினைத்தான் ஆழமாக நேசித்தான். உனது ஏழ்மைக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்து உனது அத்தையின் ஊனமுற்ற மகளைத்தான் திருமணம் செய்வேன், செய்து அவளுடன்தான் வாழுவேன் என முடிவாகச் சொன்னான். அதற்காக அவனை உன்னிடம் இருந்து பிரித்தால் மாத்திரமே அவனைத் திருமணம் செய்யலாம் என எண்ணினேன். அதுதான் தற்பொழுது முடியாமல் போய்விட்டது. அவன்தான் உன்னுடைய நினைவுடனும் புவனாவுடனும் இருந்து மன நோயாளியாக மாறி இறந்துவிட்டான். நான் தற்பொழுது எனது மாமாவின் மகனான சுரேஸைத் திருமணம் செய்து கனடாவில் சந்தோஷமாக வாழ்கின்றேன்.

நன்றி - இப்படிக்கு திருமதி சுரேஸ

என்று எழுதி முடித்திருந்தாள். மடலைப் படித்த எனக்கு எல்லாமே இருள் மயமாக இருந்தது.

அம்மா அப்பாவைச் சிறு வயதில் இழந்தேன். உறவு என்று சொல்லவிருந்த அத்தையையும் புவனாவையும் இழந்தேன். என்னை உயிரிலும் மேலாக நேசித்த நண்பன் கஜனை இழந்தேன். எல்லாவற்றையும் இழந்த நிலையில் ஓர் அனாதை என்ற நினைவுடன் உயிரற்ற அத்தையினதும் புவனாவினதும் உடலைத் தாங்கியவாறு மயானம் நோக்கி நடந்தேன்.

*(யாவும் கற்பனை)*

## துளிப்பா

**நம்பிக்கை**
வாழ்க்கை வண்டியின்
அச்சாணி


**மணிக் கூடு**
கடமையிலிருந்து விலகாத
அதிசிறந்த தோழன்

**கல்வி**
மானிடப்பிறப்புகளுக்கு
வழங்கப்பட்ட கட்டாய விசா

*ஜே. லூசியூஸ் ஆன்சன்*
*மருமாதா சிறிய குருமடம்*
*மன்னார்.*

# நற்கருணையும் நாமும்

அன்ரன் அருள்சுரேசா
மன்/ கருங்கண்டல் ம.வி,
வட்டக்கண்டல்.



நற்கருணை என்பது இயேசுவின் உடலும் இரத்தமும் ஆகும். நற்கருணை நம் ஆன்ம உணவு. நற்கருணை என்பது இயேசுவின் உடனிருப்பு, நற்கருணை மண்ணக - விண்ணக மன்னா, நற்கருணை வறுமையின் கொடுமையைத் தீர்க்கும் உணவு, நற்கருணை உறவை வளர்க்கும் உணவு.

## நற்கருணை இயேசுவின் உடல் இரத்தம்

இறைவனின் வார்த்தை ஆற்றல் மிக்கது. எனவே, "கடவுள் ஒளி உண்டாகட்டும்" என்றபோது ஒளி உண்டாயிற்று. அதைப்போன்றே புதிய ஏற்பாட்டில் நம் ஆண்டவர் இயேசுவும் தம் கடைசி இராவுணவின்போது அப்பத்தை எடுத்து, "இது என் உடல்" என்றார். பிறகு திராட்சை இரசம் நிறைந்த கிண்ணத்தை எடுத்து, "இது என் இரத்தம்" என்றார். இதை அவர் மொழிந்தபோது அப்பம் உண்மையாகவே அவருடைய திருவுடலாக மாறியது. திராட்சை இரசம் திரு இரத்தமாக மாறியது. மேலும், "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற இயேசுவின் கட்டளையைச் சிரமேற்கொண்டு திருப்பணியாளர்கள் திருப்பலியில் அப்பத்தையும் திராட்சை இரசத்தையும் வசீகரம் செய்யும்போது அந்த அப்பம் உண்மையாகவே நம் ஆண்டவர் இயேசுவின் திருஉடலாக மாறுகின்றது. இந்த உண்மைச் சம்பவங்களின் அடிப்படையிலே நற்கருணை என்பது உண்மையாகவே இயேசுவின் திருவுடல் திருஇரத்தம் ஆகும்.

## நற்கருணை நம் ஆன்ம உணவு

மனிதன் உயிர் வாழவும் உடல் சோர்வு நீங்கிப் புத்துணர்ச்சி பெறவும் உணவு இன்றியமையாததாகும். அதுபோலவே நம் ஆன்ம வாழ்விற்கு உணவாக இயேசு தம்மையே அளிக்கின்றார். "நானே விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த உயிருள்ள உணவு" என்றும் "என் இரத்தம் உண்மையான பானம்" என்றும் இயேசு கூறினார். மேலும் இவ்வாக்குறுதியை அவர் நற்கருணை வழியாகச் செயல்படுத்துகிறார். ஏனெனில் தம் உடல், இரத்தம் போன்றவற்றை நம் ஆன்ம உணவாக நமக்கு அளிப்பதற்கு அவர் மெய்யாகவே நமக்காகப் பிரசன்னமாகின்றார்.

## நற்கருணை என்பது பலி

பழைய ஏற்பாட்டில் இறைவனின் மன்னிப்பைப் பெறவும், இறைவனோடு ஒப்புரவாகவும் இறைவனின் ஆசியைப் பெறவும் தானியங்கள், ஆடுகள், காளைகள், விலங்குகள் ஆகியவை பரிகாரப் பலியாகவும், தகனப் பலியாகவும் ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் புதிய ஏற்பாட்டிலோ இறைவனின் மன்னிப்பைப் பெறவும் அவரோடு ஒப்புரவாகவும் அவரது அருளைப் பெறவும் உலகின் பாவங்களை போக்கும் செம்மறியாக இயேசு தம்மையே சிலுவையில் பலியாக்கினார். இந்தப்பலி பழைய ஏற்பாட்டுப் பலிகளையெல்லாம் மிஞ்சி நிற்கும் மேலான உயர்ந்த ஈடிணையில்லாத ஒப்பற்ற பலி ஆகும். எல்லா மனிதருக்கும் எல்லாக் காலத்திற்கும் ஒரே முறையில் ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கும் பலி ஆகும்.

எனவே "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற இயேசுவின் கட்டளைக்கேற்ப திருப்பலி நிறைவேற்றப்படும்பொழுது அதில் வசீகரமாகும் அப்ப இரச வடிவில் சிலுவையிலே பலியான இயேசு தம் உடலையும் இரத்தத்தையும் மீண்டும் மீண்டும் அங்கே உண்மையாகவே உடனிருக்கச் செய்தார். ஏனெனில் திருநிலைப்படுத்தப்பட்ட அருட்பணியாளரின் கையால் ஒப்புக்கொடுக்கப்படும் ஒவ்வொரு சமூகத்திலும் இப்பலி எப்போதும் புதிதாக மீண்டும் நிறைவேற்றப்படுகின்றது.

கிறிஸ்துவின் பலியும் நற்கருணைப் பலியும் ஒரே பலியே. இதைப் புனித ஜான் கிறிசோஸ்தோம் மிக அருமையாகச் சொன்னார். "இன்று ஒன்று நாளை மற்றொன்று என்று இல்லாமல் எப்போதும் நாம் ஒரே ஆட்டுக்குட்டியைப் பலியிடுகிறோம். இக்காரணத்திற்காக இது எப்போதும் ஒரே பலி. இப்போதுகூட நாம் முன்பு ஒப்புக்கொடுக்கப்பட்ட எப்போதும் வசீகரம் செய்யப்படாத அந்தப் பலிப்பொருளையே ஒப்புக்கொடுக்கிறோம்" திருப்பலி சிலுவைப் பலியை உடனிருக்கச் செய்கின்றது. அந்தப்பலிக்கு எதையும் சேர்ப்பதில்லை, அதைப் பலுகச் செய்வதும் இல்லை. மாறாகக் கிறிஸ்துவின் ஒரே நிலையான மீட்பளிக்கும் பலியை, வரலாற்றில் எப்போதும் உடனிருக்கச் செய்யும் அதை நினைவுகூரும் கொண்டாட்டமே நற்கருணைப் பலி ஆகும்.

இவ்வாறு நற்கருணை மறைபொருளின் பலி இயல்பு சிலுவையிலிருந்து வேறுபட்டதாகவோ அத்தோடு தொடர்பற்றதாகவோ அல்லது கல்வாரிப்பலியை மறைமுகமான முறையில் மட்டும் உணர்த்துவதாகவோ கருதப்படக்கூடாது.

## நற்கருணை மண்ணக விண்ணக மன்னா

பழைய ஏற்பாட்டில் இறைவன் தேர்ந்துகொண்ட இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் பசியால் வாடியபோது அவர்களது பசியைப் போக்க வானினின்று "மன்னா" என்ற உணவு வழங்கப்பட்டது. அந்த உணவு சாதாரண உணவாக மட்டும் நினைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஏனெனில் இறைவனின் கட்டளைப்படி இறைவனின் உடனிருப்பை உணர்த்தும் ஒரு அடையாளமாகவும் அது இருந்துள்ளது. ஆகவேதான் தம் மக்கள் இஸ்ராயேலரோடு தாம் உடனிருப்பதை உணர்த்தும் பொருட்டு உடன்படிக்கைப் பேழையில் பத்துக்கட்டளைப் பேழையோடும் ஆரோனின் கோலோடும் சிறிய மன்னா வைக்கப்பட்டது.

இவ்வாறு பழைய ஏற்பாட்டில் மன்னா ஒரு உணவாகவும் அதேவேளையில் இறைவனின் உடனிருப்பாகவும் திகழ்ந்தது. அதுபோலவே புதிய ஏற்பாட்டில் இயேசு, "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே" என்கிறார். மேலும் "மன்னா உண்ட முன்னோர் அழிந்துபோயினர். ஆனால் நான் தரும் அப்பத்தை அதாவது உணவை உண்பவன் என்றுமே வாழ்வான்" என்று கூறுகிறார். இவ்வாறு தாமே வானினின்று இறங்கி வந்த புதிய ஏற்பாட்டு "மன்னா" என்பதையும் நற்கருணையில் தம் மக்களின் ஆன்ம உணவாக இருப்பதையும் தம் உடனிருப்பு எக்காலத்திற்கும் அதில் தங்கியிருப்பதையும் இயேசு உணர்த்துகிறார்.

ஆகவே புதிய ஏற்பாட்டில் இயேசு நமக்கு வழங்கும் ஆன்ம உணவிற்கும் அவரது நிலையான உடனிருப்புக்கும் பழைய ஏற்பாட்டு மன்னா ஒரு முன்னோடி மட்டுமே. புதிய ஏற்பாட்டின் பலிப்பொருளாக விளங்கி மனிதர்களாகிய அனைவரையும் வாழ்விக்கும் மண்ணக விண்ணக மன்னாவை நாம் என்றும் விசுவசிப்போம்.

## வறுமையின் கொடுமையைத் தீர்க்கும் உணவு

"கொடிது கொடிது வறுமை கொடிது......" என்கிறார் ஔவையார். மனிதனின் அத்தியாவசியத் தேவைகளை நீர், உணவு, உடை, உறையுள், பாதுகாப்பு என ஏறுவரிசையில் அடுக்கிக்கொண்டே போகலாம். முதற்படிகளான நீரும் உணவும் மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானதாகத் தேவைப்படுகிறது என்பதை உலகமே அறியும்.

வறுமையால் முதன் முதலில் தோன்றுவது பட்டினியாகும். அதைத் தீர்ப்பதற்காகவே நம் ஆண்டவர் இயேசு புனித நற்கருணையில் மெய்யாகவே வீற்றிருக்கிறார். நம் நாட்டில் தற்போது தலைவிரித்தாடும் பட்டினி, கொள்ளை, நோய், கொலை ஆகிய இவை யாவும் தீரவேண்டுமானால் ஒவ்வொரு மனிதனும் நற்கருணை வாழ்வில் இணைய வேண்டும்.

மனிதர்கள் இன்று நற்கருணையில் விசுவாசமுள்ளவர்களாக இருக்கின்றார்களா? இன்று உலகில் கத்தோலிக்கரின் எண்ணிக்கை 110 கோடி எனச் சொல்லிப் பெருமைப்படுகின்றோம். ஆனால் எவ்வளவு தூரம் அனைவரும் நற்கருணையை விசுவசிக்கின்றோம் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இன்று ஐரோப்பா, வட அமெரிக்கா போன்ற நாடுகளில் ஆலயங்கள் வெறுமையாகவே கிடக்கின்றன. முதியவர்களின் திருச்சபையாக அங்கு திருச்சபை மாறிவிட்டதோ என்று இப்போது எண்ணத் தோன்றுகின்றது. பெரும்பான்மையினர் வெறுமனே குறிப்பிட்ட சில திருநாட்களுக்கும் அருட்சாதனக் கடமைகளுக்கும் மட்டுமே ஆலயம் செல்கின்றனர்.

## உறவை வளர்க்கும் உணவு

இந்நவீன உலகில் பூகோள மயமாக்கலும், நவீனத்துவமும், நுகர்வுக் கலாச்சாரமும் மனிதனைத் துன்பப்படுத்துகிறது, மனிதர்களைப் பல பிரச்சினைகளில் சிக்கவைத்துள்ளது. மனிதர்கள் உறவைத் தொலைத்துவிட்டு, உணர்வற்ற வாழ்வை வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். மனிதர்கள் உறவுச் சிக்கல்களில் உழன்றுகொண்டிருக்கின்றனர்.

நற்கருணை உறவை வளர்க்கும் உணவாக உள்ளது. ஒரே அப்பத்தில் பங்கெடுக்கும் நாம் அனைவரும் ஒரே குடும்பத்தின் பிள்ளைகள்தானே! இறைவனை, "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே" என்று கூவி அழைக்கும் நாம் அனைவரும் சகோதரர்கள்தானே?

இயேசு மரமாகவும் அந்த மரத்தின் கிளைகளாக உலக மக்களும் உள்ளனர். மரத்தின் கிளைகளை வளரச் செய்வதும், அதனை நிலையானதாக வைத்திருப்பதும் வேரினதும் நீரினதும் கடமை ஆகும்.

அதுபோலவே திருச்சபை ஒரு மரம் எனவும் இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள், பெரியோர்கள் ஆகிய அனைவரும் அம்மரத்தின் கிளைகள் எனவும் அவர்களுக்குரிய நீராக, வேராக இருப்பது நற்கருணை எனவும் கூறப்படுகிறது.

இன்றைய சமயங்கள் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் மையப்படுத்தியிருப்பதால் மதத்தில் மனித நேயம் குறைந்து வருகின்றது. முரட்டுத்தனமான முறைகள் பரிணமித்து வருகின்றன.

இதைத்தான் இந்திய இறையியலாளர் செபஸ்ரியன் காப்பன் "காசே நமது தெய்வம் ஆகிவிட்டது. கடைகளும் சந்தைகளுமே நம் கோவில்களாகிவிட்டன. புதுப்புது சொகுசுகளையும் சுகங்களையும் வாங்கி அனுபவிப்பதே மனிதர்களின் தொழிலாகி விட்டது" என்கிறார்.

எனவே உறவுகள் சிதறுண்டு இருக்கும் இன்றைய நுகர்வுக் கலாச்சாரச் சூழலில் உறவை வளர்க்கும் உணவாக நற்கருணையை நம் அன்னையாம் திருச்சபை நமக்குத் தருகின்றது.

எனவே நற்கருணைநாதரின்மீது பூரண விசுவாசம்கொண்டு வாழ என்றுமே எம்மை அர்ப்பணிப்போம்.

*"நற்கருணை நாதா சரணம் சரணம்*
*சொற்கரிய போதா சரணம் சரணம்"*

என்றுமே நல்ல கருணையுள்ள இயேசு சொற்களால் வர்ணிக்க முடியாத அளவுகடந்த அன்புகொண்டவர். எனவே மனிதர்களாகிய நாம் ஒவ்வொருவரும் நற்கருணையில் இணைந்தவர்களாக வாழ வழிதேடுவோம்.

# மனமாற்றம் அற்ற மதமாற்றம் தேவையா?



எஸ். சதாலோஜினி,
பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல்.

ஒரு குழந்தை இந்த உலகில் பிறக்கும்போது மாசுமறுவற்ற தூய்மையான ஒரு குழந்தையாகப் பிறக்கின்றது. அக்குழந்தைக்கு இனம், மொழி, சாதி, சமயம் என்று எதுவுமே தெரியாது வாழத் தொடங்குகின்றது.

குழந்தை வளர்ந்து வருகின்றது. பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஊடாகச் சமூகத்துடன் தொடர்புகொள்கிறது. பெற்றோரின் வழிகாட்டலுடன் ஒரு மதத்தினை, ஒரு கலாச்சாரத்தினைப் பின்பற்றத் தொடங்குகின்றது.

இவ்வாறு பின்பற்றிவரும் குழந்தை வளர்ச்சி அடையும்போது தான் பின்பற்றும் சமயத்தின் பக்தி, அதன் சிறப்பு அச்சமயம் பற்றிய வரலாறு எனப் பல விடயங்களை பெற்றோர் ஊடாக, பாடசாலை ஊடாகக் கற்பதுடன், தானும் தேடிப் பல விடயங்களை அறிய முற்படுகின்றது. இதனால் ஏனைய சமயங்களைவிட தனது சமயத்தில் அளவுகடந்த நம்பிக்கை வைத்துவிடுகின்றது.

ஒரு குழந்தைக்கு சிறுவயதில் கொடுக்கப்படும் ஒரு விடயம் பசுமரத்து ஆணிபோல மனதில் பதிந்துவிடும். அதேபோல பிறப்பில் இருந்து பின்பற்றப்படும் சமயமும் அவர்களுடன் கலந்துவிடும். இவ்வாறு கலந்து வளர்ந்த ஒருவரை திடீர் என மதம் மாற்றினால் அவர் மதம் மாறிய சமயத்தில் உண்மையான நம்பிக்கை கொண்டு செயற்படுவாரா?

இன்று பல காரணங்களுக்காக மக்கள் ஒரு மதத்தில் இருந்து இன்னொரு மதத்திற்கு மாறுகின்றார்கள். அதாவது திருமணத்திற்காக, சில சலுகைகளுக்காக, தனது தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக, வேலை வாய்ப்பிற்காக ... எனப் பல காரணங்களால் மதம் மாறுகின்றனர்.

உதாரணத்திற்கு ஒருவர் தனது திருமணத்திற்காக மதம் மாறுகின்றார் என்று வைத்துக்கொள்வோம். அவர் மதம் மாறுவது தவறல்ல. அதாவது சமுதாயத்திற்குக் கட்டுப்பட வேண்டும், தமது பிள்ளைகள் ஒரே சமயத்தினைப் பின்பற்ற வேண்டும் எனப் பல காரணங்கள் உள்ளன. ஆனால் அவர் மதம் மாறிய பின்பு அவர் சேர்ந்துள்ள மதத்திற்கு ஏற்ப உண்மையாக மனம்மாறி ஒழுகுகின்றாரா என்பதுதான் இங்கு கேள்வி.

ஒருவன் சிறுவயதில் இருந்து ஒரு சமயக் கலாச்சாரத்திற்குள் வாழ்ந்து வருகின்றான். பின்பு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இன்னுமொன்றுக்குள் போகும்போது அவனது அடிமனதில் எப்போதுமே தனது முன்னைய சமயத்தின் போதனைகளும், வழிகாட்டல்களுமே எதிரொலித்துக்கொண்டு இருக்கும். ஒரு குழந்தை தனது விபரம் தெரியும் வயதில் யாரை "அம்மா" என்று அழைக்கின்றதோ அவர்களையே இறுதி வரைக்கும் அம்மா என்று அழைக்கின்றது. இடையில் யார் வந்து "நான்தான் உன் தாய்" என்று கூறினாலும் அக்குழந்தை அவர்களை ஏற்றுக்கொள்ளாது. ஏனெனில் அக்குழந்தையின் அடிமனதில் தனது தாய் யார் என்பது நன்றாகப் பதிந்துவிட்டது. அதேபோன்றுதான் நாம் பின்பற்றும் சமயமும் ஆகும்.

ஒரு மனிதன் தான் சிறுவயதில் இருந்து பின்பற்றிவரும் மதத்தினை விட்டுவிலக முடியாது. அவ்வாறு விலகுவானாக இருந்தால் அது உண்மையான மனமாற்றமாக இருக்காது. ஒருவன் ஒரு மதத்தில் இருந்து இன்னுமொரு மதத்திற்கு உண்மையான விசுவாசத்துடனும், மனமாற்றத்துடனும் செல்லவில்லை என்றால் அந்த மனமாற்றம் வீணான செயல்.

வெறுமனே வெளி உலகிற்காகவும், புறச் சடங்குகளுக்காகவும் செய்யப்படும் மதமாற்றங்கள் தேவையில்லை. ஒவ்வொரு மனிதனும் அவரவர் சமய நம்பிக்கையை பின்பற்றி உண்மை வாழ்க்கை வாழ்ந்தால் அதுவே இறைவனுக்குச் செய்யும் பெரும் பணியாகும்.

செப ஆண்டு சிறப்புப் பகுதி... செப ஆண்டு சிறப்புப் பகுதி...

# செபம் என்றால் என்ன?

வி. கிறிஸ்ரி குணராஜா,
முதலியார் குளம், செட்டிகுளம்

மனிதனையும், இறைவனையும் ஒன்றிணைக்கும் உறவின் பாலமே செபம். இதனை புனித யாக்கோபு திட்டமாய் எடுத்துரைக்கின்றார். "கடவுளை அணுகிச் செல்லுங்கள். அவரும் உங்களை அணுகி வருவார்" (யாக். 4:8) எனவும் "நீங்கள் ஆண்டவரை நாடினால் கண்டடைவீர்கள்" என்று (2 குறிப்பேடு 15:2) அசரியா மூலம் இதனை இறைவன் உறுதி செய்கின்றார்.

எனவே இறைவனை எங்கே தேடிச்செல்வது என்று அங்கலாய்க்க வேண்டியதில்லை. இறைமகனுக்கு இன்னும் ஒரு பெயர் இம்மானுவேல். "இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார்" என்பது பொருள் (லூக்.1:23). எம்முடன் இருக்கும் இறைவனுடன் மனம் திறந்து பேசுவதும், உரையாடுவதும் இன்றியமையாதது. இறைவனோடு மேற்கொள்ளும் உரையாடலே செபமாகும். அதிக நேர உரையாடல் மூலமே அன்பும், ஐக்கியமும் வளருகின்றது. உரையாடல் இல்லாத இருவருக்கு இடையே ஐக்கியம் இருக்க வாய்ப்பில்லை. இதில் எவ்வளவு செபிக்கிறோம் என்பது முக்கியம் அல்ல. எத்தகைய உணர்வோடு செபிக்கின்றோம் என்பதே முக்கியம்.

உள்ளத் தேவைகளை நம்பிக்கையோடு, விசுவாசத்தோடு எதிர்பார்த்தலோடும், உரிமையோடும், பெற்றோரிடம் பிள்ளைகள் பேசுவதுபோல் உள்ளத்தைப் பகிர்ந்துகொண்டு வேண்டுதல்களை இறைவனுக்கு தெரியப்படுத்தலே செபம். இதனை எவ்வாறு தெரியப்படுத்தவேண்டும் என பிலிப்புவுக்கு எழுதிய கடிதம் (பிலி.4:6) அறிவுறுத்தல் வழங்கி நிற்கிறது. திருத்தூதர்கள் இறைவனுடன் நேரடியாக தமது வேண்டுதல்களையும், உள்ளக் கிடக்கைகளையும் சொல்லி அவரது அருள் வேண்டி நிற்பதை (தி.தூ.4:24-30) காணமுடிகிறது. எனவே கேட்டுப் பெறுவதும், இறைவனோடு பேசுவதும் செபமாகும். இது எங்கள் விண்ணப்பங்களை விசுவாசத்துடன் இறைவனுக்கு தெரியப்படுத்துவதாகும். நமதாண்டவர் விசுவாசியை கேட்கும்படியாகவும், தேடும்படியாகவும், தட்டும்படியாகவும் கூறியுள்ளார். ஏனென்றால் இந்த மூன்று வார்த்தைகளும் செபத்தின் மூல காரணமாக இருக்கிறது (மத்.7:7).

இறைவனுடைய சித்தப்படி கேட்டுப் பெறுவதே செபம். அது எமது பொருளாதாரத் தேவையானாலும் சரி, அல்லது ஆவிக்குரிய தேவையாய் இருந்தாலும் சரி. எதுவாயினும் அதில் இறைவனுடைய சித்தத்தை அறிந்து கேட்டுப் பெற்றுக்கொள்ள முடியும். இது இறைவனுடைய சித்தத்தின்படி செய்கின்ற செபம் (1யோ.5:14-15) ஆகும்.

செபம் என்பது தேடிக் கண்டடைவதாகும். ஆண்டவருடைய சித்தத்தை அறிந்துகொள்ளாத பட்சத்தில் நமது பொருள் தேவையானாலும், ஆவிக்குரிய தேவையானாலும் அவருடைய சித்தத்தைக் கண்டுபிடிக்கும்வரை தேடவேண்டும். இது தேவ சித்தத்தை குறித்து அறிகின்ற செபம் (ஏரே.29:12,13).

திறக்கப்படும்வரை தட்டிக்கொண்டு இருப்பதே செபம். இறைவனை அடைய வழியை அறிந்திருந்தபோதும் எமக்கு முன்பாக கதவு அடைக்கப்பட்டிருந்தால் இறைவன் அக்கதவைத் திறக்கும்படி தட்டிக்கொண்டே இருக்கவேண்டும். இது இறுகப் பற்றிப்பிடிப்பது போன்ற செபமும், விசுவாசத்தில் மலையை பெயர்க்கச் செய்யும் செபமும், விடாமுயற்சியுடன் முடியாததை முடியும் என்கிற வரையான செபமுமாகும் (மத்.17:14-21).

போராடி வெற்றிகொள்ளும் நிகழ்வை யாக்கோபின் வாழ்வில் கண்டுகொள்ள முடியும் (தொ.நூ.32:26).

செபம் என்பது எளிமையாகப் பேசுவதும், நம்புவதும், கேள்வி எதுவும் கேட்காததும் பணிந்துகொள்ளுவதும், தாழ்ச்சியுடன் இறைஞ்சிக் கூப்பிடுவதுமாகும் (லூக்.18:13). "நேரிய உள்ளத்தோடும், மிக உறுதியான நம்பிக்கையோடும் நெருங்கிச் செல்லவுமே" (எபி.10:22) அழைக்கப்பட்டிருக்கிறோம். இறைவன் தமது பிள்ளைகளுக்கு வைத்திருக்கும் ஆவியின் கொடைகளை கேட்டுப் பெறுவது செபம். ஆவியின் கொடைக்காக வேண்டுதல் செய்யும்போது "மிகுதியாக நன்மைகளை அளிப்பார்" (லூக்.7:9-11) என்று நமதாண்டவர் இயேசுக் கிறிஸ்துவினால் உறுதியளிக்கப்பட்டிருப்பதனால் நாம் கேட்கவேண்டும்.

உள்ளக் கிடக்கைகளை இறை சமூகத்தில் ஊற்றிவிடுதலே செபம். "ஆண்டவர் திருமுன் என் உள்ளத்தைக் கொட்டிக் கொண்டு இருக்கிறேன்" (1சாமு.1:15) என்று அன்னாள் தன் நிலவரத்தை ஏலிக்கு விளங்கப்படுத்தியதும் அவளின் விண்ணப்பச் செபம் மூலம் தனக்கு இருந்த துயரத்தையும், புலம்பலையும், மனக்கசப்பையும் இறைவனுக்கு தெரியப்படுத்தினாள் என்பதை அறிந்த ஏலி, "மனநிறைவோடு செல்" என்று ஆசி வழங்குகிறார். அதன் பின்பு அவள் துக்கமாய் இருக்கவில்லை (வச.18) என்று காண்கிறோம். எனவே செபம் என்பது சமாதானத்தை தரும் சக்தியாக இருக்கின்றது. "இணங்குக, இறைவனுக்குள் எய்துக அமைதி" (யோபு.22:11) என்று போதிக்கப்படுகின்றோம்.

இறைவனது சமூகத்தை விரும்பி அவரது முகத்தை நோக்கிப்பார்த்து, நற்கருணைப் பிரசன்னத்தின் முன் ஒரு விண்ணப்பமும் செய்யாமல் அவர் பாடுகளை சிந்தித்துக்கொண்டு இருப்பது செபம்.

மௌன செபம் இறைவனின் மகத்துவத்தை நமக்குப் போதிக்கின்றது. "அமைதி கொண்டு நானே கடவுள் என உணர்ந்து கொள்ளுங்கள்" (தி.பா.46:10). தீர்க்கன் அபகூக்கு சொல்லுகிறார் "ஆனால் ஆண்டவர் தம் புனித கோவிலில் வீற்றிருக்கிறார். அவர் திருமுன் மண்ணுலகு எல்லாம் மௌனம் காப்பதாக" என்று. எனவே "நான் ஊமையைப்போல் பேசாது இருந்தேன்... என் உள்ளம் என்னுள் எரியத் தொடங்கியது" (தி.பா.39:2,3) என தாவீது ராஜா தன் அனுபவத்தைக் கூறுவதில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியது யாதெனில், மௌன செபத்தில் உள்ளத்தின் ஆழம் கிறிஸ்துவோடு நெருங்கி உறவாடும் எனவும், ஆவியானவர் நமக்காக பரிந்து பேசுகிறார் என்பதையும் எளிதாகக் கண்டு கொள்ள முடிகிறது.

செபத்திலே சந்தேகம் உண்டு. செபம் செய்வதற்கு பிசாசானவன் தடைகளையும், சோர்வையும் கொண்டு வருவான். எமது செபத்தினால் சாத்தானைத் தடுத்து நிறுத்தவும், விரட்டி அடிக்கவும் முடியும். "அலகையை எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அது உங்களிடம் இருந்து ஓடிப்போகும்" (யாக்.4:7) என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இத்தனை மேன்மை பொருந்திய செபத்தைச் செய்வதற்கு முதலில் செபம் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டும். என்ன தடை இருந்தாலும் செபிப்பேன் என்ற தீர்மானத்திற்கு வந்து, அதற்கென குறித்த நேரத்தையும் ஒதுக்கி, நம் பழக்கத்திற்குக் கொண்டுவரவேண்டும். அவ்வாறு செபத்திற்கு முன்வரும்போது எமது செபத்தை ஆரம்பிப்பதற்கு முன்னமே நீங்கள் செபிக்கப்போகும் செபத்தின்மேல் இறைவன் எவ்வளவு அக்கறையாக உள்ளார் என்பதை அறிந்துகொள்ள அவர் தந்த வாக்குத்தத்தங்கள் உமக்கு மேலும் உற்சாகத்தைத் தருவதாக அமையும். அத்துடன் செபம் என்பது இறைவன் உன்மேல் வைத்த ஏணி அல்ல. உன் சுமையை இறக்கி வைக்க அவர் கொடுத்த சுமைதாங்கி என்பதை உணர்ந்துகொள்ள அவர் தந்த வாக்குத் தத்தங்களைப் பிடித்துக்கொள்ளுங்கள். வாக்குத்தத்தம் செய்தவர் உண்மையுள்ளவர். அவர் வாக்குத்தத்தங்கள் எல்லாம் ஆம் என்றும் ஆமென் என்றும் இருப்பதால் செபத்திற்கு செவிகொடுப்பதாக சொன்ன வாக்குரைகளில் சிலவற்றை செப வாழ்க்கைக்கு எடுத்துக்கொள்வோம்.

1. "நீ வேண்டுதல் செய்யத் தொடங்கியபோதே கட்டளை ஒன்று பிறந்தது. நான் அதை தெரிவிக்கவே வந்தேன் (தானி.9:23).
2. "அவர்கள் என்னை நோக்கி மன்றாடும்போது அவர்களுக்குப் பதில் அளிப்பேன்" (தி.பா.91:15).
3. "அவர்கள் வேண்டுவதற்கு முன்னே நான் மறுமொழி தருவேன். அவர்கள் பேசி முடிப்பதற்கு முன்னே பதிலளிப்பேன்" (ஏசா.65:24).
4. "நீங்கள் விரும்பிக்கேட்பது எல்லாம் கிடைக்கும்" (யோ.15:7).
5. "...கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்... கேட்போர் எல்லோரும் பெற்றுக்கொள்கின்றனர்" (லூக்.11:9,10).
6. "என்னிடம் மன்றாடு, உனக்கு நான் செவிசாய்ப்பேன். நீ அறிந்திராத மாபெரும் செயல்களையும், மறை பொருட்களையும் உனக்கு நான் விளக்கிக் கூறுவேன்" (ஏரே.33:3).
7. "நீங்கள் என் பெயரால் எதைக்கேட்டாலும் செய்வேன்" (யோ.14:14).

இவ்வாறாக இன்னும் அதிகம் உண்டு. இவ்வாறான வாக்குறுதிகளை இறுகப்பிடித்துச் செபிக்கும்போது தாவீது சொல்வதுபோல் நாமும் மற்றவர்களுக்கு சாட்சி கூறி அவர்களையும் செபிக்கத் தூண்டலாம். "ஆண்டவர் என் விண்ணப்பத்தைக் கேட்டருளினார். அவர் என் வேண்டுதலை ஏற்றுக்கொண்டார்" (தி.பா.6:9) என்று எமது அனுபவத்தைக் கூறமுடியும் அல்லவா? இவ்வளவு அருமையான வாக்குறுதிகளை அள்ளித்தந்து நம்மைச் செபிக்கத் தூண்டும் ஆவியானவரின் துணையோடு அவர் பாதத்தில் இருந்து செபித்து பெற்றுக்கொள்வது நமது பொறுப்பாகும். இதைத் தாவீது ராஜா தன் அனுபவத்தில் கூறியதை நினைவுபடுத்த விரும்புகின்றேன். "நான் மன்றாடும்போது அவர் எனக்குச் செவிசாய்க்கின்றார்" (தி. பா.4:3) என்ற நம்பிக்கையுடன் செபத்தில் தரித்திருக்க இவ்வாண்டு முழுவதும் அழைக்கப்பட்டுள்ளோம்.

எனவே கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணத்திற்கு இறைவன் தந்த வாக்குத்தத்தங்கள்மேல் நம்பிக்கை கொண்டு, ஆண்டவரை அனுதினமும் நாடும்படி அன்னையாம் திருச்சபை அன்போடு வேண்டி நிற்கிறது என்பதை இதன் வாயிலாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் அறிந்துகொள்ளட்டும். ●

# சொல்லொண்ணா பெருமூச்சு

பீ. கிறிஸ்பி குரூஸ், பேசாலை

செப ஆண்டின் நடுப்பகுதிக்கு கடந்து வந்துவிட்டோம். என்னுடைய செப வாழ்வு எந்த அளவிற்கு இருக்கின்றது என்று மீளாய்வு செய்து பார்ப்பது எமது ஆன்மீகப் பயணத்துக்கு உந்துசக்தியாக இருக்கும். எனது ஆன்மீக செபவாழ்வில் கணுக்கால் அளவில் நின்றுகொண்டிருக்கின்றேனா? அல்லது இடுப்பளவில் இருக்கின்றேனா? இதற்குமேல் இன்னுமொரு நிலை இருக்கின்றதே அதுதான் நீச்சல் அனுபவம். அந்தப் பரவச நிலைக்குள் மூழ்கிவிட்டேனா? ஒரு கணம் நடந்து வந்த பாதையை திரும்பிப்பார்த்து குறைவுள்ள இடத்தை நிறைவு செய்ய மேல்மாடி அனுபவத்துக்கு போய் வருவது நல்லது.

அக்கினியாம் ஆவியாரிடம் செப ஆவி ஊற்றுமையா என்று கேட்கும்போது "தூய ஆவியானவர் நமது வலுவற்ற நிலையில் நமக்கு துணை நிற்கின்றார். ஏனெனில் எதற்காக எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. தூய ஆவியானவர்தாமே சொல்வடிவம் பெறமுடியாத நம்முடைய பெருமூச்சுக்களின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார்" (உரோ 8,26).

சொல்வடிவம் பெறமுடியாத நம்முடைய ஏக்கப் பெருமூச்சுக்களை வானகத் தந்தையாம் இறைவனுக்கு ஏற்ற வேண்டுதலாகத் தூயஆவியார் மாற்றும்போது அச்செபம் பலனளிக்கின்றது. எனது ஆன்மாவை வளரச் செய்து இயேசுவோடு இணைந்திடும் ஒப்பற்ற ஆற்றல்தான் செபம். தூய ஆவியானவரின் மன்றாட்டால் மனித ஆன்மா விண்ணை நோக்கி எழும்புகிறது. இறைவனையும் மனிதனையும் தூய ஆவியார் ஒன்றாக இணைக்கிறார். மனித இதயத்தில் மறைந்திருக்கும் இறை உணர்வை செபம் தட்டி எழுப்புகின்றது. செபத்தின் மூலம் மனிதனில் இருக்கும் மிருகத் தன்மை நீங்கி மனிதத் தன்மையும் இறைத்தன்மையும் வளர்கிறது. எனவே மனிதன் இறைவனின் பிள்ளை என்ற நிலைக்கு உயர்த்தப்படுகின்றான்.

செபத்தின் உறைவிடம் தூய ஆவியார். "தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் இயேசு ஆண்டவர் என்று சொல்ல முடியாது" (1கொரி 1,3). தூய ஆவியார் வழியே வாயார அறிக்கை செய்து இறை புகழ்ச்சி செய்யும்போது அந்த ஆராதனைச் செபம் விண்ணை நோக்கி சுகந்த தூபமாக இறைவனின் உள்ளத்தை மகிழ்விக்கும். ஆராதனை, புகழ்ச்சி, துதி, ஸ்தோத்திரம் போன்றவை ஆண்டவர் அமர்ந்திருக்கும் சிம்மாசனத்தை அசைக்கின்றது. உள்ளம் மகிழும் தேவன் வானத்தில் பலகணியைத் திறந்துவிடுவார்.

தூயஆவியாரின் இறைவேண்டலால் மறைவானவை வெளிப்படுத்தப்படுகிறது, தூய்மை ஏற்படுகின்றது, மீட்பு கிடைக்கின்றது. பாவம் மற்றும் சாவின் பிடியிலிருந்து விடுதலை கிடைக்கின்றது. உண்மையான அறிவு கிடைக்கின்றது. ஆன்மாவுக்கும் உடலுக்கும் வலிமை கிடைக்கின்றது. இறை அருளில் வளர முடிகின்றது. இறை அன்பால் நிரம்பிட முடிகின்றது. வெற்றி கிடைக்கின்றது, செபவாழ்வில் ஆர்வம் ஏற்படுகின்றது. அவருடைய வரங்கள் கனிகள் கொடைகள் கிடைக்கின்றன. பரவச நிலை ஏற்படுகின்றது.

பரிசுத்த ஆவி குற்றங்களைக் கண்டித்து உணர்த்துபவர். "விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்கு தூய ஆவியை கொடுப்பது எத்துணை உறுதி" (லூக் 11.13). ஆதிக் கிறிஸ்தவர்கள் பாரத்தோடு ஜெபம் ஏறெடுத்தபோது பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள். திருத்தூதர்கள் பரிந்து பேசி மன்றாடியபோது தூய ஆவியைப் பெற்றுக்கொண்டு உயிர்த்த இயேசுவின் சாட்சியானார்கள். விசுவாசிகளுக்கு செபிக்கும் எண்ணத்தை, ஆற்றலை அளிப்பவர் தூய ஆவியார்தான்.

உயிர்த்த இயேசு நமது அருகிலேயே உள்ளார் என்று நம்பிக்கையை ஊட்டுபவர் தூய ஆவியார்தான். நம்பிக்கை என்னும் அருட்கொடையை அளித்து விசுவாசிகளை ஆன்மீக வாழ்வுக்கு



அழைத்துச் செல்கின்றார். ஆன்மீகத்தின் உறைவிடமான தூய ஆவியாரின் அருளின்றி செப வாழ்க்கையில் வெற்றி காணமுடியாது.

யோர்தான் நதிக்கரை அனுபவத்தில் இருந்து மேல்மாடி அனுபவம் பெற்று சீயோன் அனுபவம் வரை நம்மை நடத்திச் செல்லுகிறார்.

இப்போது நாம் திரும்பிப் பார்த்த இடத்துக்கு மீண்டும் வருவோம் எனது செபவாழ்வு எந்த நிலையில் எந்த இடத்தில் இருக்கிறது? கால் மட்டுமே நனைந்திருக்கிறதா? ஓரளவு செபம் சொன்னால் போதும் என்று இடுப்பளவில் நிற்கின்றேனா? எனது ஆன்மா வளர செபம் அவசியம் என்று உணர்ந்து கழுத்தளவில் இருக்கிறேனா? பரிசுத்த ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு இறை அனுபவம் பெற்று முதிர்ச்சி நிலை அடைந்து நீச்சல் அனுபவத்தில் மூழ்கிவிட்டேனா? ●

# பொன்விழாக் காணும் இறை ஊழியர்கள்

## அருட்தந்தை அ. கி. வேதநாயகம் (அ.ம.தி)



அருட்தந்தை அமிர்தநாதர் கில்லேறியன் வேதநாயம் (அ.ம.தி.) அவர்கள் கடந்த ஓகஸ்ற் மாதம் 6ம் திகதி தனது குருத்துவ வாழ்வின் 50வது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடினார். இவரது பணி வாழ்விற்காக அனைவரும் ஒன்றிணைந்து இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

இவர் காலஞ்சென்றவர்களான அவிறாம் பிள்ளை அமிர்தநாதர் (தம்பு), ஆகத்தம்மா (ஞானமுத்து) தம்பதியரின் புதல்வராவார். இவர்களது மகளான அருட்செல்வி மேரி எட்வீச் அவர்கள் திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்தவராவார். இவரும் தனது பணிவாழ்வின் 50வது யூபிலியைக் கடந்த வருடம் (2006) மன்னாரில் உள்ள பள்ளிமுனையில் கொண்டாடினார்.

இவர்கள் பாரம்பரிய கத்தோலிக்க குடும்பத்தை சேர்ந்தவர்களென்பதும் முக்கியமாக சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த யாழ் குருநகர் புதுமை மாதா ஆலய உப பங்கைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அருட்திரு வேதநாயகம் அடிகளார் 3.4.1929ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ். குருநகர் இயாகப்பர் பாடசாலையிலும், யாழ். கொழும்புத்துறை புனித வளனார் பாடசாலையிலும், உயர் கல்வியை யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியிலும் பயின்றார்.

குருத்துவக் கல்வியை யாழ் புனித மடுத்தீனார் குருமடத்திலும், உயர் குருத்துவக் கல்வியை கண்டி அம்பிட்டியா குருத்துவ கல்லூரியிலும் கற்று முடித்து 06.081957இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் தனது பணிவாழ்வில் முதலாவதாக மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்தில் கால் பதித்தார். தொடர்ந்து பெரிய பண்டிவிரிச்சான், அடம்பன், கொழும்பு - செக்கட்டித்தெரு புனித அன்னம்மாள் ஆலயத்திலும் மற்றும் இந்தியா, பிலிப்பைன்ஸ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் இறை பணியாளராகப் பணிபுரிந்தார்.

அமலமரித்தியாகிகள் சபையின் யாழ் மறைமாவட்ட முதல்வராக சில ஆண்டுகள் கடமையாற்றினார். இவர் தனக்கே உரித்தான கட்டிடங்களை வடிவமைக்கும் கலையையும் தனது இறைபணியுடன் இணைத்துச் செய்து மகிழ்ந்தார். இவர் பணிபுரிந்த இடங்களிலும் மற்றும் பல்வேறு நாடுகளிலும் இவரது வடிவமைப்பில் உருவான ஆலயங்கள், மடங்கள், நிர்வாகக் கட்டிடங்கள் அழகுடன் மிளிர்வதைக் காணலாம்.

இவர் தனது அப்போஸ்தலிக்க வாழ்வின் பெரும் பகுதியை மருதமடு அன்னையின் ஆலயத்தைச் சிறப்பிப்பதிலும், திருவிழாக்களை அழகு - படுத்துவதிலும் அதிக சிரத்தையுடன் ஈடுபட்டமை மரியன்னைமீது இவருக்கு இருந்த பக்தியின் வெளிப்பாடாகும்.

தொடர்ந்து இவரது பணிவாழ்வு சிறந்து விளங்க அமல மரியன்னை மூலம் இறைமகனிடம் இறைஞ்சுவோம்.

## அருட்சகோதரி அலிஸ் சோசை (தி.கு.க)



திரு. திருமதி. சல்வடோர் சோசை தம்பதியினரின் இல்லறம் என்னும் நல்லற வாழ்வில் மொட்டவிழ்த்து மணம் பரப்பிய குலவிளக்குகள் ஐவரில் நான்காவது நற்செல்வமாக 1938ல் அருட்சகோதரி அலிஸ் பிறந்தார்.

பாடசாலையின் ஆரம்பகாலம் தொட்டே அருட்குரவர்களினாலும், அருட்சகோதரிகளினாலும் கல்வியிலும், உயர் விழுமியங்களிலும், ஆக்கமும், ஊக்கமும் பெற்ற இவர் பாடசாலைக் கல்வியின் இறுதி நாட்களில் அருட்தந்தை கோமஸ் (அ.ம.தி), இவரது மூத்த அருட்சகோதரர், அருட்சகோதரிகள் வலன்ரைன், டெலாசலேற், அல்பீனா ஆகியோரால் அழைத்தல் ஊக்குவிப்புப் பெற்று திருக்குடும்ப சபையில் இணைந்து துறவு வாழ்வை மேற்கொள்வதற்குப் பெற்றோரின் அனுமதியை வேண்டி நின்றார். மகளின் விருப்பத்திற்குத் தந்தை பச்சைக்கொடி காட்டாவிடினும், இறைத்திட்டம் இதுவெனக் கண்டவுடன் இறை சித்தத்திற்குத் தலைவணங்கினார்.

எனவே 1951ல் இளவாலை திருக்குடும்ப இல்லத்தில் இணைந்து உருவாக்கற் படிநிலையில் தடம்பதித்த இவர், 1955 – 1957 வரை பண்டத்தரிப்பு நவத்துறவியர் இல்லத்தில் பயிற்சிபெற்று 1957ல் முதல் அர்ப்பணத்தையும் 1963ல் நித்திய அர்ப்பணத்தையும் செய்து இறைவனுக்கு முற்றிலும் சொந்தமானார்.

இளவாலை, தலவாக்கலை, மட்டக்கலை, றாகலை, நுகேகொட, மிருசுவில், வவுனியா, மானிப்பாய், மன்னார் ஆகிய இடங்களில் சமூகப்பணி, மேய்ப்புப்பணி, மறைக்கல்விப் பணி, திருக்குடும்பத் துணை அங்கத்தவர் ஊக்குவிப்புப்பணி, குழுத்தலைவி போன்ற பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார்.

மேலைத்தேச சங்கீதத்தில் விசேட தேர்ச்சி பெற்றவர். திண்டிவனம் மறைக்கல்விப் பயிற்சியகத்தில் விசேட பயிற்சி பெற்ற இவர், மன்னார் மறைவாழ்வுப் பணியகத்தில் சிறந்த பணியாற்றினார். உரோமாபுரியிலுள்ள "றெஜினா மூண்டி" பல்கலைக்கழகத்தில் ஆன்மீக நெறியில் உயர் பயிற்சி பெற்றார். அவ்வேளை "அழைப்புக்குள் அழைப்பாக" ஜெருசலேம் சென்று எம் மீட்பர் பிறந்து, வளர்ந்து, பணியாற்றிய இடங்களைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றார்.

கடந்த ஆறு வருடங்களாக யாழ். மாகாண திருக்குடும்ப துணை அங்கத்தவர்களின் தேசியத் தலைவியாகப் பணியாற்றி அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து அவர்களது ஆன்மீக வாழ்வுக்கு உரமூட்டி வருகின்றார்.

நிறைந்த இரக்க சுபாவமும், எவரும் எளிதில் அணுகக்கூடிய தன்மையும், ஆழ்ந்த விசுவாசமும், இறைபக்தியும், ஏழைகள்பால் அன்பும் கொண்டவர்.

உதவி வேண்டி, கரமேந்தி வருபவர்களுக்கு "இல்லை" என்று கூறத்தெரியாதவர். இவ்வாறான சுபாவங்கள் இவரைப் பிறர்பால் ஈர்த்ததில் வியப்பில்லை.

இவரது மூத்த சகோதரர் அமரர். அருட்திரு. ச. சாமிநாதர் அடிகளார் கடந்த 25 ஆண்டுகளாகக் கொழும்பு மறைமாவட்டத்தில் பணிபுரிந்து இவ்வருடம் இறைவனடி சேர்ந்தார். அருட்சகோதரி அலிஸ் அவர்கள் தற்பொழுது மன்னார் திருக்குடும்ப இல்லத்தில் குழுத் தலைவியாகப் பணியாற்றி வருகின்றார். அண்மையில் எமது நிறுவுனரினதும், சபையினதும் பிறப்பிடமான பிரான்ஸ் (மாட்டியாக்) சென்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அருட்சகோதரி இயூஜின் சோசை (தி.கு.க)



அருட்சகோதரி இயூஜின் சோசை அவர்கள் திரு. திருமதி. அகஸ்ரீன் சோசை தம்பதிகளின் இல்லறப் பூங்காவில் மலர்ந்த நறுமணம் வீசும் மழலைச் செல்வங்கள் எழுவரில் ஐந்தாவது புத்திரியாகப் பிறந்தார்.

கல்விபயிலும் காலத்திலேயே அருட்தந்தை கோமஸ் (அ.ம.தி) அடிகளாரின் நெறிப் - படுத்தலினாலும், அங்கு பணியாற்றிய அருட்சகோதரிகளான வலன்ரைன், டெலாசலேற், அல்பீனா போன்றவர்களின் அறிவுரைகளினாலும், எடுத்துக்காட்டான வாழ்வினாலும் அழைத்தல் ஊக்குவிப்புப் பெற்று 1954ல் இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் இணைந்து ஆரம்ப உருவாக்கற் பயிற்சி பெற்றார்.

1955 – 1957 வரை பண்டத்தரிப்பு நவத்துறவியர் பயிற்சியகத்தில் பயிற்சி பெற்று 1957ல் முதல் அர்ப்பணத்தையும், 1963ல் நித்திய அர்ப்பணத்தையும் செய்தார். உருத்திரபுரம், மட்டக்களப்பு, றாகலை, பண்டிவிரிச்சான், மயிலிட்டி, ஊர்காவற்துறை, அரிப்பு, நானாட்டான் ஆகிய இடங்களில் பல்வேறுபட்ட பணிகளில் ஈடுபட்டார். அருட்சாதன ஆயத்தம், மறைக்கல்விப் போதனை, குடும்பத்தரிசிப்பு, ஆலயப்பணிகள், குழுத்தலைவி போன்ற இன்னோரன்ன பணிகள் அவற்றுள் சில.

திண்டிவனத்தில் மறைக்கல்வியில் விசேடபயிற்சி பெற்றவர். தொடர்ந்து நான்கு வருடங்கள் மன்னார் மறைக்கல்விப் பணியகத்தில் பணியாற்றினார். அன்பும், அணுகக்கூடிய தன்மையும் கொண்ட இவர், தான் பணியாற்றிய இடங்களிலெல்லாம் மக்களின் மனம் கவர்ந்தவர். உடல் நோயோ, வசதியீனங்களோ எவையும் இவரது பணிக்குத் தடையாய் அமையவில்லை.

தற்பொழுது இவர் நானாட்டானில் தனது பணியை ஆற்றுகின்றார். இவரது மூத்த சகோதரியும் இவரது சபையில் ஒரு அருட்சகோதரியாகப் பணியாற்றுகின்றார்.

## அருட்சகோதரி மரிய கிளாரா (தி.கு.க)



திரு. திருமதி. மிராண்டா தம்பதியினர் தவமிருந்து பெற்றெடுத்த அருமைப் புத்திரிகள் இருவரில் இவர் இளைய புத்திரியாவார். சிறுவயதிலேயே தந்தையை இழந்த இவர் தாயின் அன்பிலும், அரவணைப்பிலும் வளர்க்கப்பட்டு, அன்னையினால் ஊட்டப்பட்ட இறைவிசுவாசத்திலும், இறைபக்தியிலும் வளம் பெற்றுத் திகழ்ந்தார்.

வங்காலையில் கல்வியை முடித்த இவர் அருட்தந்தை கோமஸ் (அ.ம.தி), அருட் சகோதரிகளான வலன்ரைன், டெலாசலேற், அல்பீனா ஆகியோரால் அழைத்தல் ஊக்குவிப்புப் பெற்று 1954ல் இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார். அங்கு ஆரம்பப் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்ட இவர் 1955 – 1957ல் பண்டத்தரிப்பு நவத்துறவியர் இல்லத்தில் நவத்துறவியாகப் பயிற்சி பெற்று 1957ல் முதல் அர்ப்பணத்தையும், 1963ல் நித்திய அர்ப்பணத்தையும் செய்தார்.

கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சியை மேற்கொண்ட இவர் இளவாலை, மயிலிட்டி, கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், பள்ளிமுனை, மானிப்பாய் ஆகிய இடங்களில் கல்விப்பணி, சமூகப்பணி, மேய்ப்புப்பணி போன்றவற்றில் ஈடுபட்டார்.

அன்பும், பண்பும், அமைதியும், மென்மையான சுபாவமும் கொண்ட இவர் பாடசாலையிலோ, பணித்தளங்களிலோ எவரையும் மனம் நோகப் பண்ணி அறியாதவர். கடமையில் கண்ணியம் தவறாதவர். இதன்காரணமாக அனைவராலும் நன்கு விரும்பப்பட்டவர். திண்டிவனத்தில் ஒருவருடம் மறைக்கல்விப் பயிற்சி பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்பொழுது இவர் உடுவிலில் பணியாற்றுகின்றார்.

*அருட்சகோதரிகளைப் பற்றிய எழுத்துருவாக்கம் :*
*அருட்சகோதரி கனிசியஸ் ( தி.கு), மன்னார்.*

## என் அன்புத் தந்தை ஜிம்பிறவுண்

கல்லூரி வாசலுக்குள் காலடி வைக்க
காரணமாய் இருந்தவரே!
என் ஆருயிர்த் தந்தையே!
என்றும் என் விருப்பைப் புரிந்திட்ட
என்னினிய தந்தையே!

எத்தனை உண்மையான உள்ளம்
உங்களின் அந்த வெள்ளை உள்ளம்!

உங்களின் நிலை தெரியாமல்
நாம் தவிக்கின்றோம் தவியாய்.

உங்களிடமிருந்து எம்மைப்
பிரித்து வாழ வைப்பதில்
இறைவனுக்குத்தான்
எத்தனை சந்தோஷமோ?

விழியிரண்டும் உங்கள் வரவை
பார்த்துப் பார்த்தே காலம் போய்விடுமோ?

*ம.கஜரூபன்,*
*புனித வளனார் மாணவர் இல்லம்,*
*மன்னார்*

## ஜிம்பிறவுண் அடிகளாருக்காக சிறப்பு வேண்டுதல் திருப்பலி

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாக இரண்டு வருடங்கள் கடமையாற்றி யாழ். அல்லைப்பிட்டி பங்கின் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்ற சில நாட்களில் (அதாவது ஆவணி மாதம் 20ந் திகதி) காணாமலாக்கப்பட்டார். ஜிம்பிறவுண் அடிகளார் காணாமல்போன ஓராண்டு நிறைவில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் சிறப்பு வேண்டுதல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கொழும்பு சமூக செயற்பாட்டு கிறிஸ்தவ அமையம் இவ்வாண்டு ஆவணி மாதம் 20ம் திகதி இத்தினத்தை உணர்வுபூர்வமாக நினைவுகூர்ந்தது. இந்த அமையம் கடந்த நான்கு ஆண்டுகளாக கொழும்பு மறைமாவட்ட பொதுநிலையினர் மத்தியில் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

2004ம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் தன்னுடைய ஆர்வமிக்க குருத்துவப் பணியால் மன்னார் மறைமாவட்ட மக்கள் மனதில் நீங்காத இடம்பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பெப்பி சோசை


Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk

### தேசிய சமாதான
## விழிப்பூட்டல் செயற்பாடுகள்

கடந்த மாதம் தேசிய சமாதான விழிப்பூட்டல் செயற்பாடுகளில் பல்வேறு கருத்தமர்வுகள் நடாத்தப்பட்டது. இதில் இளைஞர்களுக்கான சமாதான விழிப்பூட்டல் கருத்தமர்வு தாழ்வுபாட்டில் நடாத்தப்பட்டது. இதில் 40 இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். இதேவேளை நானாட்டானில் சமாதானக்குழு உருவாக்கமும் இடம் பெற்றுள்ளது.

அத்தோடு விசேட செயற்பாடாக வவுனியா கோமரசன்குளம் நோயினால் பாதிக்கப்பட்ட 45 நோயாளிகளுக்கு நடமாடும் சுகாதார சேவை முகாம் கோமரசன்குளத்தில் மேற்படி பிரிவினரால் நடாத்தப்பட்டது. இந்த நடமாடும் சுகாதார சேவையினால் இம்மக்கள் பெரிதும் நன்மை அடைந்துள்ளனர்.

இவற்றைவிட மன்னார் மளுவராயர் கட்டையடம்பனில் வன்முறையற்ற தொடர்பாடல் தொடர்பான கருத்தமர்வு ஒன்றும் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழு உறுப்பினர்களுக்கு நடாத்தப்பட்டுள்ளது. 21.07.2007 ல் வவுனியா பம்பைமடுவில் சமாதானக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் 50 உறுப்பினர்கள் அங்கத்துவம் வகித்து வருகின்றனர். முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சமாதானக் கருத்தமர்வு ஆண்டாங்குளம் கிராமத்தில் நடாத்தப்பட்டுள்ளது. இந்த அமர்வு இப்பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்துள்ளது. இதில் 35 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயனடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### சமகால யுத்த சூழலினால் உள்ளூரில் இடம்பெயர்ந்தோருக்கான
## நிவாரணப்பணிகள்

நமது நாட்டில் யுத்தம் நாளுக்கு நாள் பல்வேறு வடிவங்களில் உருமாற்றம் பெற்று வருகின்றது. இவ்வாறான கொடிய யுத்தத்திற்கு முகம் கொடுக்க முடியாத அப்பாவிப் பொதுமக்கள் உள்ளூருக்குள்ளேயே இடம் பெயர்ந்து, அல்லலுற்று, நிம்மதியற்ற வாழ்வு நடாத்தி வருகின்றனர்.

இம்மக்களின் நிவாரணப் பணிகளை கறிற்றாஸ் - வாழ்வுதயம் முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக மன்னார் மறைமாவட்டத்திற்குள் உள்ள பெரியமடு, பரப்புக்கடந்தான், தட்சனாமருதமடு, குருவில்வான், கோவில்குளம் போன்ற கிராமங்களில் கடந்தமாதம் இடம்பெயர்ந்த மக்களுக்கு மா, சீனி, மீன்ரின், நெத்தலிக் கருவாடு, அங்கர், தேயிலை, சண்லைற், கோம்பாசோப், தேங்காய் எண்ணெய் போன்ற நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிவாரணப் பணிகள் இதற்கு முற்பட்ட மாதங்களிலும் வாழ்வுதயத்தால் மடு, மாந்தை மேற்கு, பிரதேச செயலாளர் பிரிவுக்குள்ளும் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு செப்ரெம்பர்



மாதத்தில் இருந்து இன்றுவரை கறிற்றாஸ் - வாழ்வுதயத்தால் 23,566,573.00 ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்களும், 1,182,900.00 ரூபா பெறுமதியான தற்காலிக குடிசைக்கான கிடுகுகளும், 70,000/= ரூபா பெறுமதியான மரணச் செலவுக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான உடனடி நிவாரணப்பணிகள் மேலும் மாதாந்தம் தேவைப்படும் கிராமங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கல்வி பிரிவின்
## யூலை மாத செயற்பாடுகள்

வா தம்பி வா ... வா தங்கை வா....
மன்னார் நகரின் சங்கதி சொல்கின்றேன்.
வவுனியா நகரும் இணைத்துப் பார்க்கின்றேன்.
கல்விப் பணியில் வேலை செய்கின்றேன்.

வறிய குடும்பம் பலரும் கேட்டனர்.
கல்வியை தொடர உதவிகள் கேட்டனர்
மாதா மாதம் (200/=) உதவிகள் செய்து
மாணவர் கல்வியை உயர்த்தியே நின்றோம்.

அனாதைப் பிள்ளைகள் பலர் அழைத்தோம்
புலமை பரிசில் திட்டத்தைக் கொணர்ந்தோம்
மாதா மாதம் இரண்டு ஆயிரம் வழங்கி
ஏழுபத்து ஒன்பது பேரையும்
கல்வியில் இணைத்தோம்.

மழலைக் குழந்தைகள் பயிலும் வகையில்
மனையாள் கூடி மகிழும் முறையில்
முன்பள்ளி ஆசான் வழங்கிய கல்வியை
புகட்டி பல நூறு பள்ளிகள் காத்து
மழலைகள் தம்மை நாம் வளர்த்தோம்.



சிறுவர்கள் கூடி மகிழும் முறையில்
விளையாட்டுப் போட்டிகள் நாம் செய்தோம்
மூன்று பங்கினில் பத்து + ஏழு
பள்ளியை இணைத்து
மகிழ்வாய் சேயுடன் நாமும் மகிழ்ந்தோம்.



கறிற்றாஸ் வாழ்வுதயத்தால் மளுவராயர் கட்டையடம்பனில் நிரந்தர வீடுகள் நிர்மானிக்கப்பட்டு வருகின்றன. இதில் முதல் கட்டமாக முடிவடைந்த 44 வீடுகளில் ஒரு வீட்டின் தோற்றத்தையே படத்தில் காணலாம்.

### கறிற்றாஸ் - வாழ்வுதய உதவிக்கர பிரிவு மேற்கொள்ளும்
## மனித நேயப் பணிகளில் சில....



கறிற்றாஸ் வாழ்வுதயம் பல்வேறு செயற்பாட்டு பிரிவுகளை உள்ளடக்கி தனது மனித நேயப்பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. இச்செயற்பாட்டு பிரிவுகளில் ஒரு பிரிவுதான் 'உதவிக்கரம்' எனப்படும் பிரிவு. இந்த உதவிக்கரப் பிரிவினூடாக கடந்த காலங்களில் மக்கள் பல நன்மைத்தனங்களை பெற்று வந்துள்ளனர். இதில் கடந்த மாதத்தில் மட்டும் மேற்கொண்ட மனிதநேயச் செயற்பாடுகளை இங்கு தருகின்றோம்.

கடந்த மாதம் 4 பயனாளிகளுக்கு செயற்கைக் கால் பொருத்தப்பட்டுள்ளது. இவற்றைவிட ஊன்றுகோல் பயனாளிகள் பலருக்கு Arm ஊன்றுகோலும், Elboa ஊன்றுகோலும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றோடு வாழ்வுதய நிறுவனத்தின் இயன்மருத்துவர் திரு. ராஜ்குமார் அவர்களின் ஊடாக பல்வேறு இயன்மருத்துவம் தேவைப்படும் பயனாளிகள் பலர் இயன் மருத்துவத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர். மாற்றாற்றல் உள்ளோர் பிரிவில் இருந்தும் பயனாளிகள் வந்து இம்மருத்துவத்தை பெற்றுக்கொள்கின்றனர்.

இவ்வாறான மனிதநேயப்பணிகளில், விசேடமாக கடந்த மாதம் யுத்தத்தினால் காலை இழந்த 6 வயதுச் சிறுவன் ஒருவனும் தனக்குப் பொருத்தமான, பெறுமதிமிக்க செயற்கைக் காலை வாழ்வுதய உதவிக்கரம் ஊடாகப் பெற்று நன்மை அடைந்துள்ளான். இச்சிறுவன் எதிர்கால கல்வி வாழ்க்கை சிறப்புற்று விளங்குவதற்கு இவ்வுதவி பேருதவியாகவும் அமைகின்றது.



வாழ்வுதய உதவிக்கர பிரிவினால் மன்/ தாராபுரம் கிராமத்தில் வசிக்கும் நபர் ஒருவருக்கு சக்கர நாற்காலி வழங்கப்பட்டபோது.

## கடந்த மாத கிராமிய விழிப்பூட்டல் செயற்பாடுகள்

கடந்த மாதம் கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் மறைமாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட விழிப்பூட்டல் செயற்பாடுகளில் முசலிப் பிரதேசத்தில் உள்ள கொக்குப்புடையான் கிராமத்தில் இயங்கும் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழு உறுப்பினர்களுக்கு குடும்ப முரண்பாடுகளைக் களைதல் தொடர்பாக தேசிய சமாதான செயற்றிட்டத்தின் மூலம் விழிப்பூட்டல் செயலமர்வு நடாத்தப்பட்டது. இதில் 60க்கும் மேற்பட்ட விழிப்பூட்டல் குழுவாழ்மக்களும், ஆண்களுமாக கலந்துகொண்டு பயனடைந்தனர்.

அதேவேளை அடுத்த வாரத்தில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வும் இக்கிராம விழிப்பூட்டல் குழுக்களுக்கு வழங்கப்பட்டது.

இவற்றைவிட முசலிப்பிரதேசத்தில் உள்ள பொற்கேணி, சிலாபத்துறை கிராமங்களில் இயங்கும் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழு உறுப்பினர்களுக்கு குடும்ப முரண்பாடுகளை களைதல் தொடர்பான விழிப்பூட்டல் கருத்தமர்வும், சிலாபத்துறை பொது மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

இவ்வாறான கருத்தமர்வுகளுக்கு குடும்ப முரண்பாடுகளைக் களைத்தல் தொடர்பான விழிப்பூட்டல்களை ஆசிரியர் திரு. பொஸ்கோ அவர்களும், அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விழிப்பூட்டல்களுக்கு வளவாளராக



திரு. செல்வின் (திட்ட இணைப்பாளர் - வாழ்வுதயம்) அவர்களும் கலந்துகொண்டு செயற்பட்டனர்.

இதேவேளை மன்னார் தீவுப் பிரதேச கிராமிய விழிப்பூட்டல் குழுக்களின் மக்கள் அமைப்பு உறுப்பினர்களுக்கு தரவன்கோட்டை கிராமத்தில் கலாச்சாரத்தை பேணல் தொடர்பான பாசறையும் நடாத்தப்பட்டுள்ளது. இதில் 68 பேர் கலந்துகொண்டு பயனடைந்தனர். இன்றும் விசேடமாக கீரி கிராமத்தில் இயங்கிவரும் கிராமிய விழிப்பூட்டல் குழுவின் துணைக் குழுவாகிய "ஜீவ ஊற்று" என்னும் சிறுவர் குழு உறுப்பினர்கள் 25 பேரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பயனடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

## உளவள ஆற்றுப்படுத்தல் பிரிவு

கடந்த மாதங்களில் உளவள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் முக்கியமாக பேசாலை ORCயிலும், தோட்டவெளி மற்றும் மன்னார் குழந்தை யேசுபுரத்திலும் நடைபெற்றது.

இம்மாதம் 08.08.07 அன்று வாழ்வுதய பணிமனையில் அருட்தந்தை வின்சன் பற்றிக் அவர்களின் தலைமையில் "மது ஒழிப்பு" சம்மந்தமான ஒன்றுகூடல் இடம்பெற்றது. இதில் வாழ்வுதய உளவள ஆற்றுப்படுத்தல் பிரிவினரும், மன்னார் RDF, சேவாலங்கா, FEF, Leads, சர்வோதயம், RPR, Offices மற்றும் திருப்பு முனை பணியாளர்களுடன் நடைபெற்றது. இதில் மன்னார் மாவட்டத்தில் மது ஒழிப்பு சம்மந்தமான ஆற்றுப்படுத்தல் செயற்பாடு நடைபெறும் என முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தென் இந்தியாவில் நடைபெறும் மது ஒழிப்பு சம்மந்தமான செயற்பாடுகளின் வெற்றியும் முன்வைக்கப்பட்டதுடன் அதை பின்பற்றும் நோக்குடன் இக்கூட்டத்தில் முடிவுகள் எடுக்கப்பட்டது.

செய்தித் தொகுப்பு :
எஸ். அன்ரன் ராஜகாரியர்
(ராஜன்)
இணைப்பாளர், கிராமிய விழிப்பூட்டல் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்

# கதையும் கருத்தும் களமும்

அருட்பணியாளர். அன்புராசா அ.ம.தி



ஒரு பத்திரிகையில் படித்த சம்பவம் ஒன்று. கிளுகிளுப்பூட்டும் கவர்ச்சிப் படம் திரையிடப்பட்டது. தணிக்கைக் கத்தரிக்கோலுக்கு தப்பிவந்து பரபரப்பை ஏற்படுத்திய உணர்ச்சிக் காவியமது. பகலிரவுக் காட்சிகள் என்று பட அரங்கு நிரம்பி வழியும் காட்சி. கொளுத்தும் வெயிலிலும் அனுமதிச் சீட்டுக்காக முண்டியடித்துக்கொண்டிருக்கும் பெரும் கூட்டம். அடுத்த "ஷோ" (Show)வுக்காக நீண்ட வரிசை. வியர்வை நாற்றத்திலும் ஒரு விடாமுயற்சி.

படம் ஆரம்பமானது. ஆ... ஊ... சூ... ஓ... என்று விசில் சத்தங்கள். நடிகையின் ஆடைக்கு அதிக செலவில்லாமலே தயாரிப்பாளர் படம் எடுத்திருந்தார். உடையில் சிக்கனம் எந்தளவிற்கு என்றால், உதிரிப் பாகங்களைக் கஸ்ரப்படாமலேயே பார்க்கக்கூடியதாக இருந்தது. படம் முடிந்தது. படமாளிகையை விட்டு வெளியே மக்கள் போய்க்கொண்டிருந்தார்கள். படமாளிகை-யின் பிரதான வாசலருகே கிழிந்த உடையுடனும், ஒட்டிய வயிற்றுடனும் ஒருத்தி கையேந்திப் பிச்சை கேட்டுக்கொண்டிருந்தாள். வெளியேறிக்கொண்டிருந்த ரசிகர்களில் ஒருவன், "சீ... சீ... நாகரிகமே இல்லாமல்... இப்படி அரையும் குறையுமா? பார்க்கவே அசிங்கம்... தள்ளிப்போ..." எனக் கூறிவிட்டுப் போனான்.

"இதனால் சகலமானவர்களுக்கும்..." என்ற நூலில் கவிஞர் வைரமுத்து கூறுகையில், "பண்பாடு என்பது அகம். நாகரிகம் என்பது புறம். எதையாவது உடுத்தியிருக்க வேண்டுமென்பது பண்பாடு. எந்த வடிவத்தில் உடுத்த வேண்டுமென்பது நாகரிகம். பண்பாடு என்பது வேர்: மாறாதது. நாகரிகம் என்பது கிளை; மாறுதலுக்குட்பட்டது" என்கிறார்.

ஆக, நாகரிகம் மாறிக்கொண்டே இருக்கும் என்ற வாதத்தை ஏற்றுக்கொண்டாலும், ஆங்காங்கே ஆடைக்குறைப்பும், கறையான் அரித்ததுபோல தலைமுடிவெட்டும், காதில் கடுக்கண் அணிவதும், சட்டையிலே – காற்றோட்டத்திற்காகக்கூட வைத்திருக்கலாம் - யன்னல் வைத்திருப்பதும்தான் நாகரிகம் என்று எண்ணித் திரிகிற கூட்டம் ஒன்று சுற்றித்திரிகிறது. நிச்சயமாக, இவை நாகரிகத்தின் எந்த வகை என்பதை நாமறிவோம்.

அமெரிக்காவில் ஒரு பத்திரிகையில் கணவன் ஒருவர் கொடுத்த விளம்பரம் அது. "இனி என் மனைவி வாங்கும் எந்தக் கடனுக்கும் நான் பொறுப்பாளியாக முடியாது". மறுநாள் அதே பத்திரிகையில் மனைவி கொடுத்திருந்த விளம்பரம் இது, "என் கடன்களுக்கு யார் பொறுப்பாளியாக இருக்கிறாரோ, அவர்தான் இனி என் கணவர்". அமெரிக்காவின் நாகரிகம் அல்லது மேற்கத்தேய நாகரிகம் எப்படியான மாறுதலுக்குட்பட்டு வருகின்றது என்பதை ஊகித்துப் பார்க்கலாம்.

ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி, ஆற்றைக் கடந்த பின் நீ யாரோ நான் யாரோ என்று கூறுவதைப்போல, கூடி வாழும் வரை குடும்பம், பிரிந்து போகும்போது 'பிறதர் அன்ட் சிஸ்ரர்' (Brother and Sister) என்ற நிலைப்பாட்டிற்தான் மேற்குலகின் நாகரிகம் நகர்ந்துகொண்டிருக்கிறதுபோலத் தெரிகிறது. இது எங்குபோய் முடியுமென்று இருந்து பார்க்க வேண்டிய அவசியம் கிடையாது. ஏனென்றால் அதன் போக்கு இப்போதே தெரிகிறதே!

மேற்குலகில் வாழ்பவர்கள் எல்லாரும் இத்தகைய நாகரிகத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்று தயவுசெய்து தப்பாகப் புரிந்து கொள்ளாதீர்கள். அப்படிப் புரிந்துகொண்டால் தவறு என்னிலல்ல உங்களில்தான். மேற்குலகில் வாழ்கின்ற பலர் பண்பான, நாகரிகமான, முன்னுதாரணமான வாழ்க்கை வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இங்கு எதைக் கோடிட்டுக் காட்டுகிறேன் என்றால், நாகரிகத்தின் போக்கு மேற்குலகில் இப்படியும் போய்க்கொண்டிருக்கிறது என்பதைத்தான்.

தேவநேயப் பாவாணர், பண்ணுதல் எனும் வினைச் சொல்லிலிருந்து பண், பண்பாடு போன்ற பெயர்ச்சொற்கள் தோன்றுவதாகக் கூறுகிறார். பண்படுவது பண்பாடு என்கிறார் இவர். அதாவது பண்பாடு என்பது சீர்படுத்தல் என்றாகிறது என்பார். மேலும் பண்படுத்தப்பட்ட நிலமே பண்ணை ஆயிற்று என்கிறார். பண்பாடு, "அது ஒரு பகாப்பதம் என்றே நான் கருதுகிறேன், பகுத்துப் பார்க்கலாம். ஒழுங்காகப் பாடப்படுவது, 'பண்'; ஒழுங்கு முறை தவறாமல் இருப்பது 'பண்பாடு'" என்கிறார் கவியரசு கண்ணதாசன்.

தேவநேயப் பாவாணரின் கருத்துப்படி நகரகம் எனும் சொல்லின் திரிபுதான் நாகரிகம் என்கிறார். நகர் + அகம் = நகரகம். நகரகம்... நகரகம்... நகரகம்... நாளடைவில் நாகரீகம் ஆகியிருக்க வேண்டும் எனக் கருதுகிறார். நகர் என்ற சொல்லிற்கு அரண்மனை, கோவில், மண்டபம் போன்ற அர்த்தங்கள் உள்ளன. நகரில் அரண்மனை இருந்ததால் அது முன்னேற்றம் பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு நகரிலிருந்து நாகரீகம் என்ற சொல் வளர்ந்திருக்க வேண்டும் என்பார்.

நாகரீகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையிலான வேறுபாட்டினை தேவநேயப் பாவாணர் குறிப்பிடுகின்றபோது, "நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை. அது எல்லாப் பொருள்களையும் தமக்கே பயன்படுத்துவது. பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம். அது எல்லாப் பொருள்களையும் தமக்கும் பிறருக்கும் பயன்படுத்துவது என்று கூறுகிறார்.

நமது நாகரீகம் இன்று எங்கே போய்க்கொண்டிருக்கிறது? என்ற கேள்வி இன்று அடிக்கடி எழுப்பப்படுகிறது. நாகரீகம் என்றதும் ஏதோ உடையிலும், நடையிலும், முடியிலும் ஏற்படுத்தும் மாற்றம் என எண்ணுபவர் பலர் உண்டு. ஆனால், நாகரீகம் என்பது பண்பட்ட, ஒழுக்கமான, ஒழுங்கான வாழ்க்கை முறை என்பதைப் பலர் எண்ணிப்பார்க்கிறார்கள் இல்லை.

ஒரு தடவை "நம் நாட்டு நாகரீகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது?" எனக் கவியரசு கண்ணதாசனிடம் கேட்கப்பட்டபோது அவர் கூறிய பதில்: "நம் நாடென்ன உலகத்து நாகரிகமே ஆதிவாசிகளை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. இன்னும் ஐம்பது ஆண்டுகளில், மனிதர்கள் ஆடை வாங்க வேண்டிய அவசியம் இருக்காது; ஆண் - பெண் சேர்க்கைக்குத் தனியறை தேவைப்படாது; எது யார் பிள்ளை என்று தெரியாது. கலி யுகத்தின் முடிவாகவே அது இருக்கும்" என்றார்.

## நன்றி கூறுகின்றோம், வாழ்த்தி வழியனுப்புகின்றோம்




கடந்த இரண்டு ஆண்டுகளாகக் *கதையும் கருத்தும் களமும்* என்ற இப்பகுதியை எழுதிவந்த அருட்பணியாளர் அன்புராசா (அமதி) அவர்கள் பிரான்ஸ் நாட்டு லூர்து பதியில் இறைபணியாற்றச் செல்வதால் இப்பகுதியை இத்துடன் நிறைவு செய்கின்றோம்.

அடிகளாரின் ஆழம் மிக்க கருத்துக்கள் எந்தளவுக்கு வாசகர்களைத் தொட்டிருக்கின்றது என்பதற்கு வாசகர்களிடமிருந்து வந்த கடிதங்களே தக்க சான்றாகும்.

*அன்பு அடிகளாருக்கு நன்றி கூறி, வாழ்த்தி வழியனுப்புகின்றோம்.*

- பதிப்பாசிரியர் -



"உன் வேகம் உன்னை விவேகம் இல்லாதவனாக மாற்றிட இடம்கொடாதே...!

*டீ. ஜெனட் நீரஜா, நல்லாயன் மகளிர் கல்லூரி, கண்டி.*

"தாய் இல்லாத வீடு கடவுள் இல்லாத ஆலயம்"

*எ. டினுசா சாளினி, தரம் : 07, யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.*

"கடலலைகள் உன் கால்களை முத்தம் இடுவதால் அதை ஆழமற்றது என்று நினைத்து விடாதே"

*தே. ஜெர்மா, சாளம்பன்.*

"அழிவுக்கு முந்தியது அகந்தை
வீழ்ச்சிக்கு முந்தியது வீண் பெருமை"

*சி. ஜான்சி, நடுக்குடா*

"எவரையும் நீ அடிமையாக்காதே
அவ்வாறே நீ எவருக்கும் அடிமையாகாதே"

*ஜி. குயின்சி நிலோஞ்சி, சாளம்பன்.*

"நீ என்ன நினைக்கின்றாயோ
அதுவாகவே மாறுவாய்"

*யோ. தயாபரன், புதுக்கமம், உயிலங்குளம்.*

"தன்னை நம்புகின்றவன் தன்னைத் தொலைக்கின்றான். இறைவனை நம்புகின்றவன் அனைத்தையும் சாதிக்கிறான்."

*இ.அஜந்தன், பார்மேனி வீதி, கீரி.*

"கவலை உனக்குள் இருக்கலாம் ஆனால்
கவலைக்குள் நீ இருக்கக் கூடாது"

*ஆ. அமலன் மிரால், வீரபுரம், நேரியகுளம்.*

"பணக்காரனாய் இருப்பதைவிட பண்புள்ளவனாய் இருப்பது மேலானது. காதல் செய்வதைவிட நட்பாய் இருப்பது மேலானது"

*செ. நிரஞ்சன், வீரபுரம்*

## மன்னா விளம்பரப் பலகை

"அழகையும் மிஞ்சியது அடக்கம்
இசையையும் மிஞ்சியது இனிய பழக்கம்"

*செ. நிலோசியன், சாளம்பன்.*

"படகில் தண்ணீரும் வீட்டில் செல்வமும் நிறைந்துவிட்டால் இரு கைகளாலும் அள்ளி, அள்ளி வெளியே தள்ளுங்கள். அப்போதுதான் படகும் வீடும் பிழைக்கும்."

*அன்ரன் தேவசகாயம், பிரான்ஸ்*

"விளிம்பில்லாத குவளையிலிருந்து விரும்புகின்ற பாத்திரத்திற்குள் தண்ணீர் ஊற்றமுடியாது."

*அன்ரன் தேவசகாயம், பிரான்ஸ்*

"குணமாக நீ பல வார்த்தைகள் பேசினாலும், நீ கோபப்பட்டு சீறும் ஒரு வார்த்தை உன்னைப் பலர் நடுவே வெறுக்க வைத்து விடும்.

*ஆ. இமெல்டா, காத்தான்குளம், உயிலங்குளம்*

"அனைவருக்கும் ஆசைப்பட உரிமையுண்டு.
உழைத்துப்பெற அனுமதியுண்டு – ஆனால்
அபகரிக்க அதிகாரம் இல்லை."

*ஆ. சுபோதினி, செட்டிக்குளம்*

"கடவுளின் திருச்சட்டம் மனிதர்களின் நல் வாழ்விற்கே. அதை உள்ளத்தில் இருத்தினால் தடுமாற்றம் என்பதே இல்லை."

*எ.ஜெ. விஜானி தற்க்குருஸ் தரவன்கோட்டை, மன்னார்.*

"ஆம் என்று கூறுமுன் அமைதியாகப் பல முறை யோசி. பொங்கும் சீற்றத்திலும் பொறுமை கொள்பவளே பெண்."

*ம.பவளராணி குரூஸ், சவேரியார் புரம், சிலாவத்துறை*

இந்த விளம்பரப் பலகை உங்களுக்கானது. இதில் நீங்களும் எழுதலாம். இதுபோல 'சுருக் 'நறுக் சுவையாய் ...... எழுதி அனுப்புங்கள்.

முகவரி :

மன்னா விளம்பரப் பலகை
மன்னா பணியகம்,
மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்தியார் பேராலய வீதி,
மன்னார்.

# "சமாதானப் பயம்"

சமாதானம் பற்றி இன்று முழு உலகமும் பேசிவருகின்றது ஏன், சமாதானத்தின் நிலை உணரப்பட்டதினாலா? அல்லது உலக நாடுகள் கிடைத்த சமாதானத்தை இழக்கப்போகின்றோம் என்ற பயத்தினாலா?

♣ உலகில் மக்களை ஆட்டிவைப்பதே "பயம்" ஒன்றுதான்.
♣ இலங்கையில் பௌத்த மதத்தவர்கள் பெரும்பான்மையாக இருந்தும் தமது சமயம் எதிர்காலத்தில் குறைவடையப் போகின்றதே என்ற "பயம்".
♣ சிங்கள மொழி பேசும் சிங்களவர்கள் இலங்கையில் பெரும்பான்மையாக இருந்தும் தமது மொழி ஏனைய மொழிகளினால் ஆக்கிரமிக்கப்படப்போகின்றதே என்ற "பயம்"
♣ முஸ்லீம் மக்கள் தமது நிலம், கலாச்சாரம், மதம் போன்றவைகள் ஏனையவர்களால் பறிக்கப்படப்போகின்றதே என்ற "பயம்".
♣ தமிழ் மக்களுக்குத் தமது சொந்தப் பூமி ஏனைய இனத்தால் சுரண்டப்படப்போவதாக "பயம்"
♣ படித்து பட்டம் பெற்றவர்களுக்கு வேலை கிடைக்காதோ என்ற "பயம்"
♣ பெற்றோர்களுக்குத் தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி "பயம்" "பயம்"
♣ பிள்ளைகளுக்கு சுதந்திரமாக வாழமுடியவில்லையே என்ற "பயம்"
♣ வென்ற அரசியல்வாதிகளுக்கு தமது பதவி பறிபோகப்போகிறதோ என்ற "பயம்"
♣ தோற்ற அரசியல்வாதிகளுக்குத் தமக்கு அடுத்த பதவி கிடைக்குமா என்ற "பயம்"
♣ கர்ப்பிணித்தாய்க்குப் பிள்ளைப்பேறு பற்றிய "பயம்"
♣ மக்களுக்கு உண்ண உணவு இல்லையே என்ற "பயம்"
♣ சமைத்த உணவை உண்ண முடியவில்லையே என்ற "பயம்"
♣ உண்ட உணவு ஜீரணிக்குமா? என்ற "பயம்"
♣ படைத்தவன் கைவிட்டு விடுவானோ என்ற "பயம்"
♣ நடக்காததை நடந்துவிட்டால் என்று எண்ணிப் "பயம்"
♣ நம் கையில் உள்ள சமாதானத்தை இழக்கப்போகிறோமோ என்ற "பயம்"
♣ இழந்த சமாதானம் மீண்டும் கிடைக்குமா என்ற "பயம்"
♣ கிடைத்த சமாதானம் நிலைத்திருக்குமா? என்ற "பயம்"

"ஏ மனிதா! "பயம்" உன்னை ஆட்டிப் படைக்கின்றான். நீ "பயத்தை" பற்றி ஏன் பயப்பட வேண்டும்? "DON'T WORRY UNTIL WORRY WORIES YOU"

♣ சமாதானம் என்னில் முதலில் மலரவேண்டும்.
♣ நம்பிக்கையே பலம். எனவே "பயத்தைப் பற்றி பயப்படாதே"
♣ நடப்பது நன்றாக நடக்கட்டும்!
♣ நடந்தது இனிதாக உள்ளதாக நம்புவோம்!!
♣ நடக்கிறது நன்றாக நடப்பதாக நம்புவோம்!!!
♣ நடக்காதது எமது நன்மைக்கே என நம்புவோம்!!!!
♣ "பயம்" சமாதானத்தைத் தராது.
♣ சமாதானம் உள்ளவர்க்கு பயம் இல்லை.

பயம் இருந்தால் நீ மனிதன் இல்லை.

சின்கிலேயர் பீற்றர், CHA , உளநலப் பிரிவு.

# இளைஞர் மொழிவு

## இன்றைய இளைஞர் யுவதிகளின் அழுகுரல் கேட்கிறதா?

து. றொசிற்றா, மடு

இன்றைய இளைஞர்களே நாளையத் தலைவர்கள் என்பது நிஜமானதா? இன்று எம் இளைஞர் யுவதிகள் நாளுக்கு நாள் நசுக்கிப் பிழியப்பட்டு மரணத்தின் விளிம்பில் தள்ளப்படுகின்றார்கள். நாளும் பொழுதும் கண்ணீரோடும் கவலைகளோடும் அழுது புலம்பும் எம் சமூகத்தின் இந்நிலை யாருக்குப் புரியும்? தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பார்கள்!



எமது சுதந்திரங்கள் அனைத்துமே பறிக்கப்பட்டு, சிறகடித்துப் பறக்கும் வயதிலே சிறகுடைந்து அடக்கப்பட்டு துன்பத்தாலும் துயரத்தாலும் துவக்கின்றோம். எமது இலட்சியக் கனவுகள் அனைத்துமே மண்தோண்டிப் புதைக்கப்படுகின்றன. எதிர்பார்ப்புக்கள் அனைத்துமே சிதறடிக்கப்பட்டு வாழத்துடிக்கும் வயதிலே சாகடிக்கப்படுகின்றோம். எமது கண்ணீரைத் துடைப்பார் யாருமில்லையா? நாம் மடிவதுதான் இவ்வுலகின் நியதியா? இது விதியா? இல்லை சதியா?

நாளாந்தம் கண்ணீரோடும் கவலையோடும் சோகங்களே வாழ்க்கையின் வேதங்களான எமக்கு ஆறுதல் கூறவோ, அரவணைக்கவோ யாருமில்லையா?

எம் நாட்டில் ஆறுதல் அளிக்க வேண்டியவர்களே வெந்த புண்ணில் வேல் பாய்ச்சிவிட்டார்கள். ஏன் பிறந்தோம் என்று இறைவனிடம் கேள்வி கேட்கும் இளஞ்சமூகம் கருவறையிலே கல்லறையாகி இருந்தால் மகிழ்ந்திருக்குமே! பாலூட்டி, சீராட்டி வளர்த்துவிட்ட ஆசையாய்ப் பார்க்க வேண்டிய வயதிலே எமது பெற்றோர் இன்று எமது அவலத்தைப் பார்க்கிறார்கள்.

"பிள்ளை பெறாத மலடிகளும் பாலூட்டாத கொங்கைகளும் பேறுபெற்றவர்களே" என்ற காலகட்டம் இப்போ உருவாகி அந்த வேத வாக்கும் உண்மையாகிவிட்டது. எமக்காக குரல் கொடுக்க வேண்டியவர்கள் யாரும் இல்லையா?

இன்று சராசரியாக ஐந்து அறிவு படைத்த மிருகங்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதைகூட எமக்கு கிடைக்கவில்லையே? உண்மைகள் புதைகுழி தோண்டிப் புதைக்கப்பட்டு, மனித மாண்பு அழிக்கப்பட்டு மனித உயிர்கள் தூசாகக் கருதப்படும் எம் நாட்டிற்கு எப்போது விடிவு வரும்? எமது இந்நிலை நீங்குமா? அல்லது நீடிக்குமா? யாரிடம் கேட்பது? எம்மை இந் நிலைக்குத் தள்ளியவர்கள் உணர்வார்களா? "அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்." ஒரு காலம் வரும் அப்போது சம்மந்தப்பட்டவர்கள் உணர்வார்கள்!

எமது உள்ளத்து உணர்வுகளை, இருதயக் குமுறல்களை யாரிடமும் கூறி ஆறுதல் பெறமுடியாத நிலையில் வெறும் பேப்பரில் எழுதுகின்றோம். எமது விடிவிற்காய் காத்திருக்கின்றோம். கதறுகின்றோம், ஏங்குகின்றோம், துடிக்கின்றோம்.

எம் நாட்டின் சமாதானத்திற்காக, எமது மீட்புக்காக எல்லோரும் ஒன்றுசேர்ந்து செபியுங்கள் எனக் கேட்கின்றோம். ●

# ஆக்கபூர்வமான சிந்தனை



சில மனிதர்கள் எந்தக் காரியத்துக்கும் "இது என்னாலே முடியாது" என்று கூறிக்கொள்வார்கள். இந்த முடிவிற்கு அவர்கள் எப்படி வந்தார்கள் என்று பார்த்தால் அதற்கான அடிப்படையே இருக்காது. முடியாது என்று சொல்லிவிடுவது சுலபம். அதற்கு முயற்சியே தேவையில்லை. முடியும் என்று நினைக்கும் போதுதான் முயற்சி என்பது முளைவிடத் தொடங்கும். இது நடக்கும் என நம்புவதுதான் ஆக்கபூர்வமான சிந்தனையின் ஆரம்பமாகும்.

நம்பிக்கைதான் இதற்கு முதற்படியாகும். முடியும் என்று எண்ணுவதால் எல்லாம் முடிந்துவிட்டது என்று அர்த்தமில்லை. முடியும் என்ற ஆக்கபூர்வமான சிந்தனை செயலுக்கு வித்தாகிறது. சிந்தனை செயலாக வேண்டும்.

ஒரு செயலைச் செய்யும் முன்னர் அச்செயலில் உள்ள சிரமங்களை முதலில் தெளிவாகக் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும். கண்மூடித்தனமாக எல்லாக் காரியத்திலும் ஈடுபடக்கூடாது. செய்யப்போகும் காரியத்திலுள்ள கஷ்டங்களைக் கண்டு மலைக்கவும்கூடாது. அச் சிரமங்களை எவ்வாறு சமாளித்துக்கொள்ளலாம் என்று திட்டமிட வேண்டும்.

ஆக்கபூர்வமான சிந்தனை ஒருவனுக்கு இல்லையேல் முதல் சிரமத்தைச் சந்திக்கும்போதே சோர்ந்து விடுவான். இது எம்மால் முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் சிரமங்களைச் சந்திக்கும் மன உறுதி கிடைக்கிறது. மன உறுதி இல்லாமல் எமக்கு வரும் தடைகளை உடைக்க முடியாது.

எண்ணங்கள் பலவீனப்படும்போது மனிதன் செயலிழந்து போகின்றான். இதை உளவியலாளர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள். ஒருவன் ஒரு காரியத்தைத் திடமாக மனதிற் கொள்ளும்போது அந்தக் காரியம் வெற்றி பெறுவதற்கான சூழ்நிலையை எண்ணங்களே உருவாக்கிக்கொள்ளுகின்றன என்று அனுபவ வாயிலாக அறிந்த ஞானிகள் கூறியிருக்கிறார்கள். "ஒரு மனிதன் எதை நினைக்கிறானோ அதன்படி அவன் ஆகிவிடுகிறான்" என்று ஆங்கிலத்தில் ஒரு வாசகம் உண்டு. ஒருவன் தன்னைப்பற்றி உயர்வாக எண்ணினால் உயர்வாயும், தாழ்வாக எண்ணினால் தாழ்ந்தும் போகின்றான். நல்ல எண்ணங்கள் ஒருவனை வாழ்க்கையில் உயர்வடையச் செய்கின்றன.

நாம் ஒரு வீட்டைக் கட்டமுன்னர் பட வரைஞனிடம் கொடுத்து எமக்கு விருப்பமான விதத்தில் வரைவிக்கின்றோம். உண்மையில் அது வீடு அல்ல. காகிதத்தில் உள்ள இக்கற்பனைக்குச் செயலுருவம் கொடுத்தால் உண்மையான வீடாகிறது. அதாவது உழைப்பும் முதலீடும் அவசியமாகிறது.

இதுபோன்று நாமும் எமது வாழ்வில் ஆக்கபூர்வமாகச் சிந்திக்க வேண்டும். நல்லவையே நடக்கும் என்று நம்ப வேண்டும். வெற்றி கிடைக்கும் என்று முயற்சி செய்ய வேண்டும். முடியாது என்று எதையும் ஒதுக்கிவிடாது, முடியுமா? என்று ஆலோசித்துப்பார்க்க வேண்டும். எமது வாழ்வில் வெற்றி என்பது நாம் செய்த காரியத்தை வைத்து அமையுமே தவிர, செய்யத் தவறிய காரியங்களை வைத்து அமையாது. ஒரு செயலைச் செய்ய முயற்சி தேவை. முயற்சிகள் நடைபெற எண்ணங்களுக்கு வலிமை வேண்டும். ஆக்கபூர்வமான சிந்தனைகள் மூலமே எண்ணங்களுக்கு ஊக்கம் கிடைக்கிறது.

என்ன நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம். உங்கள் சிந்தனைகளைக் காலை, மாலை தூய்மைப்படுத்துங்கள். உள்ளுணர்வுகளில் உற்சாகம் பிறக்கும் விதத்தில் தோல்வியை மட்டும் சிந்திக்காது வெற்றியை நல்லதை மனதில் கொண்டு முன்னேறுங்கள். உள்ளுணர்வுகள் உற்சாகப்படத் தொடங்கியதும் உடல் உறுப்புக்களும் உற்சாகப்படத் தொடங்கும். அதன் மூலம் எமது செயலும் ஊக்கப்படத் தொடங்கும். வாழ்க்கை மகிழ்ச்சியாக மாறும். ●

# ஒன்றுக்கொன்று தொடர்புள்ள ஈடுகொடுக்கின்ற துறவற வாக்குறுதிகள்

ஏ. சுதர்சினி பெனான்டோ
பெரியபண்டி விரிச்சான், மடு


ஒருவன் தன்னை முழுமையாக இறையன்பிற்குத் திறந்து விடுகின்றான். இந்த அன்பு ஆழமானது, விரிவானது. இந்த அன்பைத்தான் வள்ளுவர், "அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்" என்ற தனது குறளில் கூறினார் போலும். இந்த அன்பைத்தான் வள்ளுவர் பிறிதோர் இடத்தில், "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்று அன்பின் எல்லையைச் சுட்டிக்காட்டுகின்றார்.

இறுதி இராவுணவின்பொழுது இயேசு அன்பைப்பற்றி அன்பொழுகச் சொல்லி, அன்பின் ஆழத்தைக் கோடிட்டுக் காட்டினார். "தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை" (அரு. 15:13). இந்த அன்புதான் நிபந்தனையற்ற அன்பு (Unconditional love) எனக் குறிப்பிடப் படுகின்றது.

இந்த அன்பு எதையும், எவரையும் தனதாக்கிக்கொள்வதில்லை. எதையும் எதிர்பார்த்துச் செய்யும் அன்பும் அல்ல. பிறர்க்கென்று வாழ்வதிலேயே நிறைவைக் காணும் அன்பு இது. இறையன்பிற்குத் தன்னை முழுமையாகத் திறந்துவிட்டு தெய்வீக அன்பை சுவைத்து வாழும் ஓர் அன்பு வாழ்வு இது.

மணத்துறவு (Celibacy) வாழ்வைத் தேர்ந்துகொள்வோர் இறைவனைத் தம் வாழ்க்கையின் மையமாகக் கொண்டு வாழுகின்றனர். எவ்வளவு ஆழமாகத் தம்முள் சென்று, தம்முள் உறையும் இறையன்பைத் தேடுகின்றோமோ அவ்வளவுக்கு அந்த அன்பு விரிவாகப் பரவி அகன்று செல்லும்.

துறவற வாக்குறுதிகளாகிய *கீழ்ப்படிவு, ஏழ்மை, கற்பு* ஆகிய மூன்று வாக்குறுதிகளையும் ஆழமாக உற்று நோக்குவோமானால் அவை ஒன்றோடொன்று தொடர்புள்ளதாயும், ஒன்றுக்கொன்று ஈடுகொடுப்பதாக இருப்பதையும் காணலாம்.



இறைவனின் அழைப்பைக்கேட்டு, அதற்குச் செவிமடுத்து ("கீழ்படிவு") ஆரம்பிக்கும் பயணம் ஒரு வெறுமையாக்கும் பயணமாக ("ஏழ்மை") வளரும். அந்த வெறுமையிலும், வறுமையிலும் இறையன்பிற்கு நம்மைத் திறந்துவிடும்பொழுது ஏற்படும் இறையன்புணர்வில் ஒரு அன்பு நிபந்தனையற்ற அன்பாக மலரும் ("கற்பு").

இப்பயணம் ஒரு நேர்கோட்டில் தொடர்ச்சியாகச் செல்வதில்லை. மனித பலவீனங்கள், மனித பிடிப்புக்கள், பற்றுதல்கள் தடைகளாக அவ்வப் பொழுது அமைவதுண்டு. ஆனால் எமது பயணத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டும். எமது பலவீனங்களையும், பற்றுதல்களையும், பிடிப்புக்களையும் அடையாளம் கண்டு அவற்றில் இருந்து எம்மை வெறுமையாக்கிச் செல்லும் எமது நீண்ட பயணம் ஓர் ஆக்கபூர்வமான பற்றுறுதி கொண்ட பயணமாக அமையும். இந்த ஆக்கபூர்வமான பற்றுதலுக்கு எம்மை நாம் அர்ப்பணம் செய்ய வேண்டும். ●

# துன்பமின்றி வெற்றியில்லை

ஆசிரியர்
எம். எம். நிக்சன்
மன்/ அடம்பன் ம.ம.வி

கிறிஸ்தவ வாழ்வென்பது வெறுமனே ஒரு மேலெழுந்தவாரியான வாழ்வல்ல. மாறாக அது பல்வேறு சவால்கள், அர்ப்பணிப்புகள், தியாகங்கள் நிறைந்தது. இவற்றை எதிர்கொண்டு வாழும்போதே கிறிஸ்தவ வாழ்வு அர்த்தம் பெறுகின்றது.

ஒரு தாயானவள் கருவுற்ற தனது குழந்தையை பெற்றெடுக்கு மட்டும் எவ்வளவோ தியாகங்களைச் செய்யவேண்டியவளாகிறாள். தனது உணவை ... நித்திரையை ... பொழுது போக்கு நேரத்தை ... என அடுக்கிக்கொண்டே போகலாம். பல்வேறு வேதனைகளையும் அனுபவித்தே அவள் குழந்தையொன்றைப் பெற்றெடுக்கின்றாள். அக்குழந்தையே அவளுடைய மகிழ்ச்சி. அதன் ஒவ்வொரு கட்ட வளர்ச்சிப்படிகளுக்கும் தன் வாழ்வை அர்ப்பணித்து மகிழ்கின்றாள்.

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற ஒலிம்பிக் போட்டியிலே தங்கப் பதக்கத்தைப் பெறுவதற்காக ஒரு விளையாட்டு வீரன் தன் உடலை வருத்திப் பயிற்சியில் ஈடுபடுகின்றான். பல கட்டுப்பாடுகளை தனக்குள் ஏற்படுத்துகின்றான். வீணாகப்போகும் நேரத்தை பயன்படுத்துகின்றான். தேவையற்ற ஆசைகளை அடக்கி வெற்றியையே குறிக்கோளாகக் கொண்டு வினைத்திறனாக செயற்படுகின்றான். தங்கப் பதக்கம் பெறுகையில் அவன் மக்கள் மத்தியில் அடையும் பேருவகைக்கு அளவே இராது.

ஒவ்வொரு புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றையும் நோக்கும்போது அவர்கள் தம் வாழ்க்கைப் பயணத்தில் எவ்வளவோ துன்பங்களை அனுபவித்துள்ளார்கள். இவர்களே மனித நிலையில் இருந்து உயர்ந்து பலரும் போற்றும் புனித நிலைக்கு வித்திட்டுள்ளனர்.

இவை யாவற்றிலும் மேலாக இறைமகன் கிறிஸ்து மனுவுரு எடுத்து மனிதனாக வாழ்ந்து பல பாடுகளை அனுபவித்து மரணத்தின் ஊடாக மனுக்குலத்தின் பாவத்திற்காய் தன்னை அர்ப்பணித்தார். அவருடைய மகத்தான உயிர்ப்பினூடாக வெற்றிவீரனாக எழுந்து மனுக்குலத்தை மாட்சிப்படுத்தினார்.

பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் யோசுவா மோயீசன் வழியாக வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் செல்லப்படும்போது தமக்கு ஏற்பட்ட அசௌகரியங்களையிட்டு முணுமுணுத்தனர். இறைவனுக்கு எதிராக செயற்பட முற்பட்டனர். இத்துன்பப் பயணத்தினூடாக ஒரு நன்மைத்தனத்தை இறைவன் அருள்வார் என்ற நம்பிக்கையை இழந்தார்கள். ஆயினும் இறைவன் மன்னாவைப் பொழிந்து அவர்களோடு பயணித்தார்.

இவை யாவும் துன்பங்களின்றி, தியாகமின்றி, அர்ப்பணிப்பின்றி வெற்றியில்லை, மாட்சியில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

"கிறிஸ்து யாரை அன்பு செய்கின்றாரோ அவர்களைத் தண்டிக்கின்றார்." என புனித சின்னப்பர் அழகாகக் கூறுகின்றார்.

சில துன்பங்கள் நிகழ்ந்தவுடன், "கடவுளுக்கு கண்ணில்லையா? எனக்குத்தான் இப்படி. ஏன் இப்படி என்னை சோதிக்கிறாரோ தெரியாது" என்றெல்லாம் பலர் கூறக் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் இத்துன்பங்களினூடாக இறைவன் நமக்கு ஏதோ ஒரு செய்தியைக் கூற முனைகின்றார் என எண்ணுவதற்குத் தவறுகின்றோம்.

பலர் வெற்றி பெற விரும்புகின்றார்கள். ஆனால் அவ்வெற்றியை ஈட்டுவதற்காகத் தம்மை ஈடுபடுத்த, அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ள, நேரத்தை, வினைத்திறனுடையதாகப் பயன்படுத்த, சவால்களை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதில்லை.

மனித வாழ்வில் துன்பம் என்பது இரண்டறக் கலந்த ஒன்று. எனவே துன்பத்தைக் கண்டு துவண்டுவிட வேண்டிய அவசியம் இல்லை. அவற்றை நல்ல முறையிலே எதிர்கொண்டு அவைகளுக்குள் இருக்கின்ற செய்தியை ஆழமாகப் புரிந்துகொண்டு ஒரு இலட்சியத்தை, வெற்றியை, இலக்கை அடைய முற்படுகையில் சவால்களையும் எதிர்கொள்ளுவோம், துன்பங்களையும் ஏற்றுக்கொள்ளுவோம் அர்ப்பணிப்போடு செயற்படுவோம். ●

**வழிபாடு பற்றிய ஆழமான அர்த்தங்களை இலகு தமிழில் வெளிக்கொணரும் புதிய தொடர்!**

# வாழ்வும் வழிபாடும்

தருவது வலண்டின் ஜோசப்

## வழிபாட்டில் இசை!

தொடர் - 8

இசையே வழிபாட்டு மொழியாக இருந்த ஒரு பண்பாட்டிற்குச் சொந்தக்காரர்கள் நாம். திருவாசகம், தேவாரம் போன்ற இசைப்பாடல்களை பக்திநயம் சொட்டச் சொட்டப் பாடி பரமனையே பாருக்கு இழுத்து வந்த பாரம்பரியங்கள் நமக்கு உண்டு. நம்முடைய வழிபாட்டில் இசை முக்கியமான இடத்தைப் பெறுகின்றமை வெள்ளிடைமலை. அருமையான இசையும், அர்த்தம் பொதிந்த பாடல்களும் அரங்கேறுகின்ற நேரத்தில் திருவழிபாடு தெய்வீக உறவின் சாட்சியாக மாறுகிறது.

நமது ஆலயங்களில் இசை என்றாலே பாடகர் குழுதான் நினைவுக்கு வருகின்றது. பங்கிலே சிறந்த பாடகர் குழுவை வடிவமைப்பதற்குப் பணியாளர்கள் அரும்பாடுபடுகின்றார்கள் என்பது உண்மை. இந்தப் பாடகர் குழு என்ற அமைப்பே மத்திய காலத்தில் தோன்றிய ஒன்றுதான். ஆதித் திருச்சபையில் அனைவரும் சேர்ந்து பாடி இருக்கின்றார்கள். காலப்போக்கிலே இலத்தீன் மொழியின் கவிவளத்தையும், இலத்தீன் இசையின் செறிவையும் கட்டிக் காக்கும் பொருட்டு பாடகர் குழுக்கள் தோன்றி வளர்ந்திருக்கின்றன.

### இணைந்து பாடும் இனிய கலை



இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 'திருவழிபாடு என்ற ஏடு 'திரு இசை' என்ற தலைப்பில் வழிபாட்டு இசைக்கு புதிய வேறுபட்ட திசையைக் காட்டியிருக்கிறது (எண் 112 – 121). வழிபாட்டில் இசை என்பது அனைவரும் சேர்ந்து பாடுகின்ற வழிபாட்டுச் செயல் என்பதே இந்தப் புதிய வழிமுறை.

அனைவரும் சேர்ந்து பாட உதவி செய்வதே பாடகர் குழுவின் பணி என்பது வத்திக்கான் சங்கம் காட்டும் பாதை. எல்லோரையும் பாடவைப்பதும், எல்லோருடைய பங்கேற்பை நெறிப்படுத்துவதும்தான் பாடகர் குழுவின் நோக்கம். எனவே திருவழிபாட்டில் பாடகர் குழு முக்கிய பங்காற்றுகிறது. அனைவரும் பார்க்கும் வகையில் பீடத்திற்கு அருகில் அது முக்கிய இடத்தில் அமையவேண்டும். பாடகர் குழுவின் பாடல்கள் அனைவரும் இணைந்து பாட உதவி செய்கின்ற வகையில் எளிமையானதாக, இனிமையானதாக, நம்பிக்கையின் வெளிப்பாடாக, மக்களை இணைப்பதாக அமைய வேண்டும். இசை நிபுணர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துகின்ற இடமல்ல ஆலயம். அதற்கு பல்வேறு அரங்குகள் உள்ளன. இசைப்பணி என்பது வழிபாட்டின் மற்றப் பணிகளைப் போன்று புனிதமான பணி. அந்தப் பணியை நிறைவேற்ற இசைப்புலமை மட்டும் போதாது. இசையை வழிபாடாக மாற்றுகின்ற இறையியல் பயிற்சியும், இசையை ஆன்மிகமாக மாற்றுகின்ற உளப்பாங்கும்

### இறைவார்த்தையின் முழக்கம்

இசை என்பது இறைவார்த்தையை அறிவிக்கின்ற மற்றொரு வடிவம். வருகைப் பாடல் என்பது நம் நடுவே இறை பிரசன்னம் இருக்கிறது என்பதை அறிவித்து, நம்மை எழுச்சியோடு இணையச் செய்வது. தியானப் பாடல் என்பது இறைவார்த்தைக்கு நாம் தருகின்ற பதிலுரை. ஆர்ப்பரிப்புக்களும், புகழ்ச்சிப் பாடல்களும், இறைவனின் அரும்பெரும் செயல்களை உள்ளன்போடு நினைத்துப் பார்த்து உணர்வுகளால் வெளிப்படுத்தும் தருணங்கள். இவ்வாறு ஒவ்வொரு இசை நேரத்திற்கும் ஒவ்வொரு தனிப்பட்ட நோக்கம் இருக்கின்றது. இந்த நோக்கத்தை நிறைவேற்ற இசைக் குழுக்கள் பயிற்சி பெறவேண்டும்.

திருவழிபாட்டுப் பாடல்கள் இயற்றுவதற்கும், மற்றப் பாடல்கள் இயற்றுவதற்கும் வேறுபாடுகள் ஏராளம் உண்டு. அருமையான பக்திப்பாடல், திருவழிபாட்டுப்பாடல் ஆகிவிட முடியாது. திருவழிபாட்டுப் பாடல்கள் சமூகச் சார்பு கொண்டதாக அமையவேண்டும். வழிபாட்டுச் சமூகத்தின் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும். இசை எளிதாக அனைவரும் இணைந்து பாடும் விதத்தில் அமைய வேண்டும்.

இன்று 'கேசட்' போடுவதற்காக பாடல் எழுதிவிட்டு அதைத் திருவழிபாட்டில் வலிந்து திணிப்பதைப் பார்க்கிறோம். சினிமாப் பாடல்களைப் போன்று வாரம் ஒரு புதுப்பாடல் வந்து பழையதை மறக்கச் செய்கின்றது. 'திரு இசை' என்பது காலங்காலமாக மக்கள் மனதில் நிலைத்து நிற்கவேண்டிய ஒன்று. மக்களுடைய வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் எதிரொலிக்க வேண்டிய ஒன்று. 'மாதாவே சரணம்', 'யாரிடம் செல்வோம் இறைவா', 'உன் சிறகுகள் நிழலில்' போன்ற பாடல்களை மக்கள் தங்கள் உயிரோடு கலந்துவிட்ட பாடல்களாகக் கருதுகின்றார்கள். எனவே திருவழிபாட்டில் அனைவர் மனதிலும் நிற்கக்கூடிய பாடல்கள் இடம்பெற வேண்டும்.

நாட்டுபுற இசையைப் பயன்படுத்துகின்ற நேரத்தில் அதற்கான இசைக்கருவிகளையும் பயன்படுத்த உரிமை கிடைத்திருக்கிறது. தலித் மக்களின் அன்றாட வாழ்விசையைக்கூட வழிபாடுகளில் பயன்படுத்த ஆக்கபூர்வமான முயற்சிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய சூழலில் 'வழிபாட்டு இசை' பற்றிய விதிமுறைகளை நாமே நமக்கு வகுத்துக்கொள்ள வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன் செய்ததுபோல தமிழக ஆயர் பேரவை இசைப்பாடல்களின் தொகுப்பைத் தயாரித்து இவற்றைத்தான் பாடவேண்டும் என்று கட்டுப்படுத்துவது இன்று பொருந்தாது. ஏனெனில் பங்குத்திருச்சபைகளில் பல்வேறு திரு இசைக்கலைஞர்களை உருவாகிக் கொண்டிருக்கின்றார்கள். இசை சரியானதா? மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்திப் பங்கேற்புக்கு அழைத்துச் செல்கிறதா? என்பதை பங்கில் உள்ள இசைக்குழுக்கள் முடிவு செய்ய வேண்டும்.

### இசைத் திருப்பணி



சில பங்குகளில் இசைக்குழுத் தலைவர் பீடத்தின் ஒரு பகுதியில் வந்து நின்று அனைவரும் சேர்ந்து பாட வழிநடத்து - கிறார்கள். இது ஒரு சிறந்த முறை. சில பங்குகளில் ஞாயிறு திருப்பலிக்கு முன் ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் அன்றைய வழிபாட்டுப் பாடல்கள் பற்றிய பயிற்சி அனைத்து மக்களுக்கும் தரப்படுகின்றது. இதுவும் சிறந்த முன்னுதாரணம். திருப்பலியில் என்ன பாடலைப் பாடப்போகிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள அனைத்து இறைமக்களுக்கும் உரிமை உண்டு. எனவே பாடல்களை அச்சிட்ட அட்டைகள் வழியாகவோ, அறிவிப்புப் பலகைகள் வழியாகவோ மக்களுக்குத் தெரிவிப்பது சிறந்தது. பாடல் புத்தகங்கள் அனைவரும் கொண்டுவந்து பயன்படுத்த ஆவண செய்யவேண்டியது வழிபாட்டுக் குழுக்களின் பொறுப்பு. திருப்பலியை பாடல் திருப்பலி, சாதாரண திருப்பலி என்று பிரித்து வைத்திருக்கின்றோம். இந்தப் பிரிவுகள் இனியும் தேவையில்லாததுதான்.

எல்லாத் திருப்பலிகளும் கொண்டாட்டங்களே. வரலாற்றில் ஏற்பட்ட இத்தகைய பிரிவுகள் நீக்கப்பட வேண்டும். அதற்கு முன் முயற்சியாக சாதாரண திருப்பலியில் சில பாடல்கள் கண்டிப்பாகப் பாடப்படவேண்டும். எடுத்துக்காட்டாக 'அல்லேலூயா' என்ற எழுச்சிக்கீதம் எப்போதும் பாடப்படுவதுதான் முறை. பதிலுரைப் பாடலாக வரும் நேரங்களில் குருக்கள் பாடுவது ஒன்றும் தவறாகிவிடாது. 'திரு இசை' நமது பண்பாட்டில் நற்செய்தி இணையும்போது பிறக்கின்ற ஒரு கலை வடிவம் என்றாலும் அது திருவழிபாட்டில் அனைவராலும் ஒரு மனதாய்ப் பாடப்படும்போதுதான் முழுமையாகிறது. இணைந்து பாடுதல் என்பது வழிபாட்டுச் செயல் மட்டுமல்ல நம்பிக்கையைப் பறைசாற்றி நம்பிக்கையில் வளரும் தெய்வீக ஊற்று.

நம்மில் பலர் ஆலயங்களில் நல்ல பாடல்களைக் கேட்பவர்களாக மட்டும் இருக்கிறோம். சேர்ந்து பாட சிறந்த குரல் வளம் தேவையில்லை, பங்கேற்கிற மனநிலை இருந்தாலே போதும். வருகைப் பாடலோ, காணிக்கைப் பாடலோ அல்லது திருவிருந்துப் பாடலோ பவனியாகச் செல்லுதல் என்ற செயலோடு இணைந்து வருவது பாடலாக இருக்கும்போது வழிபாடு சுவையுள்ளதாக மாறுகிறது. ஆர்ப்பரிப்புக்கள், புகழ்பாக்கள், இரக்கத்தை மன்றாடும் பாடல்கள் போன்றவை ஈடுபடுவோருக்குத்தான் நவரசக் கலையாக, நலம் பயக்கும். அதன் பல்வேறு உணர்வுகளோடு ஒன்றுபடுகின்ற நேரத்தில்தான் ஒருவன் தன்னை மறந்து தெய்வத்தோடு ஒன்றிக்கிறார். 'திரு இசை' என்பது பங்கேற்கும் அனைவரின் ஒருமித்த குரலாகும். அனைவரும் ஈடுபாடோடு பாடுகின்ற நேரத்தில் இனிமையான வழிபாட்டு உணர்வு இதயத்திற்கு உயிரளிக்கும்.

### அமர்வதும் எழுவதும்!

கிறிஸ்தவ ஆலயங்களைச் சந்திக்கவரும் பிறமதத்தவர். நாம் அடிக்கடி அமர்ந்து எழுவதை வேடிக்கையாகவும், வினோதமாகவும் பார்க்கின்றார்கள். ஏன் நம்மில் பலருக்கு அடிக்கடி எழுந்து அமர்வது, கையை விரித்துச் செபிப்பது, கைகளைக் காட்டுவது போன்ற செயல்கள் முகச்சுளிப்பை ஏற்படுத்துகின்றன. அமைதியாக ஓர் இடத்தில் அமர்ந்து செபிக்க ஏன் நம்மை அனுமதிப்பதில்லை? என்று அலுத்துக்கொள்கின்றோம். நமது திருவழிபாடு ஓர் இயக்கம். உறவுப் பரிமாற்றம். இறைவனோடும் பிற நம்பிக்கையாளர்களோடும் உறவை வளர்த்துக்கொள்ளும் அற்புதமான கலைக்கூடம். இதில் நம் உடல் அசைவுகள், செய்கைகள், அமரும் விதங்கள் போன்ற உடல் இயக்கங்கள் அத்தனையும் அடையாளங்களாக மாறுகின்றன. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். நம்பிக்கையின் ஆழம் நம்முடைய உடலசைவுகளில் தெரிகிறது.

### உறவுக் கலைகள்

இந்த அங்க அசைவுகள் இரு வகையான உறவுக் கலைகள். ஒன்று இறைவனோடு கொள்ளும் உறவு. மற்றொன்று வழிபாட்டுச் சமுதாயத்தோடு கொள்ளும் உறவு. இறைவன் திருமுன் தனது ஒன்றுமில்லாமையை உணர்பவன்தான் உண்மையான பக்தன். நமது இந்தச் சகோதரர்கள் ஆலயங்களில் செய்கிற பல்வேறு செய்கைகளைச் சற்று உற்று நோக்கினால் இந்த உண்மை புரியும். இறைவன் திருமுன் தாழ்பணிந்து வணங்குதல், ஐம்புலன்கள் தரையில் பதிய பஞ்சாங்க பிரமாணம் செய்தல், மாபெரும் சக்தியின் முன் புலனடக்கத்தோடு நிற்றல், அமர்தல், அர்ச்சனை செய்தல் ஆகியவை இயல்பாகவே அவர்களுக்குக் கைவந்த கலை. இதற்காக யாரும் வெட்கப்படுவதில்லை. இதே பண்பாட்டில் வந்த நமக்கு மட்டும் இத்தகைய செய்கைகளில் விளங்கும் ஆன்மீகம் தெரியாமல்போனது வியப்பளிக்கிறது.

நமது வழிபாடு இறைவனோடு கொள்ளும் உறவு மட்டுமல்ல, பிற மனிதர்களோடு கொள்ளும் நம்பிக்கை உறவு. இறைவனால் ஒன்றுசேர்க்கப்பட்டவர்களின் பொதுவான அடையாளச் செயல்களே வழிபாட்டுச் செய்கைகள். பிற சமயங்களில் பிற மனிதர்கள் முன்னிலையில்தான் இறைவழிபாடு செய்கிறார்கள். கிறிஸ்தவத்தில் நாம் பிறரோடு இணைந்து வழிபாடு செய்கின்றோம். பிறருக்கு நம்முடைய நம்பிக்கையை வெளிப்படுத்துகிறோம். பிறரின்முன் நம்பிக்கை அறிக்கை செய்கின்றோம். பிறரின் நம்பிக்கை பெருமூச்சுக்களிலிருந்து நம்பிக்கை செய்கைகளிலிருந்து கற்றுக்கொள்கின்றோம். அடுத்தவர் அருகில் இருப்பதே நமக்கு ஆழமான நம்பிக்கை உணர்வைத் தருகிறது. ஒன்றுபட்டு வழிபடும் நேரங்கள் இறை பிரசன்னத்தின் உன்னதமான நேரங்கள். வழிபாட்டில் உடல் அடையாளங்கள் பிரிக்க முடியாத இருமுகப் பண்பினைக் கொண்டவை. "இறைவனைத்தானே வழிபட வந்தேன். யார் பக்கத்தில் இருந்தாலும் எனக்கு கவலையில்லை" என்று ஒருபோதும் நாம் சொல்ல முடியாது. நமது இறைவன் சமுதாயத்ததோடு உடன்படிக்கை செய்துகொண்ட இறைவன் உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவே வாழுகின்ற இறைவன்.


### நிற்றல், அமர்தல், முழந்தாளிடுதல்



வழிபாட்டில் நமது உடல் அசைவுகளின் அடையாளங்களை மூன்று முக்கிய வகைகளில் பிரிக்கலாம். வருகைப் பவனியின் போது எழுந்து நிற்கிறோம். அனைவரும் இணைந்து நிற்கின்றோம். அனைவரும் இணைந்து இறை திருமுன் செல்கிறோம் என்பதன் அடையாளமாக இந்தச் செயல் அமைகிறது. இஸ்ரயேல் மக்களின் பாஸ்காப் பயணத்தைப்போல் இந்தப் பயணத்திலும் ஒரு வரவு உண்டு, விடுதலை வேட்கை உண்டு. பாடுகின்ற வருகைப்பாடல் இந்த வேட்கையை ஆழப்படுத்த வேண்டும். செல்கின்ற பவனி இந்தப் பயணத்தின் அடையாளமாக அமைய வேண்டும். தலைமையேற்று திருவழிபாட்டை நிகழ்த்துகின்ற அருட்பணியாளரை வரவேற்கும் செயலாகவும் அது அமைகின்றது. ஆராத்தி எடுத்து அவரை வரவேற்கும் வழக்கம் சிறப்புடையதுதான். பெரியவரும், இயேசுவைப் பிரசன்னப்படுத்துபவர்களுக்கு மக்கள் ஆரத்தி எடுத்து வரவேற்பது சிறந்தது. குரு ஆலய பீடத்திற்குச் சென்று மக்களை வரவேற்கச் சொல்வது பண்பாட்டு ரீதியாக அவ்வளவு பொருத்தமானது அல்ல. யாராவது ஒரு பணியாள் குருவையும், இறைமக்களையும் சேர்த்து வரவேற்கும் வணக்கமாக ஆராத்தி எடுப்பதும் இன்னும் பொருத்தமானதாக இருக்கும்.

திருப்பலியின் தொடக்க நிகழ்ச்சிகளில், சபை மன்றாட்டு நேரங்களில் அனைவரும் நிற்பது நாம் ஒருவருக்கொருவர் காட்டும் மரியாதையையும், மாண்பையும் காட்டுகிறது. சில முக்கிய நிகழ்வுகளில் முன்னுரை நீண்டதாகச் சொல்ல வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அப்போது அனைவரும் அமர்வது நல்லது. கண்டிப்பாக கால் கடுக்க நிற்பது தேவையில்லாதது. நற்செய்தி வாசிக்க மட்டும் ஏன் எழுந்து நிற்க வேண்டும் என்பது பலரின் கேள்வி. மீட்பின் முன் அறிவிப்பையும், மீட்பின் பலனையும் முதல் இரண்டு வாசகங்களில் கேட்ட நாம் நற்செய்தியில் இயேசுவைச் சிறப்பாகச் சந்திக்கிறோம். இயேசு பேசுவது போன்ற உள்ளுணர்வை நற்செய்தி தருகிறது. எனவே 'அல்லேலூயா' என்று ஆர்ப்பரித்துக் கொண்டாடுகின்றோம். எழுந்து நின்று நமது மரியாதையைச் செலுத்துகிறோம். விசுவாச அறிக்கை, விசுவாசிகள் மன்றாட்டு போன்றவை இறைமக்களிடையே நாம் செய்யும் நம்பிக்கைப் பகிர்வுகள். எனவே அவற்றிற்கு எழுந்து நிற்க நம்மை திருச்சபை அழைக்கிறது.

### பங்கேற்கும் பாணியில்



வழிபாட்டின் உச்சக்கட்டம் நற்கருணை மன்றாட்டு. அது ஒரு செபம் என்ற காரணத்தால் தொடக்க உரையிலிருந்து இறுதிப் புகழுரை வரையாக நாம் நின்றுகொண்டே நிகழ்த்த வேண்டும் என்று திருச்சபை விரும்புகின்றது. நாம் முழந்தாளிடும் பழக்கத்தை வைத்திருக்கிறோம். முழந்தாளிட வேண்டுமா? அல்லது நிற்க வேண்டுமா? என்ற தேர்வை பங்குத்திருச்சபை செய்யலாம். ஆனால் பாதிப்பேர் முழந்தாளிடுவதும், மீதிப்பேர் நிற்பதும் நல்லதல்ல. அனைவரும் ஒரே மாதிரியான முறையைப் பயன்படுத்த வேண்டும்.

சில இடங்களில் கூட்ட நெரிசல் காரணமாக அமரச் சொல்கிறார்கள். நற்கருணை மன்றாட்டு முழுவதற்குமாக ஒரே முறையைப் பின்பற்றுவதே நல்லது. இயேசுவின் செபம், சமாதான வழிபாடு போன்றவை நம்மைத் திருவிருந்துக்குத் தயாரிக்கும் பகுதிகள். உண்மையான தயாரிப்பு நமக்குள்ளே உள்ள நல்ல உறவுகள்தான். எனவே உறவுப் பரிமாற்ற நேரங்களில் எழுந்து நின்று சமாதானம் செய்துகொள்வது, மன்னிப்பு வேண்டுவது, கரங்களை இணைத்து ஒன்றிப்பைக் காட்டுவது சிறந்தது. நற்கருணை வழிபாட்டின் இறுதியில் அனைவரும் எழுந்து நிற்க அழைக்கப்படுகின்றோம். நற்கருணைக் கொண்டாட்டத்தையும் வாழ்வையும் தொடர்புபடுத்தும் பகுதி இறுதிப் பகுதி. 'சென்று வாருங்கள்' என்று நாம் அனுப்பப்படுகிறோம். கொண்டாடி மகிழ்ந்த நம்பிக்கையை வாழ்வாக்க புறப்பட்டுவிட்ட உறுதிப்பாட்டை அந்தப் பகுதி காட்டுகின்றது. எனவே திருப்பலியின் இந்த இறுதிப் பகுதி புறப்படும் நேரம் என்ற நிலையில் அனைவரும் எழுந்து நிற்பது அவசியத் தேவையாகிறது.

*(வழிபாடு தொடரும்...)*

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

விறு விறுப்புத் தொடர் 43

சொல்லின் செல்வர் அமுது

## நீரால் நிரம்பின நேருவின் கண்கள்

### உலகம் போற்றிய அன்னை திரேசாவை பாரதநாடு பாராட்டியுள்ளதா?

ஆம்! நோபல் பரிசு பெறுவதற்கு 17 ஆண்டுகளுக்கு முன்பே அன்னை அவர்களை இந்திய அரசு கௌரவித்துள்ளது.

1962ஆம் ஆண்டு தைத்திங்கள் 26இல் இந்திய குடியரசின் தேசிய விழாவில் அன்னை திரேசாவுக்கு பத்மஸ்ரீ என்ற தாமரை வடிவத்திலமைந்த மதிப்பு வாய்ந்த விருதினை அளிக்கும் செய்தி வெளியானது. ஆனால் அந்தப் பரிசை ஏற்றுக்கொள்ள அன்னை தயங்கினார். கல்கத்தா பேராயர் பெரியர் அவர்கள் வற்புறுத்தி ஏழைகள் சார்பில் அதைப் பெற்றுக்கொள்ளுமாறு செய்தார்.

அக்காலத்தில் இந்தியப் பிரதமராய் இருந்தவர் உலகம் போற்றும் ஜவகர்லால் நேரு அவர்கள். ஜனாதிபதியின் இராஷ்டிரபதி பவானில் நடந்தேறிய பரிசளிப்பு விழாவில் பிரதமரும் அவரின் சகோதரி விஜயலஷ்மி பண்டிட் என்பவரும் சமூகமளித்திருந்தனர். திருமதி பண்டிட் இலண்டன் மாநகரில் இந்தியத் தூதுவராக விளங்கினார். அந்த நிகழ்ச்சி விஜயலஷ்மி அவர்கள் நெஞ்சில் அழியாத இடம்பெற்றுள்ளது.

"சேலை அணிந்த ஒரு பெண்துறவி, அமைச்சலே உருவமாய் அமைந்தவர், விருதைப் பெற்றுக்கொள்ளுமாறு மேடைக்குச் சென்றார். அந்தச் சின்னத்தை ஒரு நோயாளியான குழந்தையை அல்லது சாகும் மனிதன் ஒருவனைக் கைகளில் தூக்குவது போல எடுத்து வந்தார். அதைக் கண்ட மண்டபம் நெகிழ்ந்தது.

ஜனாதிபதியின் கண்களிலேயே நீர்த்துளிகள் உருண்டன. வீட்டுக்குத் திரும்பிச் செல்லும்போது நான் என் சகோதரர் நேருவிடம், "உமக்கு அந்த நிகழ்ச்சி எப்படியிருந்தது?" என்று கேட்டேன். அதற்கு அவர், "உமக்கு எப்படியிருந்ததோ எனக்குத் தெரியாது. ஆனால் என் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் நான் சிரமப்பட்டேன்" என்றார் அவர்" என்று எழுதியுள்ளார்.

கல்கத்தாவுக்குத் திரும்பி வந்ததும் கள்ளிக் கோட்டையிலுள்ள மாசற்ற நெஞ்சின் மன்றத்தில் கண்ணாடிக் கூட்டுக்குள் தோன்றும் கன்னிமரியாளின் சிலைக்கு அந்தப் பெறுமதியான விருதை அளித்தார். அந்தப் பரிசுக்குத் தான் தகுதியானவர் என்பதை ஒரு பொழுதுதானும் அவர் நம்பியதில்லை. இதுவும் இதைப்போன்ற இன்னும் பல பரிசுச் சின்னங்களும் அந்தக் கண்ணாடிக் கூண்டைப் பார்த்தால் காணலாம். "அந்த மாசற்ற மரியன்னைக்கே இந்த மகிமை விருதுகள் உரியன" என்றார் அன்னை.

நோபல் பரிசு பெற்றுக்கொண்ட பின்னர் கல்கத்தாவில் வெளியில் வராமல் ஒரு மாச காலம் ஞான வாழ்வில் ஈடுபட்டிருந்தார். திரும்பவும் தன் பணிகளில் கருத்தூன்றியபோது இன்னொரு செய்தி அலை அடித்தது. அன்னை திரேசாவுக்கு பாரத அரசு பாரத இரத்தினம் (The Jewel of India) என்ற இந்தியாவின் மதிப்பு வாய்ந்த கௌரவத்தை அறிவித்துக் கௌரவித்தது.

இதுவே இந்திய நாட்டில் மிகச் சிறந்த சேவை ஆற்றியவர்களுக்கு அளிக்கப்படும் உன்னதமான மகிமை விருது. ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் இந்திய ஜனாதிபதி சஞ்சீவரெட்டி – "அன்பையும் கருணையையும் ஆபரணங்களாய் அணிந்து மனித சேவைக்குத் தங்களை அர்ப்பணம் செய்தவர்கள் மிகச் சிலரே! என வரலாறு கூறுகிறது" எனப் புகழாரம் சூட்டினார். இந்திய வரலாற்றில் முதன்முதலாக ஒரு பிறநாட்டுத் துறவியின் படத்துடன் கோடிக் கணக்கான முத்திரைகள் வெளியாயின. அந்த நிகழ்ச்சி இந்திய வானொலி – தொலைக்காட்சி என்பவற்றில் இடம்பெற்றதால் கோடிக் கணக்கான மக்கள் அன்னை திரேசா என்ற பெயரை அறியவும் அதைத் தித்திக்கும் தேனாக உச்சரிக்கவும் தொடங்கினார்கள்.



இந்தியாவே - இந்திரா; இந்திராவே - இந்தியா என்ற இந்திய அரசியல் வாழ்வில் தடம் பதித்தவர் இந்திரா காந்தி அம்மையார். இந்திரா காந்தியுடன் அன்னைக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. அன்னை இந்திராவுக்கு எழுதினால் அதற்கு விடை உடனே பறந்து வரும். "பணிவும் அடக்கமும் அனுபவ முதிர்ச்சியும் உடையவர். மென்மையான கனிந்த இதயத்தின் ஆற்றலையும், அன்பின் வலிமையையும் அவரால் நாம் உணர்ந்துகொள்கிறோம்" என்றார் இந்திரா. இந்திராவைப் பற்றிக் கேட்டால் "அவர் எனது அன்பான தோழி" என்று மாத்திரம் அன்னை குறிப்பிடுவார்.

இந்திரா மறைந்த வேளை டெல்கிக்குச் சென்று மிருகத்தனமாய் தாக்கப்பட்டு அகதிகளாய் அந்தரித்த சீக்கியர்களுக்கு ஆதரவளித்தார். பிரதமர் இந்திராகாந்தியுடன் அவரின் பிரிய மகனார் ராஜீவ் காந்தியும் அன்னை திரேசாவில் உயர்ந்த மதிப்பும் அன்பும் கொண்டவர்களென்பது நாடறிந்த உண்மை. பாராட்டுக்கள், புகழ்மாலைகள், பத்திரிகைகளின் கொடியேற்றங்கள், வானொலிப் பேச்சுகள், தொலைக்காட்சி ஆராதனைகள் எதனையும் அன்னை திரேசா ஆசித்ததில்லை.

தன்னைப்பற்றி வெளிவந்த நூல்களையே அவர் தொட்டுப் பார்த்ததில்லை. "ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்" என்ற தராசையே ஏந்தியவர். தனக்குக் கிடைக்கும் கண்ணியம் மிகுந்த விலையேறப் பெற்ற பரிசில்களையே விற்று ஏழைகளுக்கு உதவி புரியும் ஞானச் சித்தர். இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அவர்களின் அழைப்பின் பேரில் அவரிடமிருந்து பாராட்டுப் பரிசிலைப் பெறச் சென்றபோது அந்த மாமண்டபத்தைச் சுற்றிப் பார்த்ததும் "இந்த விளம்பரங்களும், பிரகாசம் நிறைந்த வெளிச்சங்களும் என்னை மிகவும் துன்புறுத்துகின்றன. நோபல் பரிசை பெற்றுக்கொண்டதுபோல் ஏழைகளின் மதிப்புக்காகவே நான் இங்கே கால் வைத்தேன்" என்று பக்கத்திலே இருந்த அன்பர் ஒருவரிடம் கூறினாராம்.

வரிசையான பேச்சுக்களிடையே, கல்கத்தாவுக்குப் போகும் விமானத்தைப் பிடிக்கவேண்டியிருப்பதால் தன்னை மன்னிக்குமாறு கேட்டுக்கொண்டு புறப்பட்டார். விமானத் தளத்துக்குப் போகும் வழியில் தனக்கு அளிக்கப்பெற்ற விலை உயர்ந்த இலச்சினையை எடுத்து வரவில்லையே என்று அவர் உணர்ந்துகொண்டார். "அதை எடுத்து அனுப்பி வையும்" என்று பக்கத்தில் வந்தவரிடம் பணிவாய் கேட்டுக்கொண்டார். "அதை என்ன செய்ய உத்தேசம்?" என்றார் அருகில் இருந்தவர். "அதை யாருக்காவது விற்றுவிடலாம். பத்தாயிரம் ரூபாயாவது கிடைக்கும். அந்தப் பணத்தைக் கொண்டு தீத்தக்காரிலுள்ள தொழுநோயாளருக்கு மருந்துகள் பெற்றுக் கொள்ளலாம்" என்றார். அந்தத் தொழுநோயாளர் நிலையத்துக்கு காந்திஜி பிரேம் நிவாஸ் என்று பெயர் இட்டார்.

காந்தி அடிகளில் அன்னை அவர்களுக்கு உயர்ந்த மதிப்புண்டு. தன்நலம் கருதாமை, ஏழைகளில் அன்பு, கருணை என்பன இருவருக்கும் பொதுச் சொத்துக்கள். காந்தி நூல் நூற்று ஆடையை அணிந்தார். அன்னை ஏழைகளின் துணியை அணிந்துகொண்டார். இருவரும் வறுமையை ஏற்றுக்கொண்டனர். இந்தியாவில் பாரம்பரியமாகப் போற்றப்பெறுவதும், அந்நாட்டின் பண்பாடு, உயர் தகைமைகள் என்பவற்றைப் பேணி வருவதுமான *பாரத* *வித்தியாபவன்* என்னும் நிறுவனம் அன்னை அவர்களை அழைத்து உயரிய விருதை வழங்கியது.

அதன் தலைவர் - "இறைவனின் தூண்டுதலினால் அமைதியான சிலுவை வீரனாக அன்புப் பணிகளைக் கருணையுடன் செய்து வருகிறீர்கள். இலட்சக்கணக்கான துன்பப்படும் மக்களைத் தேற்றியிருக்கிறீர்கள். காந்தியடிகள் கூறுவதுபோல தரித்திர நாராயணர்களான பேரில்லாதவர்கள், குரலில்லாதவர்கள், வீடில்லாதவர்கள், கைவிடப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், ஒன்றுமில்லாதவர்கள் என்போரைப் பேதமின்றிப் பாதுகாத்து வந்தீர்கள்" என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றியபின் முடிவுரையில் - "அன்னை திரேசா மிக அருமையாகச் சிந்திக்கும் ஆன்மீக சக்தி வாய்ந்தவர்களைப்போல சாதி – சமயம், இனம், நாடு என்ற எல்லைகளைத் தாண்டியவர். இவர் ஒரு அரச முடியை, உயர்ந்த மதிப்பை, பேரின்பப்பேற்றை ஆர்வத்தோடு விரும்பவில்லை. மகாத்மா காந்தியைப்போல் பிறர் துன்பத்தைத் துடைப்பதில் இறைவனின் இன்னிசைப்பாணராக தன்னை முற்றும் தத்தம் செய்தவராய் இருக்கிறார்" என்றார். இந்த வசனங்கள் நடுநிலையில் நின்று பணிகளை அளக்கும் நல்லறிஞரான பெருமகனாரின் பொன்பூக்களாகும்.

(கங்கை தொடர்ந்து பாயும்...)

## உங்களுக்குத் தெரியுமா?

### மறையறிவுப் பகுதி இல.51

மறையறிவுப் போட்டி அரைச்சதத்தை நிறைவு செய்த வேளையிலே இப்போட்டியின் வினாக்கள் மன்னா தாங்கி வந்த செய்திகள் கருத்துக்களிலிருந்து பிறிதொரு திசையிலே தனது பயணத்தை ஆரம்பிக்கின்றது.

இம்மாதப் போட்டிக்கான வினாக்கள் திருத்தூதர் பணியின் முன்னுரையிலும், முதல் அத்தியாயத்திலிருந்தும் தொகுக்கப்பட்டுள்ளன. ஆக; நீங்கள் விடை காணப் புரட்டவேண்டியவை மன்னாவின் பக்கங்கள் அல்ல திருத்தூதர் பணியின் பக்கங்களைத்தான். வினாக்களுக்கு வருவோமா?

1. திருத்தூதர் பணியின் நூலாசிரியர் யார்?
2. இது இவரின் கிறிஸ்துவைப் பற்றிய எத்தனையாவது நூல்?
3. திருத்தூதர் பணி என்னும் நூலை வேறு எவ்வாறு அழைக்கலாம்?
4. இந்நூல் எழுதப்பட்ட இரு நோக்கங்கள் எவை?
5. இது யாருக்கு எழுதப்பட்டிருக்கின்றது?
6. சீடர்கள் எதனால் திருமுழுக்குப் பெறுவார்கள் எனக் கிறிஸ்து கூறினார்?
7. ஒலிவ மலை ஜெருசலேமிலிருந்து எவ்வளவு தொலைவிலிருந்தது?
8. "அக்கலிதமா" என்பதன் பொருள் என்ன?
9. பர்பகா அல்லது யுஸ்து என்பவர் யார்?
10. "அவன் வீடு பாழாவதாக. அதில் எவரும் குடிபுகாதிருப்பாராக" என்ற திருப்பாடல் வரிகள் எதைக் குறித்து நிற்கின்றன?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 49 இற்கான கேள்விகளுக்கு 28 பேர் விடை அளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**

**செ. ஜெசில்டா, சி-08, மருக்கோவில், மரு**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும்**

### 10 அதிஸ்ரசாலிகள்

1. சி. றோமி, சாளம்பன், ஆண்டாங்குளம்.
2. செ. இன்வென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
3. அருட்சகோதரி. எம். பற்றீசியா, றம்பாவ, அனுராதபுரம்.
4. அருள்நாதன் வதனி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
5. சிறகுடைந்த இளம்சிட்டு, தோட்டவெளி, மன்னார்.
6. பி. நித்தியானந்தன் குரூஸ், 8ம் வட்டாரம், வங்காலை.
7. அ. யஸ்மின் சறோன், ஆவணம், நானாட்டான்.
8. அ. அசம்ரா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
9. என். மரியம்மா பீரிஸ், 8ம் வட்டாரம், வங்காலை.
10. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.

## யார் இந்த அனாதை?

**அருளானந்தம்**
**கியு,டெக், கரிற்றாஸ், யாழ்ப்பாணம்**

- பெற்றவர்களை இழந்து மற்றவர்களுடன் வாழும் பிள்ளை அனாதையே.
- பெற்றவர்களால் கைவிடப்பட்டு உற்றவர்களின் ஆதரவில் வாழும் பிள்ளையும் அனாதையே.
- திருமணமாகுமுன் தாய்மை எய்தி குடும்ப கௌரவத்தைக் காப்பாற்ற பிறந்த பிள்ளையை மருத்துவமனையிலே விட்டுச் செல்லும்போது அதுவும் அனாதையே.
- திருமணமாகி குழந்தையுடன் தாரமிழந்த ஒருவருக்கு வாழ்க்கைப்பட்ட பெண், தனக்கொரு குழந்தை கிடைத்ததும் மூத்த பிள்ளையைக் கவனியாது விடும்போது அதுவும் அனாதையே.
- மனநோயால் பாதிப்புற்ற பெற்றோரின் பிள்ளைகள் வேறு சிலரின் பராமரிப்பில் வாழும்போது அவர்களும் அனாதையே.
- வறுமையின் நிமித்தம் பிறர் வீட்டில் வேலைக்கமர்த்தப்பட்ட பிள்ளைகள் கைவிடப்பட்ட நிலையில் பராமரிப்பு இல்லங்களில் வாழும்போது அவர்களும் அனாதையே.
- உடலை விற்று ஊதியம் தேடும் உதிரிகட்குப் பிறக்கும் பிள்ளைகள் கைவிடப்பட்ட நிலையில் பராமரிப்பு இல்லங்களில் வாழும்போது அவர்களும் அனாதையே.
- விபச்சார விடுதிகளிலே அடிமைகளாக வாழ்ந்து பிறர் இச்சைகளுக்கு இசைந்து அவன் மூலம் பிறக்கும் பிள்ளைகளும் அனாதையே.
- சில முக்கிய அரசியல்கட்சி உறுப்பினர்களுக்கிடையே முரண்பட்ட கருத்துக்களினால் கட்சியால் ஓரங்கட்டப்பட்ட நிலையில் வாழும் ஒவ்வொருவரும் அரசியல் அனாதையே.
- இசைமேதை ஒருவர் குரல் வளம் குன்றி இசைபாட முடியாத நிலையில் இரசிகர்களால் ஒதுக்கப்பட்டு வாழ்பவரும் இசை உலகில் அனாதையே.
- நடிகர் ஒருவர் சினிமா , நாடகத் துறையில் மிகவும் பிரபல்யம் பெற்று காலப்போக்கில் தற்கால கலைஞர்களோடு ஈடுகொடுக்க முடியாமல் தயாரிப்பாளரால் கைவிடப்பட்டு ஒதுங்கி வாழும்போது அவரும் அனாதையே.
- மாணவர்களை உருவாக்கும் ஆசிரியர்கள் மாணவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் அவர்களை உதாசீனம் செய்து தன்னுடைய தனிப்பட்ட எண்ணக்கருத்துக்களை மட்டும் மாணவர்கள் மத்தியில் திணிக்க முயலும்போது அவர்களின் வெறுப்பையும் பெற்றோர்களின் அதிருப்தியையும் தேடித் தானாக ஒதுங்கும் நிலை ஏற்படும்போது அவரும் அனாதையே.
- வைத்தியர் ஒருவர் நோயாளிகளின் உடல்நிலை, வயது, நோயாளிகளின் பின்னனி போன்ற முக்கிய அம்சங்களைக் கருத்திற் கொள்ளாது மருத்துவம் செய்து நோயாளிக்கு பாதகமான சூழ்நிலை ஏற்படுமாயின் அது மக்களின் நம்பிக்கைத் தன்மையை இழக்கச் செய்து மக்களால் ஒதுக்கப்படும்போது அவரும் அனாதையே.
- வயிற்றில் குட்டியுடன் மரத்திற்கு மரம் தாவும் குரங்கினம், தவறி விழுந்த குட்டி தாயின் அரவணைப்பை இழந்து தனிமையில் வாழும்போது அதுவும் அனாதையே.
- வாழ்க்கையிலே சுயமுயற்சியால் முன்னேறி காலப்போக்கில் வறுமைக்குள்ளாக்கப்பட்டு பிள்ளைகளாலும் கைவிடப்பட்ட நிலையில் தனக்குள்ளே வெதும்பிக்கொண்டிருப்பவரும் அனாதையே.
- சாதாரண குடும்பத்திலே வாழ்ந்து, முன்னேறும் நோக்கில் கடன்பட்டு, ஒரு பிள்ளையை வெளிநாடு அனுப்பி அதன் மூலம் மற்ற இரு பிள்ளைகளையும் வெளிநாடு அனுப்பிவிட்டோம் என்று பெருமைகொள்ளும் பெற்றோர் முதுமையில் தங்களைப் பராமரிக்க யாருமில்லை என்று ஏங்கி உறவினர்களின் கடும் சொற்களுக்கு ஆளாகும்போது அவர்களும் அனாதையே.

## மரணம் கொடு



மனிதத் தன்மையில் இருந்து நீங்கி
கொலைவெறி பிடித்து அலையும் இரத்த பூமியில்
இறைவா நான் உன்னிடம்
ஒரேயொரு வரந்தான் கேட்கிறேன்.
எல்லோரையும் வாழவைக்கும் வாழ்வைக்கொடு.
இல்லையெனில் எதிரியையும்
அழவைக்கும் மரணம் கொடு.

*தே. ஜெர்மா, சாளம்பன்*

## குடும்பக் குவலயம்



# உன்னையே நீ அறிவாய்!

## அன்னையருக்கு சில சிந்தனைகள்...



குடும்பம்! இது சமுதாயத்தின் சிறிய அலகாக இருப்பினும் அதுவே சிறப்படைவதையும், பண்பாடுமிக்க நாடாக வளர்ச்சியடைவதையும் தீர்மானிப்பதாக அமைகின்றது. ஆரோக்கியமான, சிறப்பான குடும்பம் ஒன்றினாலேயே வளம்மிக்க பண்பாடுள்ள மனித வளத்தினை உருவாக்க முடியும். ஆரோக்கியமான குடும்பம் என்பது வெறுமனே பொருளாதாரத்தில் மட்டும் தங்கியிருக்கவில்லை. மாறாகக் குடும்ப அங்கத்தவர்கள் உடல், உள, ஆன்மீக, பண்பாட்டு விடயங்களில் ஆரோக்கியமானவர்களாக, நலமிக்கவர்களாக இருப்பதையுமே குறிக்கின்றது.

ஆரோக்கியமான குடும்ப இயக்கத்திற்கு பெற்றோரின் பங்களிப்பு அவசியமாக இருந்தபோதிலும் சிறப்பாக குடும்பத் தலைவி அல்லது தாயின் அர்ப்பணிப்பு மிக இன்றியமையாததாகும். ஆளுமை மிக்க எதிர்கால சந்ததியின் உருவாக்கத்திற்கு களம் அமைப்பதாக, குடும்பம் விளங்குவதனால் தமது பிள்ளைகளின் வளர்ச்சியில் தாய் பெருமளவு அக்கறை செலுத்துதல் அவசியமானதாகும். எனவே ஒரு தாய் தன்னை சுய ஆய்வு (Self – Evaluation) செய்வதன் மூலம் எவ்வாறு சிறப்பான குடும்ப இயக்கத்திற்கு வழி வகுக்கலாம் என்பது தொடர்பான கருத்துக்களை இக் கட்டுரை முன்வைக்கின்றது.

கிரேக்க தத்துவஞானி சோக்ரட்டீசின் 'உன்னையே நீ அறிவாய்' என்ற வார்த்தைகள் ஆழமான, உயிரோட்டமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான சிந்தனையை வழங்குவதாக அமைகின்றது. அந்த வகையில் ஒரு தாய் தன்னை சுய அலசல் அல்லது மதிப்பீடு செய்வதன் மூலம் குடும்ப வளர்ச்சியை ஏற்படுத்துவதில் தனது பொருத்தப்பாட்டினை உணர்ந்துகொள்ள முடியும். தனது உணர்ச்சியை, விருப்பு வெறுப்பை, கோபம் பாசத்தை, பலம் பலவீனத்தை, ஆற்றல் ஆற்றலின்மையை சுய அலசல் மூலம் சிந்தித்து தனது பலத்தைப் பேணி பலவீனத்தைத் திருத்தி பலமான மனிதருக்கு இணையாக அல்லது மேலோங்கி நிற்பதற்கான தெளிவுபெற்று அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் மூலம் சமுதாயப் பொருத்தப்பாடுமிக்க குடும்பத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

நான் யார்? நான் எப்படிப்பட்டவன்? எனக்குள்ள நல்ல குணங்கள் எவை? கெட்ட குணங்கள் எவை? எனது நல்ல பண்புகள் எவை, தீய பண்புகள் எவை? மற்றவர்களின் வளர்ச்சிக்கு துணையாக இருக்கின்றேனா? அல்லது தடையாக இருக்கின்றேனா? அல்லது பின்னடைவுக்குக் காரணமாகின்றேனா? போன்றவற்றை ஆய்வுசெய்து நான் எனது குடும்ப வளர்ச்சியில் பங்குகொள்கின்றேனா? என்பது தொடர்பாக மதிப்பீடு செய்வது குடும்பத் தலைவி என்ற வகையில் அவசியமானதாகும். குடும்ப விருத்திக்கு பின்வரும் விடயங்களில் என்னுடைய பங்கு என்ன? என்பதைச் சிந்திப்போம்.

### பொறுப்பு (Responsibility) வகித்தல்

பிள்ளைகளின் தேவைகளை இனங்காண்பதும் அவர்களின் தேவைகளைக் கூடியளவு நிறைவுசெய்வதும் ஆரோக்கியமான குடும்ப வளர்ச்சிக்கு அவசியமானதாகும். மாஸ்லோ, தோமஸ் போன்ற உளவியலறிஞர்கள் பிள்ளைகளின் உடல், உளத் தேவைகள் நிறைவுசெய்யப்படாவிட்டால் அவர்கள் மன முறிவுகளுக்கும், உடல் நோய்களுக்கும் ஆளாகலாம் எனக் கருதுகின்றனர். ஆதலால் பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல், அவர்களுக்கு அருகில் இருந்து கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு உதவுதல், கற்றலில் அவர்களுக்கான ஆர்வத்தைத் தூண்டுதல், அவர்களின் மறைந்திருக்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கு வழிவகுத்தல் போன்றவற்றில் பொறுப்புள்ள தாயாக செயற்படுவது அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு அவசியமானவையாகும். இச் செயற்பாடுகளில் எனது பங்கு என்ன?

### சுய கட்டுப்பாடு (Self – Control) பேணுதல்

புலனடக்கம் சிறப்பாகக் குடும்ப உறவை வளர்க்கும் எனலாம். குறிப்பாக, நாவடக்கம் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகுவதைத் தடை செய்யும். பாதகமான மனவெழுச்சிகளான கோபம், சினம், மூர்க்கக் குணங்களை அடக்கி பொறுமை சகிப்புத் தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை என்பவற்றைப் பேணுவது அமைதியான குடும்ப வாழ்வுக்கு வழிசமைக்கும். இவ்விடயத்தில் நான் எவ்வாறு நடந்துகொள்கின்றேன்?

### நண்பத்துவத்தை (Friendship) கட்டியெழுப்புதல்

தோழமையுணர்வு பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையில் ஒளிவுமறைவில்லாத கலந்துரையாடல்களுக்கு வழிவகுக்கும் என நம்பப்படுகின்றது. குறிப்பாக, பிள்ளைகள் தமக்கு ஏற்படும் பிரச்சினைகள், சவால்களைத் தாயிடமே தயக்கமில்லாமல் எடுத்துக்கூறுவர், கூறவிரும்புவர். தாய் தோழமையுணர்வுடன் பிள்ளைகளை அணுகும்போது பிள்ளைகளின் உள்ளக் கிடக்கைகள் தாயுடன் பகிரப்படும். அதன் மூலம் அவர்கள் மன ஆறுதலை அடைய முடியும். பிள்ளைகளுடன் உறவாடுவதில் நான் என்ன அணுகுமுறையைப் பின்பற்றுகின்றேன்?

### முன்மாதிரியாக / வழிகாட்டியாக வாழ்தல்

பிள்ளைகளின் மனப்பாங்கு வளர்ச்சிக்கு பெற்றோரின் முன்மாதிரிகை அல்லது வழிகாட்டுதல் அவசியமானதாகும். பெரும்பாலும் 'தாயைப்போல பிள்ளை' என்றுதான் சொல்வார்கள். ஒழுக்கம், கற்றல் செயற்பாடுகள் பார்த்துப் பின்பற்றக்கூடியன. பின்பற்றுதல், ஒன்றுதல் (Identification) குடும்ப வளர்ச்சிக்கு உதவுவதனால் பிள்ளைகள் பின்பற்றக்கூடிய நல்ல செயற்பாடுகளில் ஈடுபடுதல் அவசியமாகும். அந்த வகையில் நான் முன்மாதிரிகையாக அல்லது வழிகாட்டியாக வாழ்கின்றேனா?

### புரிந்துணர்வுடன் வாழ்தல்

குடும்ப அங்கத்தவர்களிடையே புரிந்துணர்வு கொள்ளுதல் ஆரோக்கியமான குடும்ப இயக்கத்திற்கு அவசியமானதாகும். ஒருவர் ஒருவரைப் புரிந்துகொண்டு வாழும்போது முரண்பாடுகளைத் (Conflict) தவிர்த்துக்கொள்ள முடியும். முரண்பாடுகளற்ற குடும்ப வாழ்க்கையில் மனநிறைவு ஏற்படுவதுடன் சமுதாயத்தில் ஒன்றி வாழ்வதற்கான துணிவும் ஏற்படும். ஆதலால் நான் புரிந்துணர்வுடன் வாழ முயற்சிக்கின்றேனா?


### பயனுள்ள உரையாடல்கள்

வெட்டிப் பேச்சு, வீண் பேச்சுக்கள் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கலாம். பிள்ளைகள், 'பெற்றோரின் நீண்ட உரையாடல்களினால் சலிப்படையக்கூடும். போதனை செய்யப்படுவதை, ஏதாவது சொல்லிக்கொண்டேயிருப்பதை, விமர்சிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள். பிள்ளைகளின் தேவை என்ன? அவர்கள் எதைக் கேட்க விரும்புகின்றார்கள்? எதை அறிய விரும்புகின்றார்கள்? என்பதைத் தீர்க்கமாக உணர்ந்துகொண்டு உரையாடுதல் சிறப்பானது. குடும்ப உரையாடல்கள் அங்கத்தவர்களின் மன அமைதிக்கு வழிவகுக்க வேண்டும். நாளாந்தம் சில நிமிடங்களாவது ஒன்றாக இருந்து உரையாட வேண்டும். அவ்வாறு கலந்துரையாடும்போது பிள்ளைகளின் மனப்பாங்கு விருத்தியடையும் வகையிலான விடயங்கள் பேசப்பட வேண்டும். நான் என்ன செய்கின்றேன்? கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகின்றேனா? பிள்ளைகளின் மன அமைதிக்கான கலந்துரையாடல்களில் ஈடுபடுகின்றேனா? என் பங்கு என்ன?

### தொடர்பாடலை ஏற்படுத்தல்

சில குடும்பங்களில் பெற்றோருக்கிடையில், பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில், பிள்ளைகள் - பிள்ளைகளுக்கிடையில் சுமூகமான தொடர்பாடல் இருப்பதில்லை. இது உள நெருக்கீடுகளை ஏற்படுத்துவனவாக அமையலாம். மகிழ்ச்சிகரமான குடும்ப இயக்கத்திற்கு இவை தடையாக அமையலாம். ஆதலால் குடும்ப அங்கத்தவர்களுக்கிடையிலான தொடர்பாடல் சிறப்பானதாக, சீரானதாக அமைதல் வேண்டும். இதனை உருவாக்குவதில் தாயின் பங்கு அதிகமானதாகும். தந்தை – பிள்ளைகளுக்கிடையில் விரிசலை ஏற்படுத்தாது உறவை ஏற்படுத்துவது தாயினாலேயே முடியும். எனவே குடும்பத்தவர்களிடையே தொடர்பாடலை ஏற்படுத்துவதற்கு நான் முயற்சி செய்கின்றேனா?

சிந்திப்போம்! செயற்படுவோம்!



# மருத்துவப் பொழிவு



## மனஅழுத்தத்தைத் தடுக்க சில வழிகள்

- நம்மைப் பாதிக்கும் விஷயங்களைப்பற்றி கவலைப்படக்கூடாது.
- எதிர்பார்ப்பு, ஏமாற்றமாக மாறும்போது தாங்கிக்கொள்ள வேண்டும்.
- "நமக்குக் கிடைக்கவில்லையே" என்று பொறாமைப் படக்கூடாது.
- "நமக்குக் கிடைத்தது அவ்வளவுதான்" என்று நோகக்கூடாது.
- நம் தலையெழுத்து என்று புலம்பக்கூடாது.
- "அதுவரும் இதுவரும்" என்று கற்பனை செய்வதும்கூடாது.
- இப்படி மனதில் அதிக எதிர்பார்ப்பு, அதிக கோபம், அதிக அதிருப்தி, அதிக விரக்தி எதுவும் கூடாது. எப்போதும் இன்பமும், துன்பமும் அளவாகவே சமமாக இருந்தாலே போதும், பல வியாதிகளையும் விரட்டிவிடலாம். நாமும் இனி எதற்கும் அலுத்துக்கொள்ளாமல் இருக்க முயற்சி பண்ணுவோமா? இதற்கு ஒரே வழி தியானம் செய்தலாகும்.

## பழங்களும் பயன்களும்



**மாம்பழம்** : அஜீரணம், மலச்சிக்கலை போக்கும். இரத்தத்திலுள்ள நச்சுக் கிருமிகளை அழிக்கும். கண் பார்வையைத் தெளிவுபடுத்தும்.

**விளாம்பழம்** : பித்த சம்பந்தமான கோளாறுகள், குடற்புண், காமாலை என்பவற்றிற்கு நிவாரணமளிக்கும்.


**எலுமிச்சை** : தாகத்தைத் தணிக்கும், பித்தத்தை அகற்றும், மயக்கம், வாந்தி, குமட்டல் என்பவற்றைப் போக்கும்.

**அன்னாசிப்பழம்** : வாந்தி, தொண்டைப்புண் என்பன குணமாகும். சிறுநீரை ஒழுங்குபடுத்தும், இதயத்துடிப்பை சீராகப் பேணும், வயிற்றுப் பூச்சிகளை கொல்லும், பித்தத்தை கண்டிக்கும்.

**அத்திப்பழம்** : தலைமுடி வளர்ச்சிக்கும், வாய்நாற்றத்தை போக்கவும், செரிமானத்துக்கும் ஏற்றது. பித்தத்தைக் குணமாக்கும்.

## அருமருந்தாகும் கறிவேப்பிலை

- தேவையற்ற கொழுப்பால் தொந்தரவு அனுபவிக்கின்றவர்கள் சிறிதளவு கறிவேப்பிலை எடுத்து அரைத்து சுடு நீரில் கலக்கிப் பருகினால் கொழுப்புத்தன்மை குறைந்துகொண்டு போகும்.
- கறிவேப்பிலை வேகவைத்த நீரைக் குடிப்பது வயிறு தொடர்பான நோய்களுக்கு மிகவும் நல்லது.
- பாதங்களில் வெடிப்பு ஏற்பட்டால் கறிவேப்பிலையுடன் மஞ்சள் சேர்த்து அரைத்து பூசுங்கள்.
- முடி நன்றாக வளரவும், முடிக்கு நல்ல கறுப்பு நிறம் கிடைக்கவும் எண்ணெயில் கறிவேப்பிலை சேர்த்துக் காய்ச்சி தலையில் தேயுங்கள்.
- கறிவேப்பிலையை எலுமிச்சம் சாறில் அரைத்து தலையில் தேய்த்து அரைமணி நேரம் கழித்துக் குளித்தால் தலையில் இருக்கும் பேன், பொடுகு போன்றவை நீங்கும்.
- கறிவேப்பிலையுடன் சிறிதளவு மஞ்சள் சேர்த்து அரைத்து காலையில் வெறும் வயிற்றில் தொடர்ந்து ஒரு மாதம் சாப்பிட்டு வந்தால் அலர்ஜி தொடர்புடைய நோய்கள் குணமாகும். கறிவேப்பிலையில் விற்றமின் ஏ மிக அதிகமாக இருப்பதால் கண்பார்வைக்கு அது சிறந்ததாகும்.



*நன்றி - மித்திரன் வாரமலர்*

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது
நீற்றா புவனேஸ்
மறைக்கல்வி நிலையம், மன்னார்.

### பால் பாயாசம்



**தேவையான பொருட்கள்**

- சவ்வரிசி - 200 கிராம்
- ரின் பால் - 1 சிறிது
- சீனி - சுவைக்கேற்ப
- கஜு - தேவையான அளவு
- பிளம்ஸ் - தேவையான அளவு
- சேமியா - அளவாக
- ஏலக்காய்ப் பொடி - சிறிதளவு

**செய்முறை :**

சவ்வரிசியை வறுத்தெடுத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் அளவாகத் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைக்கவும். தண்ணீர் நன்கு கொதித்ததும் வறுத்த சவ்வரிசியைப் போட்டு அவிய விடவும். வறுத்த சவ்வரிசி நன்கு அவிந்ததும் ரின் பாலையும், சீனியையும் போட்டு நன்றாகக் காய்ச்சவும். பின் சேமியா, கஜு, பிளம்ஸ் இவைகளைப் போட்டு அவிய விடவும். பின் இவைகள் அவிந்ததும் ஏலக்காய்ப் பொடியைப் போட்டு இறக்கவும். அடுத்து அனைவரிற்கும் சுவையாகப் பரிமாற பாயாசம் றெடி.

# பெரியப்பா பதில்கள்







கேள்வி : பெரியப்பா, எல்லாருடைய அறிவுரைகளையும் கேட்பதால் எதையுமே செய்ய முடியவில்லையே? நான் நினைத்த மாதிரி செயலாற்றி முன்னேற இந்த அறிவுரைகளே சிலவேளை தடையாக இருக்கிறதே?

*- தயாளசீலன், செட்டிகுளம் -*

பதில் : உண்மைதான்! இந்தக் கதையைக் கேளுங்கள். மூன்று தவளைகள் உயரமான ஒரு பாறைமேலே ஏற முயற்சி செய்தன. கீழே இருந்த மற்றத் தவளைகள் எல்லாம், "போற வழி வழுக்கும், பாம்பு இருக்கும், நிட்சயம் உச்சிக்குப் போக முடியாது" என்று கத்தின. இதையெல்லாம் கேட்டுப் பயந்துபோன இரண்டு தவளைகள் பாதிவழியிலேயே கீழே விழுந்துவிட்டன. மேலே போன ஒரு தவளையிடம் மற்றத் தவளைகள் ஆச்சரியமாக "நீ மட்டும் எப்படி மேலே ஏறினாய்?" என்று கேட்டன. அந்தத் தவளை பதிலே சொல்லவில்லை. ஏனென்றால் அந்தத் தவளைக்கு காதே கேட்காது.

- சிலவேளை நாமும் செவிட்டுத் தவளையாகத்தான் இருக்க வேண்டும். சிலர் பேசும்போது நாம் செவிடாகி விடவேண்டும். அப்போதுதான் நாம் உயரங்களைத் தொடமுடியும்.

கேள்வி : அண்மையில் இரசித்த குடும்ப ஜோக்?

*- அன்ரனி பாலா, அடம்பன் -*

பதில் :



ஒருவர் : எனக்கும் என் மனைவிக்கும் கருத்து வேறுபாடு வருவதேயில்லை.
மற்றவர் : அப்படியா...?
முன்னையவர் : என் கருத்தைச் சொன்னால்தானே வேறுபாடு வருவதற்கு.

கேள்வி : இன்றைய கல்வி முறை குறித்து தங்களின் கருத்து என்ன?

*- மேரி சாளினி, பேசாலை*

பதில்: வாழ்வை எதிர்கொள்வதற்கான துணிச்சலை நம் கல்விமுறை கற்றுத்தருவதில்லை. மாறாக கல்வியின் வழியாக பொற்காலம் உருவாகிவிடும் என்ற பொய்யான கற்பிதம் ஒன்றையே உருவாக்குகிறது. மறுபுறத்தில் சொல்வதானால் நமது கல்விமுறை குதிரை ஓட நேரடியாகக் கற்றுத்தரும் முறை அல்ல. புத்தகம் படித்துவிட்டு குதிரை ஓட்டும் முறையே.

கேள்வி : வேலை தேடிக் களைத்துப் போனேன். தலையைப் பியத்துக் கொள்ளலாம்போல் இருக்கிறது?

*- மணிமாறன், வவுனியா -*



பதில் : வேலை தேடுவது என்பது வெளியே தெரியாத ஒரு வலி. தவிர்க்க இயலாமல் அந்த வலியை ஒவ்வொருவரும் ஏதாவதொரு வயதில் எதிர்கொள்கிறார்கள். சாப்பிடும் கோப்பையில் இருந்து முகம் பார்க்கும் கண்ணாடி, சீப்பு, சோப்பு என்று ஒவ்வொன்றுமே "ஏன் வீட்டில் சும்மா இருக்கிறாய்?" என்று கேட்பது போலத் தோன்றும்.

பள்ளிக்கூட நாட்களில் "என்னத்திற்குப் படிக்கிறாய்?" என்று கேட்கும்போது டொக்ரர், என்ஜினியர், பாதர் என்று சொல்லிக் கைதட்டு வாங்கியபோது வேலை கிடைப்பது அவ்வளவு எளிது என்றே தோன்றியது. ஆனால் படிப்பு முடியத் துவங்கிய நாளிலிருந்து, வேலை குறித்த அத்தனை சாத்தியங்களும் ஒவ்வொன்றாக உதிரத் தொடங்கி, ஏதாவது ஒரு வேலை கிடைத்தால் போதும் என்றாகிவிடுகிறது.

கேள்வி : பெரியப்பா, அதிகம் வயதானவர்கள் இன்னும் வாழ வேண்டும் என்று ஏன் ஆசைப்பட வேண்டும்?

*- மதிவதனி, மன்னார் -*

பதில் : வாழ்க்கையை வாழப்போகிற இளைஞனுக்கும், வாழ்ந்து முடித்த கிழவனுக்கும் உயிர்மீதான பயம் ஒரே அளவுதான். சாவின் விளிம்பில் நின்றபிறகும், பூமியில் விட்டுவந்த வேலைகளைப்பற்றி, உறவுகளைப் பற்றி விதம்விதமாய் புலம்புகிறார்கள்!

கேள்வி : சில ஆசிரியர்கள் படிப்பிப்பது மாணவர்களுக்கு விளங்குவதில்லையே?

*- மரிய வளன், முருங்கன்.*

பதில் : இது பறவாயில்லை... சில ஆசிரியர்கள் படிப்பிப்பது அவர்களுக்கே விளங்குவதில்லை. இதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

கேள்வி : கடவுள் நம்பிக்கை என்பது கட்டாயமா?

*- அவதானி, மட்டக்களப்பு*

பதில் : என்றோ நான் எழுதிய கவிதை உங்கள் கேள்விக்கு விடையாக அமையும் எனக் கருதுகின்றேன்.



"கடவுள் நமக்குள் இருந்தால்
காகிதமும் கப்பலாகி நம்மைச் சுமக்கும்
கடவுள் நம்மிடம் இல்லையானால்
கப்பலும் காகிதமாகி நாம் காணாமல் போவோம்.
மனிதனை நம்பினால் மாள்வது நிச்சயம்
இறைவனை நம்பினால் மீள்வது நிச்சயம்!

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 2ம் ஆண்டு நினைவு



மலர்வு 15 - 01 - 1920
உதிர்வு 21 - 08 - 2005

### திரு. அக்காஸ் லூயிஸ் குருஸ்
**(இளைப்பாறிய அதிபர், தாழ்வுபாடு)**

பட்டம், பதவி, புகழ் துச்சம் என மதித்து
எளிமை, தாழ்மை, செபத்தை அணிகலனாய்
அன்பும், இறைவிசுவாசமும், உண்மையும்
சொத்தாய் வையத்தில் நல்லதோர் மாதிரியாய்
வாழ்வாங்கு வாழ்ந்த அண்ணலே!
மண்ணகப் பணி முடித்து விண்ணகம் நீர் ஏகி
ஈராண்டு ஆகியதோ நம்ப முடியவில்லை.
அப்பா நித்தியத்தில் உம் ஆன்மா
சத்தியமாய் சாந்திபெற என்றும் செபிக்கிறோம்
உம் வழி, எம் பணி தொடர்கின்றோம்.

உம் நினைவில்: *அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரர், பூட்டர்*

இவரின் ஆன்ம சாந்திக்காக 21.08.2007 அன்று தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயத்தில் காலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## 7ம் ஆண்டு நினைவு



மலர்வு 09 - 04 - 1925
உதிர்வு 22 - 08 - 2000

### திருமதி. இன்னாசியாப்பிள்ளை மனுவேற்பிள்ளை

அம்மா! காலங்கள் மாறலாம், காற்றசைய மறக்கலாம், கடல் அலை வற்றலாம், எம் அன்பு ஒரு நாளும் மாறதம்மா. எம் அன்பு அம்மா! உங்கள் ஆன்மா சாந்தியடைய தினமும் இறைவனிடம் பிராத்திக்கின்றோம். ஆண்டுகள் ஏழு மறைந்தாலும், உங்களின் நினைவலைகள் எம் நெஞ்சங்களை விட்டகலாது.

இவரின் பிரிவால் துயருறும்:
*அன்பின் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், கங்காணிதீவு, நானாட்டான், மன்னார்*

## 3ம் ஆண்டு நினைவு



மலர்வு 04 - 05 - 1939
உதிர்வு 28 - 08 - 2004

### திரு. மரிசலீன் மரியதாசன்
தலைவர், மன். மறைமாவட்ட மரியாயின் சேனை கொமிசியம்
(இளைப்பாறிய தேர்தல் உத்தியோகத்தர் - நிர்வாக உத்தியோகத்தர். புனர்வாழ்வு செயலகம். கச்சேரி. மன்னார்)

இரக்கத்தின் ஊற்றாகிய இறைவா! மரியாளின் தொண்டனாக மரியாயின் சேனையில் ஊழியம் புரிந்து, மரித்த மரியதாஸ் என்னும் அடியாரை உம் அன்புச் சிறகினுள் சேர்த்தருளும். அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலங்களில் செய்த தவறுகளுக்கு மன்னிப்பளித்து, அவரை வான்வீட்டில் சேர்த்தருள வேண்டுமென்று இறைஞ்சுகின்றோம். ஆமென்.

பிரிவால் துயருறும், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்
அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 28.08.2007அன்று புனித செபஸ்ரியார் பேராலயத்தில் காலை 5.45 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 30 - 05 - 1988
உதிர்வு 21 - 09 - 2006

### ம. ஆன் அன்ரனற் நிலானி

*"ஆண்டவரே உம் கூடாரத்தில் அடைக்கலம் புகுந்துள்ளோம்"*

ஓராண்டு கடந்துமென்ன உன் நினைவு
என்றும் வற்றாது. உறவுடன் கலந்து
நாளும் பாச வலையில் தவிக்கின்றோம்.
பூக்களின் புன்னகை நீ
பூமியின் பொக்கிசம் நீ
கார் இருளில் வெள்ளி நிலாவும் - நீ
எம்மையெல்லாம் இருளில் தவிக்கவிட்டு
தேய்ந்து போனாயோ! உன் மதிவதனம்
எம்மைவிட்டு என்றும் அகலாது.

என்றும் உன் பிரிவில் வாடும்
*அப்பா, அம்மா, அண்ணா, உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.*
வட்டக்கண்டல், அளவக்கை.

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 02 - 09 - 1936
உதிர்வு 21 - 09 - 2006

### பி. செபமாலை கூஞ்ஞ
**(புலவர், தலைமன்னார் கிராமம்)**

நான் என் நாவினால் பாவம் செய்யாவண்ணம் என் நடைமுறைகளைக் காத்துக்கொள்வேன். பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் இது வாழ்க்கை அல்ல. தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்கும் பெரும் குணம் எங்கள் ஐயாவுக்கு உண்டு. வாழ்ந்த வாழ்வில் காலனின் கண்கள் பட்டு முதுமை எல்லை தொடராதே சென்று விட்டாய். ஊரில் புலவர் என்றழைக்க இனியோர் ஆளில்லை ஐயா. நாட்டிற்காய் நன் மக்கள் தந்து ஊர் நன்மைக்காய் உருகியவன் உறைந்து நிற்கிறாய் நீ. உருகி நிற்கின்றோம் நாம்.

இவரின் பிரிவால் துயருறும்:
*அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.*
*தகவல்: மருமகள் நிரோனா (கனடா)*

## 5ம் ஆண்டு நினைவு



மலர்வு 01 - 06 - 1933
உதிர்வு 08 - 09 - 2002

### அந்தோனி றிச்சாட் குலாஸ்
**[காணி வெளிக்கள போதனாசிரியர்]**
**- பேசாலை -**

*"இன்றே என்னுடன் வான் வீட்டில் இருப்பாய்"*
அன்னையாய் தந்தையாய் - அரவணைத்த
எம் தந்தையே - எம்மை விட்டு வெகுதூரம்
ஏனோ சென்று மறைந்து விட்டீர்.
ஆண்டுகள் ஐந்து ஆகிவிட்டாலும்
ஆதரவளிக்க ஒருவரின்றி ஏங்குகின்றோமையா.
தியாக சொரூபியாய் நீர் வாழ்ந்த வாழ்வை
இறைவனும் ஏற்று இன்ப சாந்தி அளிக்க
இமைப்பொழுதிலும் வேண்டுகிறோம் தந்தையே!

பிரிவால் துயருறும்: *பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்*
இவரின் ஆன்ம சாந்திக்காக பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் 07.09.2007 அன்று காலை 6.00 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

## 2ம் மாத நினைவு



மலர்வு 20 - 10 - 1928
உதிர்வு 30 - 06 - 2007

### சிமியோன் மொத்தம் அந்தோனியா (இராசம்மா)
**(பிச்சகுளம், முருங்கன்)**

*"உயிரோடு இருக்கும் போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்"* (யோ.11:26)

மாதங்கள் பல கழிந்தாலும்
உம் பாசம் எம்மை
நிழல்போல என்றும் தொடர்கின்றது.
உமது ஆன்மா ஆண்டவன் அடியினில்
அமைதி பெற நிதம் இறைவனை
இறைஞ்சுகின்றோம்

*இவரின் பிரிவால் துயருறும்:*
*மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 5ம் ஆண்டு நினைவு



மலர்வு 05 - 01 - 1959
உதிர்வு 27 - 09 - 2002

### யே. மேரி பேணடேற் பீரிஸ்
**(ராகினி) (வங்காலை-5)**

நெய்தலில் பிறந்து மருதத்தில் மணமுடித்து
மங்காப் புகழுடன் ஐந்து முத்துக்களை ஈன்று
இன்பத்தின் எல்லைக்கு
எமை இட்டுச் சென்றவளே
ஏங்கித் தவிக்கின்றோம்.
ஏனம்மா எமைவிட்டுப் பிரிந்து சென்றாய்?
வாடி வதங்கினோம் உம் வதனம் காணாமல்
களங்கமில்லா உள்ளம் கொண்டவளே!
உம் கருணை முகத்தை மறவோம் அம்மா.
ஊரும் உறவும், உற்றமும், சுற்றமும்
உம்பிரிவில் உறைந்து போனதே!
உங்கள் ஆன்மா சாந்தி அடைய
சிரம் தாழ்த்துகிறோம்.

*பிரிவால் துயருறும்:*
*கணவன், பிள்ளைகள்*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 64

## எஸ்ரா : 1 - 10

உங்கள் விடைகளை 10. 09. 2007க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | | | 03 | ✱ | | | | | 04 |
| | 05 | | | | 06 | | | | ✱ | |
| | | | | 07 | ✱ | | | 08 | | |
| 09 | | | | | | 10 | | | | 11 |
| | | 12 | 13 | | | | | | | |
| | | | | 14 | | | | | 15 | |
| | 16 | | | | | | | | | |
| | ✱ | 17 | | | | ✱ | 18 | | | |
| | | | | | 19 | | | 20 | | |
| 21 | | | | | | | | 22 | | 23 |

### இடமிருந்து வலம்

1. பாரசீக மன்னரான சைரசின் ............ மித்ரதாத்தின் கையில் அவற்றை ஒப்படைத்தார்.
5. அவர்கள் பேராற்றுக்கு ...................ப் பகுதிகளையெல்லாம் ஆட்சி செய்துள்ளனர்.
6. ...................... இஸ்ரயேலுக்கு இன்னும் நம்பிக்கை உண்டு.
9. ஏழாவது மாதத்தில் முதல் நாளிலிருந்து ஆண்டவருக்கு ........................ செலுத்தத் தொடங்கினார்கள்.
10. மேதிய ......................ல் இருந்த எக்பத்தானா அரண்மனையில் ஏட்டுச்சுருள் ஒன்று அகப்பட்டது.
16. அவர்களைக் கசிப்பியாவிலிருந்த ................. தலைவரான இத்தோவிடம் அனுப்பிவைத்தேன்.
17. அவருடைய கடவுளான ஆண்டவரின் அருட்...................... அவரோடு இருந்ததால் அவருக்குத் தேவையான அனைத்தையும் மன்னர் அவருக்குக் கொடுத்தார்.
21. யூதாவிலும், எருசலேமிலும் வாழ்ந்த யூதருக்கு இஸ்ரயேலின் கடவுள் பெயரால் ..................... உரைத்தனர்.

### மேலிருந்து கீழ்

1. அவர்கள் ஒவ்வொருவரும் தம் வசதிக்கேற்ப ஐநூறு கிலோ கிராம் ............. மூவாயிரத்து நானூற்று இருபத்தைந்து கிலோகிராம் வெள்ளியும், நூறு குருத்துவ ஆடைகளும் கொடுத்தார்கள்.
4. கடவுளது இந்த இல்லத்தின் மற்ற ஊழியர் எவர்மீதும் திறையோ, ......................... தீர்வையோ சுமத்துவது முறையன்று.
9. எங்களுள், சிலரை ................க விட்டுவைத்தீர்.
10. யூதா மாநிலத்திலுள்ள ...................... கடவுளின் கோவிலுக்குச் சென்றிருந்தோம்.
11. உமக்கும் சகோதரர்களுக்கும் நலமெனப் பட்டதை உங்கள் கடவுளின் ..........................ப்படி செய்யும்.
12. அவர் நல்லவர், ஏனெனில் அவர் .....................ம் இஸ்ரயேல் மீது என்றென்றும் உள்ளது.
13. தங்கள் குற்றநீக்கப் ........................ ஒரு கிடாயைச் செலுத்தினர். (2வது எழுத்து 1வது எழுத்துக்குமேலே உள்ளது)
15. அப்போது செயல்தியேல் மகன் செருபாபேலும், யோசதாக்கின் மகன் ஏசுவாவும் .......................... எருசலேமிலுள்ள கடவுளின் கோவிலை மீண்டும் கட்டியெழுப்பத் தொடங்கினர்.

### வலமிருந்து இடம்

2. வேற்றுநாட்டு மக்களால் அச்சம் ......................... பலிபீடத்தை அதற்குரிய இடத்திலே அமைத்தனர்.
3. அரச அலுவலகர்களுக்குக் ............................க் கொடுத்து அவர்களின் திட்டங்களைச் சீர்குலைக்கத் தூண்டினர்.
4. எஸ்ரா இஸ்ரயேலின் கடவுளான ஆண்டவர் மோசேக்கு அளித்திருந்த திருச்சட்டநூலில் ...................... (3வது எழுத்து இறுதியாக உள்ளது)
7. மக்கள் அனைவரும் மேற்குறிப்பிட்டதன் காரணமாகவும் .......................... காரணமாகவும் கடவுளது இல்லத்தின் வளாகத்தில் நடுங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தனர்.
8. கடவுளின் ..................க் கட்டும் பணியைத் தடைசெய்யாதிருங்கள்.
19. ஆகவே இப்பொழுது மன்னர் விரும்பினால் பாபிலோனில் உள்ள தமது .......................ல் தேடிப் பார்க்கட்டும்.
20. ஆனால் தற்பொழுது சிறிது காலமாய் எம் கடவுளும், ஆண்டவருமாகிய உமது ..................... துலங்கியுள்ளது.
22. இதனால் குருக்கள் விண்ணகக் கடவுளுக்கு ......................ப் பலிகள் செலுத்தி மன்னரும் அவர்தம் மைந்தரும் நீடூழி வாழ வேண்டுமென மன்றாடுவார்களாக.

### கீழிருந்து மேல்

10. காலையிலும் .................................. ஆண்டவருக்கு எரிபலிகள் ஒப்புக்கொடுத்தனர்.
14. உமது வார்த்தையின்படியே ....................... செய்வோம். (இறுதி எழுத்து 1வது எழுத்துக்குக்கீழே உள்ளது)
15. கடவுளே உம்மை நோக்கி என் .........................த் திருப்ப வெட்கி நாணுகிறேன்.
16. அவர்கள் ..................... ஏழாம் ஆட்சியாண்டில் ஐந்தாம் திங்கள் எருசலேமை அடைந்தார்கள்.
18. யூதர்களின் ஆளுநரும், யூதர்களின் ................... களும் கடவுளின் கோவிலை அது முன்பு இருந்த இடத்தில் மீண்டும் எழுப்பட்டும்.
19. அதில் தொன்றுதொட்டு ....................... எழுந்துள்ளன.
20. "இக்கட்டடத்தைக் ........................ யார் யார்?" என்று வினவினர்.
23. மேலும் அவர்கள் மன்னரின் ..................... மடல்களைச் சிற்றரசர்களிடமும், யூப்பிரத்தீசின் அக்கரையிலிருந்த ஆளுநர்களிடமும் கொடுத்தனர்.

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவில் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப் பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா**
உள்நாடு - இலங்கை ரூபா 400
வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)

## நினைவுகளைப் பிரசுரிப்போர் கவனத்திற்கு

இறந்துபோன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், யூபிலி, மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக ரூபா 2000 அறவிடப்படும். இவற்றைக் கலர் பக்கத்தில் பிரசுரிப்பதாக இருந்தால் ரூபா 4000 அறவிடப்படும்.

இந்த நினைவுகள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

- மன்னா நிர்வாகம் -

## அனைத்துத் தொடர்புகளுக்கும்

The Editor,
MANNA
St. Joseph's Catechetical Centre,
St. Sebestian's Cathedral Street
Mannar, Sri Lanka.

பதிப்பாசிரியர். - மன்னா
புனித வளன் மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்ரியார் பேராலய வீதி
மன்னார்.

தொலைபேசி. இல. 023 - 2222377



## தேசிய மறைக்கல்வி நிலையத்தை

# புதிய இயக்குனர் பொறுப்பேற்பு

தேசிய கத்தோலிக்க மறைக்கல்வி, கல்வி, விவிலியப்பணி நடுநிலையத்தின் தேசிய இயக்குனராக கடந்த ஆறு வருடங்கள் பணியாற்றிய அருட்பணி. சிறில் எஸ். பெரேரா அவர்களின் பதவிக்காலம் நிறைவு பெற்றதையடுத்து அவர் அப்பதவியிலிருந்து ஓய்வுபெற்றார். இவர் கொழும்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர். புதிய இயக்குனராக அருட்பணி. நிக்கலஸ் சி லோ நியமனம் பெற்றார். இவர் சிலாப மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர். ஓய்வுபெறும் சிறில் அடிகளாருக்கான பிரியாவிடை நிகழ்வும், புதிதாகப் பணிப்பொறுப்பை ஏற்றிருக்கின்ற லோ அடிகளாருக்கான வரவேற்பு நிகழ்வும் சென்ற 12.07.2007 அன்று கொழும்பில் நடைபெற்ற மேற்படி ஆணைக்குழுக் கூட்டத்தின்போது நடைபெற்றது. கடந்த ஆறு வருடங்களாக இத்தேசிய நிலையத்தின் இயக்குனராகப் பணியாற்றிய சிறில் பெரோ அடிகளார் அதிக அர்ப்பணிப்புடன் பணிபுரிந்தார். சென்ற இரு வருடங்களாக இவருடன் இணைந்து பணியாற்ற எனக்கு வாய்ப்புக் கிட்டியதால் இவரின் உயரிய குணங்களை அறிந்துகொள்ள முடிந்தது. இறை பக்தி மிக்கவர். இவரது உறவின் ஆழத்தை பிறருடனான இவரது உறவின் மூலம் காணக்கூடியதாக உள்ளது. மிகவும் மென்மையான, எளிமையான, பண்புகள் கொண்டவர். யாவருடனும் இனிமையாகவும் நட்பாகவும் பழகுபவர். தனது பணியை நன்கு திட்டமிட்டு நேர்த்தியாக, ஒழுங்காக உரிய காலத்தில் செய்து முடிப்பவர். மனித நேயம், மனிதத்துவம் கொண்டு செயலாற்றுபவர். தன் நலன் கருதாது பிறர் நலனையே முதன்மைப்படுத்தி பிறர் சௌகரியங்களையே கருத்திற் கொண்டு வாழ்பவர். சிங்களவர், தமிழர் என்ற பாரபட்சமின்றி அனைவரையும் சமமாக நடத்துபவர்.

சிங்கள மொழியில் நடைபெறும் அனைத்து விடயங்களும் தமிழிலும் நடைபெற வேண்டும் என்ற தாகம் கொண்டவர். தேசிய மறைக்கல்வி நிலையத்தினால் வெளியிடப்படும் திருமறை வழிகாட்டி மாணவர்களுக்கு, வளர்ந்தவர்களுக்கு என இரு வெளியீடுகளாக அச்சிடப்படுகிறது. நிதிச்சிக்கலைக் கருத்திற்கொண்டு இவற்றை ஒரே புத்தகமாக வெளியிடலாம் என நான் கருத்து தெரிவித்த போது "சிங்கள மொழியில் இரு வெளியீடுகளாக வருகிறது. ஆகவே தமிழிலும் அதுபோலவே வெளியிடப்பட வேண்டும். செலவானால் பறவாயில்லை" என உறுதியாகக் கூறி அவ்வாறே இவர் செயாலாற்றுவது இதற்கு ஓர் சிறந்த உதாரணமாகும்.

இத்தகைய உயரிய பண்புகள் நிறைந்த சிறில் அடிகளாரை இறைவன் மேலும் ஆசீர்வதித்து அவரது திராட்சைத் தோட்டத்திலே அடிகளார் ஆற்றப்போகும் புதிய பணிகளையும் செவ்வனே செய்ய வரம் அருளுமாறு வேண்டுவோம். அதேவேளை புதிய இயக்குனரும் உடல் உள நலம் பெற்று பொறுப்பேற்றுள்ள புதிய பணியைச் சிறப்பாக ஆற்ற தூய ஆவியின் வரம் கேட்டு எல்லாம் வல்ல இறைவனை மன்றாடுவோம்.

*அருட்சகோதரி ரஞ்சி போல்துரை சி.க*

# விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 62ல்

## சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
அருட்சகோதரி. பற்றீசியா
யாழ்ப்பாண வீதி,
புனித அந்தோனியார் ஆலயம்
றம்பாவ, அநுராதபுரம்.

***இரண்டாம் பரிசு:***
அ. பிவிஷன்,
முதலியார் குளம்,
செட்டிகுளம்.

***மூன்றாம் பரிசு:***
யே. மிலோசா,
முதலைகுத்தி,
உயிலங்குளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 99 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 92 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.60ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

# பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. அன்ரன் எக்ஸ்பெற்றா, சுவிஸ்.
2. ஞா. சர்மிளா லக்ஷி, சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.
3. அ. யஸ்மின் சறோன், ஆவணம், நானாட்டான்.
4. க. றேகன் அக்சலா, 8ம் வட்டாரம், பேசாலை.
5. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
6. சியாமளா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்.
7. திருமதி. ஜெ. சுமதி விமலன் குலாஸ், ஆனாள் நகர், வங்காலை.
8. திருமதி. நளா இன்பராஜ் லெம்பேட், வங்காலை - 02
9. அ. சுகிர்தா, தாழ்வுபாடு, மன்னார்.
10. சிறகுடைந்த இளம் சிட்டு, தோட்டவெளி, மன்னார்.
11. அருள்நாதன் வதனி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
12. யோ. அஜோனா, ஜேர்மனி.
13. எஸ். மேரி டிபோட்டா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
14. திருமதி. பொபிதா அன்புராஜ் லெம்பேட், வங்காலை - 02
15. பி. ஜே. சிந்துஜா, எழுத்தூர், மன்னார்.
16. பீ. ஒகஸ்ரினா, இறம்பைக்குளம், வவுனியா.
17. பி. நித்தியானந்தன் குரூஸ், 8ம் வட்டாரம், வங்காலை.
18. வ. கிருபா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு, மன்னார்.
19. அ. மேரி நிலோஜா, தோட்டவெளி, மன்னார்.
20. ச. செலஸ்ரீனா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
21. நோ. ஜெக ஜீவன் றோச், புனித லூசியா ம.வி, பள்ளிமுனை.
22. எஸ். என். கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதிமன்றம், மன்னார்.
23. என். ஜீன் போள் குரூஸ், 8ம் வட்டாரம், வங்காலை.
24. அகுஸ்தீன் இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
25. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
26. அ. கவிதா, தாமோதரம்பிள்ளை வீதி. தாழ்வுபாடு, மன்னார்.
27. சூ. அருள்ராசா, கீரி, மன்னார்.
28. அ. கவினா, புனித சவேரியார் பெண்கள் தேசிய பா. மன்னார்.
29. ஜெ. சால்ஸ் சேமின், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
30. திருமதி. பி. வி. சி. பேரின்பநாயகம், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
31. பூபதி தாமோதரம்பிள்ளை, தபால்கந்தோர் வீதி, மன்னார்.
32. ச. நித்தியா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
33. திருமதி. தே. கிளாறா ஜீவதி லெம்பேட், வங்காலை.
34. ஏ. மேரி, வேதசாட்சி கோவில், தோட்டவெளி, மன்னார்.
35. பி. ஜே. அஜந்தன், எழுத்தூர், மன்னார்.
36. எம். ஆன் டர்சி, சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.
37. ப. சிறோமி, குடும்பப்பணி நிலையம், மன்னார்.
38. வெ. சசிகலா, எமில்நகர், மன்னார்.
39. திருமதி. ஜெ. தீபா, பனங்கட்டுக்கொட்டு, மன்னார்.
40. சு. தேவி, எழுத்தூர், மன்னார்.
41. அ. அலெக்ஸ் லவுசன், முதலியார்குளம், செட்டிகுளம்.
42. பி. பியூட்டஸ் பறுனாந்து, முள்ளிக்குளம்.
43. வே. இந்திரகலா, சொர்ணபுரி, அடம்பன்.
44. கே. திலகா, தலைமன்னார் ஸ்ரேசன்.
45. திருமதி. றொ. டொமிற்றா குரூஸ், தலைமன்னார் கிராமம்.
46. சி. அல்பன் ராஜ், மன்னார்.
47. சி. சௌமியா குரூஸ், தலைமன்னார்.
48. றெ. கவிதா, தோட்டவெளி, மன்னார்.
49. திருமதி. டக்ஷினி, கற்கடந்தகுளம், முருங்கன்.
50. டொறின், பிரதேசசெயலகம், மன்னார்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 62 இற்கான சரியான விடை

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ[1] | ட் | சி | யை | ❋ | லா | கு | க் | வா | றை | இ[2] |
| ண் | ❋ | செ[3] | வே | ன் | ள் | வா[4] | ளு | க் | கு | ந் |
| ட | அ[5] | ர | ண் | பா | னி | ளு | ல் | டி | ட் | நா[6] |
| வ | ம[7] | தி | யே | ப் | ய | க் | கை | ள | வீ[8] | ட் |
| ரி | வ | ட | ண் | ரை | ஆ[9] | ற் | ற | லு | ம் | டி |
| ன் | பே[10] | ப் | ரை | உ[11] | டை | மை | க | ள் | ❋ | ல் |
| ம் | றொ | க | ல் | ள் | க | அ[12] | க் | சே[13] | ர் | தை |
| லா | லி | மை | வ[14] | ள | ❋ | மை | ழ | மி | ப | த் |
| ய | யோ[15] | ணை | ர | ம் | ளை | தி | மு[16] | ப் | ற் | ல |
| ழை | ர் | ஆ[17] | வோ | ளி | ள் | த[18] | ❋ | பு | நி[19] | ல் |
| நு[20] | ழை | யு | ம் | ❋ | கொ[21] | யை | டை | ப | ப் | இ[22] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.63ற்கான முடிவுகளை 2007ம் ஆண்டு செப்ரெம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

மன்னா

# மருத்திருவிழா நிகழ்வுகளின் நிழல்கள்












## மன்னா

**உங்கள் வாசற் படியைத் தட்டுகிறது!**

*மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை*

**மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்**



## முருங்கன்

### தோன் பொஸ்கோ தொழிற்பயிற்சி நிலையம்


க.பொ.த உயர்தரப் பரீட்சையை நிறைவு செய்த மாணவ, மாணவிகளுக்கான கணினிப் பயிற்சி நெறி தொன் பொஸ்கோ தொழிற்பயிற்சி நிலையத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவத்தை எமது தொழிற்பயிற்சி நிலைய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 31.08.2007

கற்கை நெறியின் எல்லை ஒரு வருடகாலம்

**கற்பிக்கப்படும் பாடங்கள்:**

* Computer Fundamentals
* Microsoft Office
* Microsoft DOS
* Web Design HIML
* Adobe photoshop CS2
* Auto Cad 2006
* MX – Flash
* Internet & E-mail
* English
* Typing
* Video Editing
* Hardware




## இளம் நங்கையர்களே...!

### நல்லாயன் கன்னியர் சபை உங்களை அழைக்கிறது!

நல்லாயன் சபை ஸ்தாபகியின் வழியில் அறப்பணியாற்றிட

### உங்களுக்கோர் அன்பு அழைப்புயூ



நல்லாயன் கன்னியர் சபையின் ஸ்தாபகி புனித மேரி யுப்பிரேசியா அவர்கள் பிரான்ஸ் நாட்டிலுள்ள நோர் மூட்டி என்ற சிறிய கிராமத்தில் அன்னாள் பெலற்றியர் தம்பதிகளுக்கு கடைசி மகளாக 1796ம் ஆண்டு ஆடித்திங்கள் 31ம் திகதி பிறந்தார். இவருடைய திருமுழுக்கின் நாமம் றோஸ் வேர்ஜினி என்பதாகும். தளராத விசுவாசம் கொண்ட இவருடைய பெற்றோர்களிடம் இருந்து நற்செய்தி மதிப்பீடுகளையும், விசுவாச வாழ்வின் வழிகளையும், அனைத்து மக்களையும் தனது சகோதர சகோதரிகளாக ஏற்று வாழும் முறையையும் கற்றுக்கொண்டார்.

றோஸ் வேர்ஜினியின் துள்ளித்திரியும் பள்ளிப் பருவம் ஏர்சலைன் கன்னியர்களால் பதினெட்டு வயது வரை வழிநடத்தப்பட்டது. பிறர் மட்டில் இரக்கம், கருணை காட்டுவது றோஸ் வேர்ஜினியின் முக்கிய புண்ணியங்களாக இருந்தன. பள்ளிப்பருவத்தில் இருந்தே அஞ்சா நெஞ்சம் படைத்தவராகவும், புத்திக்கூர்மை உடையவராகவும் காணப்பட்டார்.

ஆன்மாக்களை மீட்பது தனது பணியென உணர்ந்த றோஸ் வேர்ஜினி பதினெட்டாவது வயதில் 1814ம் ஆண்டில் அன்புக் கன்னியர் மடத்தில் சேவைக்கெனத் தன்னையும் அர்ப்பணித்து மேரி யுப்பிரேசியா என்ற பெயரையும் பெற்றுக்கொண்டார். ஆன்ம இரட்சணிய ஆவலாக நான்காவது வாக்குறுதியையும் கொடுத்தார். இவர் தனது இருபத்தொன்பதாவது வயதில் சபையின் தலைவியாகி பல புதிய துறவற இல்லங்களைக் கட்டி எழுப்பி 'அன்பு நாயகியின் நல்லாயன் இல்லம்' என்ற புதிய பெயரையும் சேர்த்துக்கொண்டார். 1835ம் ஆண்டு தலைமைப் பீடத்தை ஏற்படுத்தி முழு உலகிலும் ஆன்ம இரட்சணிய வேலையைத் தொடங்கினார். சமுதாயத்தில் கைவிடப்பட்ட, ஒதுக்கபட்ட, நிந்திக்கப்பட்ட, வழி தவறிய இளம் யுவதிகளை நல்வழிப்படுத்தலே நல்லாயன் சகோதரிகளின் முதன்மையும் முக்கியமுமான பணியாகும்.

எனவே அவரின் சிறந்த சேவையினை ஆற்ற இளம் யுவதிகளை நல்லாயன் சபையில் இணைந்துகொள்ளும்படி அழைக்கின்றோம்.

**தொடர்புகொள்ள:** நல்லாயன் சகோதரிகள், இல.375, ஹொரவப் பொத்தான வீதி, இறம்பைக்குளம், வவுனியா.

## வேண்டுதல் கேட்கப்பட்டதற்காக நன்றி

புனித அந்தோனியாரின் வழியாக கேட்ட வேண்டுதல் நிறைவேறியதற்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். இவ் அறிவித்தலை கண்ணுறும் யாவரும் இறைவனின் இரக்கத்தைப் புகழ்ந்து எம்மோடு இணைந்து நன்றி கூறும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சூசையா அந்தோனி குடும்பம்,

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784/1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது